4/3.87

# செயற்கை ரேயான்

865

1950

V211
N50
105841

# செயற்கைநலம்

44387

OFFICE OF THE REGISTRAR … MADRAS
JUL 1950



V211
N50
105841

…ழக வெளியீடு

கழக வெளியீடு: ருசக

# செயற்கை நலம்

## (தமிழ் நாடு)

இந்து அறநிலையப் பாதுகாவற் கழகத்தின்
ஆணையாளராயிருந்த
இராவ்பகதூர்
சி. எம். இராமச்சந்திரன் செட்டியாரவர்கள் பி.ஏ., பி.எல்.
இயற்றியது.

:: திருநெல்வேலித் தென்னிந்திய ::
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி :: சென்னை 1.

First Edition: May, 1950.

M. I. P. PROJECT
Microfilmed.

V&11
N50

[All Rights Reserved]

*Published by:*

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD., 1/140, BROADWAY, :: MADRAS, 1.

*Head Office:*

24, EAST CAR STREET, THIRUNELVELI.

TAMIL NADU ARCHIVES LIBRARY
No. 105841

அப்பர் அச்சகம், 2/140, பிராட்வே, சென்னை 1.

44387.

## பதிப்புரை

'செயற்கை நலம்' இயற்கை வளமாகிய நிலம் நீர் மேடு பள்ளம் காடு மலை கடல் முதலியவற்றை ஆங்காங்கு வாழும் மக்கள் ஆடவர் கைவன்மையால் செயற்கைப் படுத்தி நாடு நகரம் பட்டினம் கோட்டை அகழி அரண் மனை குடியிருப்பு யாறு கால்வாய் விளைநிலம் அணைக்கட்டு கோவில் கோபுரம் முதலிய பலவாக உருவாக்கி நலங்கண்டு நல்வாழ்வு வாழ்ந்து வருகின்றனர்.

அவ்வாழ்வு முறையைப்பற்றி இந்நூல் மிகத் தெளிவாக எடுத்துக் கூறுகின்றது. தென்றமிழ் நாட்டின்கண் தொன்றுதொட்டு முடியுடை மூவேந்தராக அரசுபுரிந்த சேர சோழ பாண்டியர் மரபினையும், பின்வந்து வல்லாட்சி புரிந்து நாட்டை வயப்படுத்திய ஒய்சளர் கர்நாடர் சாளுக்கியர் பல்லவர் விசயநகர நாயக்கர் பாளையப்பட்டுக் காரர் மகமதியர் பிரஞ்சுக்காரர் ஆங்கிலேயர் முதலியோர் வரலாற்றையும் அவ்வவர்கள் நடத்திய போர்முறை, அதனால் விளைந்த வெற்றி தோல்வி, நாட்டின் நலம் பொலம், மக்கள் அடைந்த இன்பதுன்பம் முதலிய பல வற்றையும் சுருக்கமாகவும் தெளிவாகவும் எடுத்துரைப்பது இந்நூல்.

இந்நூல், பயில்வார் உள்ளத்து தென்தமிழ்நாட்டுப் பண்டைய மக்களின் ஆண்மையும், நாட்டுப்பற்றும், கைத் திறனும் மிக விளக்கமாகவும் அழுத்தமாகவும் பதியச் செய்யும் என்பது உறுதி. அம்மக்களால் நாடெய்திய வளமும் செழிப்பும் வரையறை செய்யப்பெற்றுள்ளது.

பண்டையோர், இப்பொழுது கிடைக்கும் பொறி வசதிகள் ஏதும் இல்லாத அப்பழையகாலத்தில் பொறித்

துறை வல்லாரும் வியக்கும்படி பல அரும்பெரும் செயல் களைச் செய்து முடித்துள்ளார்கள். அவர்கள் அவ்வேலை களை எப்படிச் செய்துமுடித்தார்கள் என்று எண்ணவும் அரிதாக இருக்கின்றது. அவற்றுள் ஒன்று தஞ்சைமா நகரில் "முதலாம் இராசராசன் ஏழு ஆண்டுகளில் கட்டி முடித்த பெரிய கோயிலாகும். இதன் அளவு 793 × 397 அடி. விமானம் 216 அடி உயரம். 14 நிலை கொண்டது. அடிப் பகுதி 96 அடி சதுரம். சிகரத்தில் வட்டக்கலசம் 25½ அடிச் சதுரமுள்ள ஒரே கல்லில் அமைக்கப்பெற்றது." இது போன்று அரியவை பலவும் கண்டு வியக்க வழிசெய்வது இந்நூலாகும்.

மண்ணாலாகிய கோட்டைகளும் பலவுள. அவற்றுள் வெள்ளையரையும் வெருக்கொளச் செய்த பாஞ்சாலங்குறிச் சிக்கோட்டை சிறந்தது. இயற்கை மலை உச்சியில் சூழவுள்ள மலைகளை இணைத்து இடையிடையே கருங்கல் மதிலெழுப்பிக் கட்டப்பட்டுள்ள கோட்டைகளும் பல. அவற்றுள் சிறந்தன வேலூர்க்கோட்டை, செஞ்சிக் கோட்டை என்பன. நிலமட்டத்திலிருந்து செங்கல் முதலியவற்றால் கட்டப்பட்டு அமைந்த கோட்டைகளும் பல. திருக்கோயில் சுற்றுமதில்களே கோட்டையாக அமைந்து போர்க்காலங்களில் படைகளுக்கு அரணாக நின்று அசையா ஊக்கமும் வென்றியும் புகழும் கொடுத் தவையும் பல. அவற்றுள் திருவரங்கமும் திருவண்ணா மலையும் சிறந்தன.

ஒவ்வொரு நாடும் ஒவ்வொன்றில் சிறப்புற்று விளங் கும். நம் தென்தமிழ்நாடு திருக்கோவில் அமைப்பிலும் வளர்ச்சியிலும் சிறப்புற்று விளங்குகின்றது. இவ்வுண்மை யைப் பிறநாடுகளுடன் ஒப்பிட்டுக் காலவரையறை யுடன் விளக்குவது இந்நூல். சுருங்கச்சொல்லின் இந்நூல்

தென்னாட்டு வரலாற்றைக் காலவரையறையுடன் கல்வெட்டு முதலிய சான்றுகள் காட்டி விளக்குவதில் தலைசிறந்ததாகும்.

இதனை எழுதியுதவிய ஆசிரியர் கோவை இராவ்பகதூர் திரு. சி. எம். இராமச்சந்திரன் செட்டியார், பி.ஏ., பி.எல். அவர்களாவர். அவர்கள் கடலின்கண்முத்து, கோயிற்பூனை, இதுவோ எங்கள் கோவை, சிறுகதைத்திரள் முதலிய பலநூல் ஆசிரியராவார்கள். இந்நூல் வரலாறு ஆயும் ஆசிரியர்க்கும் மாணுக்கர்களுக்கும் பெருமக்களுக்கும் பெருந்துணை செய்யும் என்பது உறுதி.

இதனை ஆசிரியரும் மாணுக்கரும் பொதுமக்களும் வாங்கிக் கற்று வரலாற்றுண்மை யுணர்ந்து பயன் எய்துவார்களாக.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

# பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| **1.** | **தோற்றுவாய்** | | |
| க. | தமிழ்நாட்டுப் பெருமை | ... | 1 |
| உ. | பிறர்பால் சிறுமை | ... | 2 |
| ங. | யாது பெருமை | ... | 3 |
| ச. | யாது சிறுமை | ... | 4 |
| ரு. | மூதாட்டியின் நன்மொழி | ... | 5 |
| சு. | தமிழ் அன்னையின் விடை | ... | 7 |
| **2.** | **தமிழ்நாட்டின் பரப்பும் நகரமைப்பும்** | | |
| க. | தமிழ்நாட்டுப் பரப்பு | ... | 8 |
| உ. | பண்டை ஆட்சிப் பிரிவினை | ... | 9 |
| ங. | தற்காலப் பிரிவினை | ... | 12 |
| ச. | பிரிவினை அமைப்பு | ... | 13 |
| ரு. | பண்டைய ஊர் அமைப்பு | ... | 14 |
| சு. | தற்கால ஊர் அமைப்பு | ... | 16 |
| எ. | ஊரின் அழகு | ... | 18 |
| அ. | நகர அமைப்பு | ... | 19 |
| கூ. | பூம்புகார் | ... | 21 |
| க0. | கூடல் | ... | 23 |
| கக. | காஞ்சி | ... | 25 |
| கஉ. | திருவரங்கம் | ... | 27 |
| கங. | ஏனைய நகர்கள் | ... | 28 |
| **3.** | **கோட்டைகள்** | ... | 30 |
| க. | சங்ககாலக் கோட்டைகள் | ... | 31 |
| உ. | தென்னாட்டுக் கோட்டைகள் (பொது வரலாறு) | | 33 |
| ங. | ,, (சிறப்பு வரலாறு) | | 34 |
| ச. | தொண்டை நாடு | ... | 37 |
| ரு. | வேலூர்க் கோட்டை | ... | 38 |
| சு. | ஆர்க்காடு | ... | 41 |

| | | | பக்கம் |
|---|---|---|---|
| எ. | சாத்துக்குடிக் கோட்டை | ... | 43 |
| அ. | செங்கற்பட்டுக் கோட்டைகள் | ... | 44 |
| கூ. | செஞ்சிக் கோட்டை | ... | 45 |
| க0. | சோழநாட்டுக் கோட்டைகள் | ... | 48 |
| கக. | தஞ்சைக் கோட்டைகள் | ... | 49 |
| கஉ. | வல்லத்துக் கோட்டை | ... | 51 |
| கங. | திருச்சிராப்பள்ளி மலைக்கோட்டை | ... | 52 |
| கச. | பாண்டியநாட்டுக் கோட்டைகள் | ... | 53 |
| கரு. | திருமெய்யம் | ... | 55 |
| கசு. | திண்டுக்கல் | ... | 56 |
| கஎ. | பாளையங் கோட்டை | ... | 57 |
| கஅ. | பாஞ்சாலங்குறிச்சி | ... | 58 |
| ககூ. | கொங்கு நாட்டுக் கோட்டைகள் | ... | 59 |
| உ0. | சத்தியமங்கலக் கோட்டை | ... | 61 |
| உக. | கோயமுத்தூர்க் கோட்டை | ... | 62 |
| உஉ. | சங்ககிரி துர்க்கம் | ... | 64 |
| உங. | தருமபுரிக் கோட்டை | ... | 65 |
| உச. | நாமக்கல் கோட்டை | ... | 66 |
| உரு. | ஏனைய கோட்டைகள் | ... | 67 |

**4. சமய நிலையங்கள்** ...

| | | | |
|---|---|---|---|
| க. | சமய நிலையங்கள் | ... | 69 |
| உ. | நிலையங்களின் வளர்ச்சி | ... | 70 |
| ங. | ஆலய அமைப்பின் பொருள் | ... | 72 |
| ச. | கோயில் அமைப்பு வகைகள் | ... | 73 |
| ரு. | விமானம் | ... | 75 |
| சு. | மண்டபங்கள் | ... | 76 |
| எ. | கோபுரங்கள் | ... | 80 |
| அ. | மதில்கள் | ... | 81 |
| கூ. | சிற்பங்கள் | ... | 82 |
| க0. | ஓவியம் | ... | 84 |
| கக. | படிமங்கள் | ... | ,, |

OFFICE OF THE ... MADRAS 20 JUL 1950

| | | | பக்கம் |
|---|---|---|---|
| கஉ. | தேரும் வாகனமும் | ... | 85 |
| கங. | நந்தவனம் | ... | 87 |
| கச. | தீர்த்தங்கள் திருக்குளங்கள் முதலியன | ... | 88 |
| கரு. | கலையுணர்ச்சி | ... | 89 |
| **5.** | **நீர் நிலைகள்** | ... | 90 |
| க. | இயற்கை வளங்கள் | ... | ,, |
| | 1. மலைகள் | ... | 91 |
| | 2. ஆறுகள் | ... | ,, |
| | 3. ஏரிகள் | ... | 92 |
| | 4. குளம் குட்டைகள் | ... | ,, |
| உ. | அணைக்கட்டுக்கள் | ... | ,, |
| ங. | வாய்க்கால் | ... | 95 |
| ச. | ஏரி | ... | 96 |
| ரு. | குளம், குட்டை, கிணறுகள் | ... | 97 |
| சு. | துறைகள் | ... | 100 |
| எ. | தோணிகள் முதலியன | ... | 101 |
| அ. | கப்பல் தொழிலும் நாவிகமும் | ... | 102 |
| கூ. | பாலங்கள் | ... | 104 |
| க0. | நீர்ப்போக்கிகள் | ... | 105 |
| **6.** | **கைத்தொழிலும் பிறவும்** | ... | 106 |
| க. | பஞ்சாலைகள் | ... | 107 |
| உ. | ஏனைய கைத்தொழிலகங்கள் | ... | 108 |
| ங. | அறிவுப் பணிகள் | ... | 109 |
| ச. | முடிப்புரை | ... | 110 |

# செயற்கை நலம்

## 1. தோற்றுவாய்

### தமிழ்நாட்டுப் பெருமை

இந்நிலவுலகில் எந்த நாடு இயற்கை வளங்களில் செழிப்புற்றிருக்கின்றதோ, அந்த நாடு பெருமை பெற்றது என்பது பொதுவான ஒரு நம்பிக்கை. கீழ் நாட்டார்கள் மட்டுமேயன்றி படிப்பிலும் நாகரிகத்திலும் சிறந்த மேல் நாட்டவர்களும் இதையே நம்பிப் பேசியும் எழுதியும் இருக்கின்றனர். பசுஞ் சோலைகள் அடர்ந்து நீரருவிகள் பாறைகளின்மேல் பாயும் குறிஞ்சி நிலமோ, அகன்ற ஆறுகளின் இருமருங்கிலும் பைஞ்சாலி படர்ந்த மருத நிலமோ, ஆனிரைகள் மேய்ந்து அளவில்லாத பால் சுரக்கப் பசும்புல் முளைக்கும் முல்லை நிலமோ, முத்துக்கள் எறியும் திரைகளின்மேல் நாவாய்கள் ஓடிச் சாக்குகளை இறக்கும் நெய்தல் நிலமோ, இந் நான்கு நிலச் செழிப்புக்களையும் ஒரு நாடு கொண்டிருந்தால் அதன் பெருமைக்கு அளவும் உண்டோ? இயற்கை வளங்களைக் கண்டு எம்போலியரின் கண்கள் மகிழ்ந்து போற்றுவதும், செம்மொழிப் புலவர்கள் அக் காட்சிகளைக் கண்டு நெஞ்சிலெழும் உணர்ச்சிகள் பொங்கி வழிய, அழகிய பாக்கள் பொழிவதும், கலைஞன் கண் கவரும் வனப்பினைக் கண்டு பல வண்ணங்களால் ஓவியமாகத் தீட்டுவதும், இவை போன்ற கலாச்சார சேவைகளுக்குமட்டுமோ அவைகள் பயன்படுகின்றன? மலைபடு பொருள்கள், நிலம்படு

பொருள்கள், கடல்படு பொருள்கள் முதலிய பல்வகைச் செல்வங்களும் அந் நிலங்களில் விளைவதனுல் மக்கள் இன்ப முறும் வாழ்க்கைக்கு அவைகள் போதிய பயன்களைத் தருகின்றன அன்ருே? இந்த வகையில் இயற்கை வளத்தால் செழிப்புற்ற நாடே பெருமை பெற்ற நாடு என்று கூறுவதிலும் அதைப் பொது மக்களும் படித்த அறிஞர்களும் நம்புவதிலும் என்ன ஐயம் இருக்கிறது? ஆகவே, ஒரு நாட்டின் பெருமை அதன் இயற்கை வளத்தின் செழிப்பால் கணிக்கப்படுகின்றது என விரைவில் கூறி விடலாம். இது நிற்க, மற்ருெருபுற வடிவத்தைச் சிறிது புரட்டிப் பார்ப்போம்.

பிறர்பால் சிறுமை

எட்டினமட்டும் அகன்ற மணல்வெளி, புல் பூண்டு காணுத நெடுந்தரை, பருக்கைக் கற்கள் முள்போல் காலில் உறுத்தும் நிலம், வெப்பத்தினுல் கள்ளியும் பொறி பறக்கும் கானல், நீர்வளமோ அருவியோ பச்சைப் பயிரோ இன்னதென்று அறியாப் பாறைக் குன்றுகள், ஆண்டு முழுதும் ஒரங்குல மழையும் காணுத பருவநிலை, வெப்பக் காற்றினுல் புழுதியெழும்ப வழிநடப்போர் மூச்சுத் திணறும் சுழற் காற்று, இவைகள் செறிந்த ஒரு நாட்டை நினைப்போம். ஒட்டகங்களில் ஏறிச் சென்று கூடாரங்களில் அடைக்கலம் புகுந்து ஈச்ச நிழலில் தங்கிச் செல்லும் வழக்கமுடைய மக்கள் வாழ்க்கை ஒன்றே அங்கு காணமுடியும். காலைக்கடன் முடிக்கப் புழுதி மண்ணும், இறைவனைத் தொழுது வாழ்த்தி அள்ளிவிட மணலும், நாவறண்டு செல்லுகையில் தாகம் தீர்க்க ஒட்டக வயிற்று நீரும்தான் கிடைக்கும். ஆனுல், அந்நாட்டின் வறுமையைப் பற்றிக் கூறவும் வேண்டா. மேலும், எங்கும் பனிக்கட்டி;

பொறுக்கமுடியாத குளிர்; உடல் முழுதும் குளிரைத் தணிக்கத் தோல் ஆடை; உண்ண நீர்க்குதிரை இறைச்சி; விளக்கு எரிக்க மீன் கொழுப்பு; நீர் ஆடல் என்பது அறியாத உடல்; மீன் வேட்டையன்றி வேறு தொழில் இல்லாத வாழ்க்கை; இந்தப் பனி நாட்டின் நிலையை நினைத்துக்கொள்வோம். இனி, இத்தனை முரண்பாடுகள் இல்லாத வேறுவகைச் சுரங்கள் பொருந்திய நாடுகளை நினைப்பூட்டுவோம். பத்தாயிரம் அடிகளுக்கு மீறின பீட பூமிகள்; வெறும் கரிசல் மண் நிறைந்த மட்ட நிலங்கள்; தாங்கொணுப் பகல் வெய்யிலும், இரவு குளிரும் கொண்ட பிரதேசங்கள்; இவைகளையும் காண்போம். இந்த நிலப் பான்மைகள் கொண்ட நாடுகள் எமது நெஞ்சின் முன் தோன்றிஞல், என்னே சிறுமை! என்று வாய் நோவப் புலம்புவோம். அப்படிப்பட்ட நிலங்களில் பிறந்தோ மில்லை என்று நம்மையே நாம் பெருமைப்படுத்திக்கொள் வோம். எது பெருமை? எது சிறுமை? சிறிது ஆராய் வோம்.

யாது பெருமை

சற்றுக் கவனிப்போம். நாடு செழிப்பான நாடுதான்; மலைவளம் கொண்ட குறிஞ்சி; ஆற்றுவளம் நிறைந்த மருதம்; ஆநிரை வளரும் முல்லை; வாணிபம் பெருகும் நெய்தல்; எல்லாம் விரவி இருக்கின்றன! மக்கள் யாதொரு வருத்தமுமின்றி அவற்றின் வளங்களைப் பெறுகிறுர்கள், அவைகளை நுகருகிறுர்கள்; இன்பம் துய்க்கிறுர்கள்; இது தான் பெருமையா? மற்ருெரு நாடு: குளிர் மிகுந்த வெளி; நிரம்பப் போர்வை வேண்டும்; வேளாண்மை மிகுதி யில்லை; கைத்தொழில் செய்து பொருள் ஈட்டிப் பிறரிடமிருந்து உணவு பெறவேண்டும். தன்மதி வன்மை

யால் பெரிய தொழிற்சாலேகளேக் கட்டுகிருர்கள்; மக்களுக் கெல்லாம் வேலே கிடைக்கிறது; அதனேக்கொண்டு வெளி நாட்டிலிருந்து பண்டங்களேப் பெற்று இன்பந் துய்க்கிருர் கள்! இது பெருமையா? இன்னுமொரு நாடு; எங்கும் மணல் வெளி; உணவும் இல்லே நீரும் இல்லே; எடாரி களுக்கு இடையில் சிற்சில செழிப்பான தோப்புகள்; அவைகளில் பேரீச்சை நட்டுப் பழங்களேப் பெருக்கி, தித் திப்பு வற்றல்களாக்கி வெளி நாடுகளுக்கு அனுப்பிப் பொருள் பெறுகிருர்கள்; குதிரைகளே நன்ருக வளர்த்திப் போட்டிப் பந்தயங்களில் வெற்றிபெறச் செய்து உயர்ந்த விலேக்கு விற்கிருர்கள். மெல்லிய உரோமங்களேத் திரட்டி அழகிய போர்வைகளேச் செய்து இரத்தினக் கம்பளங்கள் ஆக்கிப் பெரும்பொருள் ஈட்டுகிருர்கள்! இப்படி உடல் வளேந்து வேலே செய்து பாடுபட்டு இன்பந் துய்க்கும் எடாரி நிலம் பெருமை பெற்றதா? எந்த நாடு பெருமை பெற்றது? நன்கு ஆராயுங்கள்.

யாது சிறுமை

நம் செந்தமிழ் நாடு புலவர் போற்றும் நான்கு நன் னில வளங்களும் பெற்றது. இயற்கை அன்னே நிரம்பச் செழிப்புக்களே அளித்திருக்கிருள். நம் தமிழ் நாட்டைச் சுற்றிப் பிற நாடுகளிலும் செழிப்பே ஓங்கி இருக்கின்றது. வட நாட்டில் வங்கம், மகதம், கோசலம் முதலிய நாடுகள் பெரிய புனித ஆறுகளேக் கொண்டவை. மழைக்காலத்தில் வானம் தரும் மழை வெள்ளத்தாலும், கோடைக்காலத் தில் பனிமலே உருகிக் கசியும் வெள்ளத்தாலும், ஆறுகள் பெருகி நிரம்பப் பொன்போலும் நவ கூலங்கள் விளே கின்றன. நாட்டு மகன் உடல் வளேயாது விளேவு பொருள் களேப் பெற்று வயிறு நிரம்ப உண்ணுகிருன். தமிழ் நாட்

டிலோ காவிரி குடகிலிருந்து நன்னீர் வண்டலை ஏந்தியும் தஞ்சைத் திருச்சிக் களஞ்சியங்களில் கொட்டு கின்றது. இத்தனை செழிப்புள்ளதல்லவா நம் நாடு? இரண்டாம் உலகப்போருக்கு முந்தி நம் நாட்டு உணவுப் பொருள்களை நாம் உண்டு மீதப்படுத்தி வெளிநாடு களும் உண்ணக் கொடுப்போம் என்று பெருமையுடன் பேசினேம். எந்த இடத்தில் எந்தப் போர் விளையினும் நம் நாட்டிற்கு உணவுக் குறைவு இல்லை என்று பேரொலி முழக்கினேம். சண்டை தொடங்கினபோதிலும் மேல் நாடுகளில் உணவுப் பங்கீடு ஏற்பட்டபோதிலும் நாம் அதன் சிறுமை பெருது நன்கு இருந்தோம். எனினும் நமது நிலைமையை யாம் அறியவில்லை. பர்மாக் கலகம் நடந்தது. சியம் பகைவர் கைக்குள் சென்றது. அரிசி இறக்குமதி நின்றது. நமக்கு உண்ண அரிசி இல்லை. வருந்தினேம்! நிலமை அறிந்தோம்! உணவுப் பங்கீடு நாமும் கொண்டோம்! நாடு செழிப்பானதுதான்! போதுமான உணவுப் பொருள்களைப் பெற முயற்சிசெய்தோமில்லை. வசதி இருந்தும் வகை இல்லை. இயற்கை வளம் இருந்தும் செயற்கை நலம் பெறவில்லை. இது அல்லவோ சிறுமை? செழிப்பில்லாத நாட்டார் வருந்திப் பலன் பெறுகிறுர்கள். செழிப்புள்ள நாமோ உழைப்பு இன்றி வருந்துகிறோம். உணவு பெருகி அன்னம் பாலிக்கும் இந்நாட்டோம் உணவு குன்றி ஏழைகட்கு உணவு ஈயா நிலையில் இருக் கிறோம். யாது சிறுமை? அது எங்கே இருக்கின்றது?

மூதாட்டியின் நன்மொழி

இந்தக் கேள்விக்கு நம் ஔவை மூதாட்டி இருபது நூற்றாண்டுகளுக்கு முந்தியே நல்ல விடை இருத்தி இருக்கின்றார்: ஒரு நிலப்பரப்பில் உள்ள சமவெளியோ

மேட்டிடமோ, மலைவளமோ பள்ளத்தாக்கோ, ஆற்று ஓட்டமோ ஏரி நிலையோ, செழுமையோ வறட்சியோ, இவைகள் ஒருகாலும் அந்நாட்டிற்குப் பெருமை தருவ தில்லை. அந்நாட்டில் வாழும் குடிமக்களே பெருமை தருகிறார்கள். தற்கால நாகரிகம் அறியாத அக்காலத்தில் தமிழ் மக்கள் மிக்க செழிப்போடும் வீரத்தோடும் தன்னுரிமையோடும் ஆண்ட அந்நாளிலேயே ஔவைப் பிராட்டியார் அக்கருத்தைத் தெளிவுபட அழகாகச் சில சொற்களில் உரைத்திருக்கின்றார்.

"நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே!"

இதை விரிக்கின், 'நிலமே, நீ வாழி! நீ ஒன்றில் நாடே ஆகுக; ஒன்றில் காடே ஆகுக; ஒன்றில் பள்ளமே ஆகுக; ஒன்றில் மேடே ஆகுக! எவ்வாறாயினும் எவ்விடத்து நல்லவர் மக்கள் அவ்விடத்து நீயும் நல்லை, அல்லது நினக்கென ஓர் நலம் உடையை அல்லை, என்பதாம். இதற்கு உரையாசிரியர், 'தீய நிலமேயாயினும் நல்லோர் உறையின் நன்று எனவும், நல்ல நிலமே ஆயினும் தீயோர் உறையின் தீதெனவும், தன்னிடத்து வாழ்வோர் இயல் பல்லது தனக்கென ஓரியல்புடையதன்றென நிலத்தை இழித்துக் கூறியதுபோல் உலகத்தியற்கை கூறியவாறாயிற்று' என்று விரித்துரைக்கின்றார். செழிப்புள்ள செந்தமிழ் நாடு ஊக்கம் இன்மையால் உணவுப்பொருள் கிடையாது வருந்துகிறது. செழிப்பில்லாத யவன நாடுகள் ஊக்கம் பெறலால் உணவு அடைகின்றன. இதனையே ஔவைப்பிராட்டியார் அக்காலத்தில் கூறினார். அது இக்காலத்திலும் ஏற்ற விடையாக நிற்கின்றது.

## தமிழ் அன்னையின் விடை

பேரறிஞரான நம் தமிழ் மூதாட்டியார் சொன்ன விடை எல்லா நாடுகளுக்கும் எக்காலத்திற்கும் ஏற்றதொரு விடையாகும். நமது ஊக்கக்குறைவால் நமது நாடு தற்போது அடைந்திருக்கும் தாழ்ச்சியில் அந்த விடை நமக்குத் தற்போது பொருத்தமாக இருக்கிறது. ஆனால், தமிழ் அன்னை தன் நாட்டை எப்போதும் அந்த நிலைமையில் வைத்திருக்கவில்லை. தன் மக்களுக்கு அவ்வப்போது தகுந்த உணவை ஊட்டி வைத்துத் தன் நாட்டைப் பெருமையுள்ள நாடாகவே கருதும்படி செய்து வைத்திருந்தாள். அம்மக்களும் அன்னையின் நன்மொழிக்கு ஏற்றபடி நடந்துகொண்டு ஊக்கம் மிளிர்ந்தவராய் இயற்கை வளனுக்கு இயைந்தபடி செயற்கை நலன்களை இயற்றி வந்தார்கள். அப்போது தமிழ் நாடு உண்மையில் பெருமை அடைந்திருந்தது. பெருமை அடைந்தபோது எல்லா நலன்களும் அஃது உற்றதன்றோ? கல்வி நலன்; கவி நலன்; கலை நலன்; ஆட்சி நலன்; ஆண்மை நலன்; ஒழுக்க நலன்; உயர்வு நலன் முதலிய எல்லா நலன்களையும் நம்நாடு பெற்றுத் திகழ்ந்ததென்றால் மிகை இல்லை. தமிழ் மக்கள் அந்நலன்களைப் பெற்று ஊக்கின செயல்களே அவர்களது உண்மை வரலாறாகும். அதுவே தமிழன்னையின் வரலாறும் ஆகும். அவ்வூக்கச் செயல்களே ஆக்கச் செயல்களாக விளங்கின. அவ்வாக்கச் செயல்களில் ஒரு சில எடுத்துரைப்பதுவே இக்கட்டுரையின் நோக்கமாகும். இவ்வுரையை இயம்புதலே தமிழன்னைக்கு நாம் இடும் வாழ்த்து என்னும் மலர்மாலையாகும். இவற்றை அறிந்து, நம் மக்கள் பேரூக்கங்கொண்டு தமிழன்னையைத் தான் இருக்க வேண்டிய உயர்ந்த அரியணையில் நிறுத்துவார்களாக!

## 2. தமிழ்நாட்டின் பரப்பும் நகரமைப்பும்

### தமிழ்நாட்டுப் பரப்பு

பண்டைப் பெருமையைப்பற்றிப் பேசியும் புகழ்ந்தும் பயனென்ன? அதைவிடுத்துத் தற்கால நிலைமையை எடுத்துரைத்து எதிர்காலத்தின் முன்னேற்றத்தை ஆராய்வதே நன்று என்று அறிஞர் சிலர் கூறுகின்றனர். ஆனால், பண்டைக்காலத்துப் பெருமை சிறிதும் அறியா விட்டால் தற்காலத்துச் சிறுமையை எவ்வாறு அறிய முடியும்? எதிர்காலத்தில் மேன்மை பெறுவதற்கு ஊக்கமும் எவ்வாறு உதிக்கும்? என்று நாம் கேட்போம். வரலாறு என்ற ஓர் இயல் நூல்தான் ஏன் ஏற்பட்டு ஆராயப்படுகிறதோ! ஒரு மகனுக்குத் தன் பண்டை நிலை அறியாதிருந்தால் தற்கால நிலையின் உண்மை அறியவே வழியில்லை. ஆகையால், இங்கே எங்கள் பண்டைப் பெருமையை ஒரு சிறிது விளக்குவோம். பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வடக்கே பனிமலை முதற்கொண்டு தெற்கே குமரிமுனை வரை தமிழர்களே பரவியிருந்தார்கள். தமிழ் மொழியே பேசப்பட்டது. தமிழ் உயர்ந்த நாகரீகத்தைப் பெற்றும், பல பெரும் நகரங்களைக் கட்டிக்கொண்டும், பண்டைச் சமய நிலையங்களையும் அரண்களையும் பெருக்கிக்கொண்டும், மிக மேன்மையான நிலையில் ஆட்சிபுரிந்து கொண்டிருந்தார்கள். அந்தக் காலத்து நிலை சிந்துநதி தீரத்துப் புதையல்களால் நிரூபிக்கப் படுகின்றது. அதற்கு முந்தியும் தமிழர்களின் நாகரீகம் தென்கடலிலே பின்னொருகால் கடல் கொள்ளப்பெற்ற குமரிக்கண்டத்துப் பல நாடுகளில் பெருகி இருந்தது. அதைப் பண்டைத் தமிழ் நூல்களும் புவியியல் நூலும்

எடுத்துரைக்கின்றன. சிந்துநதி நாகரிகம் யாதோ ஒரு காரணத்தினால் அழிந்துபோகத் தமிழர் நாகரிகம் தென்னாட்டளவில் சுருங்கிவிட்டது. முப்பது நாற்பது நூற்றாண்டுகளுக்கு முன்னர் அதன் பரப்பு வடவேங்கடம் தென்குமரி, கீழ்மேற் கடல்கள் என்ற அளவில் இருந்தது. ஆயிரம் ஆண்டுகளின்போது அதுவும் சுருங்கி வடவேங் கடம், தென்குமரி, மேற்கே குடமலைத் தொடர்ச்சி, கிழக்கே கடல் என்ற அளவில் நின்றுவிட்டது. தற்போது அதிலும் சிற்சில பகுதிகளுக்குப் பிறமொழியார் வழக்குத் தொடரத் தொடங்கி விட்டார்கள். இந்த நிலையில் தற்போதைய தமிழ் வழங்கு நாட்டின் சதுர அளவு 52,876 சதுரகல் இருக்கக்கூடும்.

### பண்டை ஆட்சிப் பிரிவினை

பண்டைத் தமிழர்களான நம் முன்னோர்கள் எழுதி வைத்துள்ளபடிக்கும், நமது நினைவு எட்டுகிறவரைக் கும், ஆட்சிமுறையில் தமிழ்நாடு முப்பிரிவுகளாகப் பிரிக்கப்பெற்றிருந்தது. முப்பெருங் குடிகளான சேரர், சோழர், பாண்டியர்கள் மலைநாடு, பொன்னிநாடு, கன்னி நாடு இவைகளை ஆண்டுவந்தனர். இவர்களுக்கே 'கோ' என்ற சிறப்பு விருதும் இருந்தது. இவர்களுக்குப் பேராறு, காவிரியாறு, வைகையாறு ஆறுகளாகவும், வஞ்சி, கோழி, கூடல் தலைநகர்களாகவும், வில், புலி, மீன் கொடிகளாகவும் கொண்டிருந்தனர். இம்மூவரும் தமிழைப் பெருக்கித் தமிழ்ப் புலவர்களைப் புரந்து பரிசில் களை வழங்கி அறிவைப் பெருக்கினார்கள். நாட்டு வளங் களைப் பிற நாடுகளுடன் உறவுகொண்டாடிக் கடலைக் கடந்தும் வாணிகம் பெருக்கிச் செல்வத்தை வளர்த்திக் குடிகளின் நலத்தைக் கோரினார்கள். செங்கோல் நிறுத்தும்

வண்ணம் ஐம்பெரும் ஆயத்தின் துணையைக்கொண்டு நாட்டில் வழக்க நெறியைப் பாலித்து மக்களில் அமைதியும் ஒழுக்கமும் அறிவுப் பெருக்கமும் தந்துதவினர்கள். இந்த நன்னிலைமை கொண்ட ஆட்சியின் திறத்தை அக்காலத்து அறிஞர்கள் எழுதிவைத்திருக்கும் நூல்களால் அறிவோம். கல்வி சான்ற பெரியோர்களும், புலமை சான்ற தொழிலாளர்களும் விளைபொருள் பெருக்கும் உழவோர்களும், ஊக்கம் நிறைந்த மறவோர்களும், பண்டம் கொணர்ந்து நாட்டிற்குதவிய வணிகர்களும் நிறைந்த நாடுகளாக அவை திகழ்ந்தன. பிறநாடுகளுடன் உறவுபூண்டு செல்வத்தைப் பெருக்கின நிலை ஆங்காங்குக் கிடைத்த பொன் வெள்ளி நாணயப் புதையல்களால் நிரூபிக்கப்படுகின்றது.

இவ்வாறாக நாட்டில் முப்பிரிவினை இருக்க, பலநூற்றாண்டுகள் சென்றன. மக்கட்பெருக்கம் ஓங்கியது. மூந்நாடுகளுக்கும் இடையிடையே குறுநில மன்னர்கள் தோன்றினர்கள். அன்னர்கள் குன்றுகளை அரண்களாகக் கொண்டு முதலில் காப்புத் தலைவர்களாக இருந்து ஒவ்வொரு கால் உரிமைகளைப் பாராட்டிச் சிறுசிறு வட்டங்களாகப் பங்கிட்டு ஆளவும் தொடங்கினர்கள். இவர்களே சங்கநூற் காலத்தில் வேளிர் என்றும், வள்ளல்கள் என்றும் வழங்கப்பட்டார்கள். மூவேந்தர்களைப்போலவே இவர்களும் புலவர்களை ஆதரித்து அவர்களால் புகழப்பெற்றார்கள். அடிக்கடிப் போர்களில் ஈடுபட்டு வெற்றியும் தோல்வியும் அடைந்தார்கள். இவர்களில் பல வேளிர்கள் தோன்றி இருந்தும் சங்க காலத்தில் எழுவர் சிறந்து விளங்கி இருந்தார்கள். இவர்கள் தனித்துநின்ற குன்றுகளை அரண்களாகக் கட்டி நாட்டிற்குக் காவல் தந்து வளப்பத்தைப் பெருக்கினர்கள். கொல்லிமலை, பறம்புமலை, குதிரைமலை,

தகடூர், நவிரைமலை இவைகள் சிறந்த அரண்கள் ஆயின. ஆனால் நாட்டில் பிரிவுகள் மிகுதியாயின. உள்நாடுகளும் பெருகின. இலக்கண நூல்களிற் கண்டபடி பன்னிரண்டு நாடுகள் ஆயின. அவை,

‘தென்பாண்டி, குட்டம், குடம், கற்கா, வேள், பூழி,
பன்றி, அருவா அதன் வடக்கு,—நன்றாய
சீத, மலாடு, புனல்நாடு, செந்தமிழ்சேர்
ஏதமில் பன்னிரு நாட்டென்’

என்பதால் அறிக. சங்க காலத்திலேயே கொங்கு நாடு தனியுரிமை பெற்றிருந்தது. பிறகு பல்லவர் காலத்தில் தொண்டைநாடு சீர்பெற்று ஓங்கியது. தொண்டைநாட்டிற்கும் சோழநாட்டிற்கும் இடையில் நடுநாடு தோன்றி அது மலாடு, சேதி, மகதம் என்ற பிரிவினைகள் அடைந்தது. சைவ, வைணவ மேம்பாட்டுக் காலத்தில் தமிழ்நாடு, சோழ பாண்டிய, மலை, கொங்கு, நடு, தொண்டை என்ற பிரிவினைகளைக்கொண்டு விளங்கியது. இந்த வகையில் நாட்டுப்பிரிவினை இருக்க சோழர் ஆதிக்கத்தில் நாட்டுப் பெயர்கள் மாறுபாடு அடைந்து அரசர்களின் பெயர்களைக்கொண்டு வழங்கின. விசயநகர ஆட்சியில் மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டு, மதுரை, தஞ்சை, செஞ்சி என்ற தலைநகரங்களின் பெயரால் அமைந்து நாய்க்கப் பிரதிநிதிகளால் ஆளப்பட்டன. அக்காலத்தில் தான் கல் அரண்கள் மிகுதியும் வளர்ந்தன. அவைகள் துர்க்கம் என்ற பெயர்பெற்றன. விசயநகர ஆட்சி தொலைந்துபோய் முகம்மதியர் ஆட்சிவந்தபோது ஆர்க்காடு தலைநகரமாகித் தமிழ்நாடு முழுதும் கருநாடகம் என்ற ஒரு பெயராலே வழங்கிற்று. ஆனால், நாடுமுழுதும் கணக்கற்ற பாளையங்களாகப் பிரிக்கப்பட்டு அவைகள் பாளையப்பட்டு என்ற பெயரில் வழங்கியது. ஆங்கிலர் வந்தபிறகு

ஜில்லாக்கள் தாலூகாக்கள் கிராமங்கள் என்ற பிரிவினை பெற்றது. இந்த முறையில் நாட்டுப்பிரிவினை வரலாறு ஏற்பட்டது.

## தற்காலப் பிரிவினை

இந்நாட்டிற்கு வந்த ஆங்கிலர்கள் தமிழ் நாட்டைப் பகுதி பகுதிகளாகக் கைப்பற்றினார்கள். தாம் இயற்றிய போர்களிலும் நாட்டு அரசர்களிடம் செய்துகொண்ட உடன்படிக்கைகளிலும் நாட்டின் பகுதிகள் ஒவ்வொன்றாகச் சேர்ந்தன. தொடக்கத்தில் வாணிபநிமித்தமாகச் சென்னைக் கடற்கரையில் சிறுதிடல் பெற்று ஒரு பண்டக சாலையும் அரணும் கட்டி வாழ்ந்தார்கள். வாணிகமும் பேராசையும் பெருகப் பெருகச் சுற்றிலுமிருந்த இடங்களை ஒவ்வொன்றாகச் சேர்த்துக்கொண்டார்கள். அவைகளை ஆட்சிக்கேற்றவாறு பிரித்தார்களேயன்றி இயற்கையமைப்பையும் பண்டையப் பிரிவினையையும் கருதிப் பிரிக்கவில்லை. பண்டைய நாளில் நாடு என்றால் ஆறு மலை என்ற இயற்கைச் சாதனங்களே எல்லைகளாக இருந்தன. தலைநகர் நாட்டின் நடுவில் பிறர் தாக்குதலுக்கு எட்டாத இடத்தில் தகுந்த அரணோடு அமைந்திருக்கும். மதுரை, உறையூர், வஞ்சி, காஞ்சி இவைகள் அப்படிப்பட்ட அமைப்புக்களையே பெற்றிருந்தன. ஆனால், ஆங்கிலர் வந்த பிறகு அவ்வாறான ஒழுங்குகளைச் சிறிதேனும் பாராட்டாமல் முதலில் வாணிகத்திற்கேற்றவாறு சென்னையைத் தலைநகராக்கிப் பின்னர்ச் சேர்ந்த நாடுகளை ஆட்சிக்கேற்ற அளவில் வட்டங்களாக (ஜில்லா)ப் பிரித்துக் கொண்டார்கள். இந்த வகையில் தமிழ் தெலுங்குப் பிரிவினையும் இன்றி, இயற்கை எல்லைகள் என்ற அமைப்பும் இன்றி, சென்னை மாகாணத்தை இருபத்திரண்டாகப்

பிரித்துப் பிறகு இருபத்தைந்தாக்கினார்கள். இப்போது தமிழகம் மட்டும் கணக்கிட்டால், சென்னை, செங்கல்பட்டு, வடதென் ஆர்க்காடுகள், சேலம், கோவை, நீலகிரி, திருச்சி, தஞ்சை, மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி என்ற பன்னிரண்டு வட்டங்களாக இருக்கின்றன. இவைகளில் தமிழ் வழங்கும் நாடு என்ற நிலையில் ஆய்ந்தால் கொள்ளே காலம், ஹோசூர் என்றவைகளைக் கழித்து, திருத்தணி, குப்பம், திருப்பதி என்பவைகளைக் கூட்டி, புதுக் கோட்டைச் சீமை, நாஞ்சில்நாடு, செங்கோட்டை, தேவிக் குளம், (திருவிதாங்கூர்) சித்தூர் (கொச்சி) இவைகளை உட்புகுத்தினால் தமிழ் வழங்கும் நாடு ஒற்றுமைப்பட்டு விளங்கும். ஆங்கில வட்டப்பிரிவினை ஒரு ஜில்லா அதிகாரி (கலெக்டர்) ஒருவர் ஆளக்கூடிய அளவில் அமைக்கப் பட்டது. இது ஒன்றே பிரிவினைக்கு அடிப்படையாகும். ஆகவே, இப்பிரிவினை செயற்கைப் பிரிவினை என்க.

## பிரிவினை அமைப்பு

இத்தகையமுறையில் ஓர் ஆள் ஆளக்கூடிய அள வில் பிரிவினை அமைப்பு ஏற்படுத்தப்பட்டது என்று கூறி னோம். அவ்வாட்சிக்கு ஏற்றபடி தலை நகரும் உட்பிரிவு களும் மற்றும் பலவும் ஏற்பட்டன. உட்பிரிவுக்குள் ஊர்கள் அல்லது கிராமங்கள் ஏற்பட்டன. வட்டம் அல் லது ஜில்லாவிற்கு ஓர் அதிகாரி (கலெக்டர்) இருந்தால் அவருக்குக் கீழ் உட்பிரிவுகளுக்கு தாலூகா என்றும், அவைகட்குத் தாசில்தார் என்பவர் அதிகாரி என்றும், அவைகளின் கீழ் ஊர் அல்லது கிராமம் என்றும், அவை கட்குக் கிராம முன்சீப் என்றும் முகம்மதியச் சொற் பெயர்கொண்ட அதிகாரிகள் இருக்கின்றனர். நாட்டிற்கு அடிப்படையான எண்ணிக்கை ஊர் அல்லது கிராமம்

தான். தமிழ்நாட்டில் 12 ஜில்லாக்களில் 103 தாலூகாக்களும், 19,130 சிற்றூர்களும் 247 பேரூர்களும் இருக்கின்றன. கிராமங்கள் என்றால் ஒரு தலைக் கிராமமும், அதன் கீழ் சில குக்கிராமங்களும் (மஜரா), அவைகளைச் சுற்றிக் குறிப்பிட்ட பரப்பைக்கொண்ட சாகுபடி நிலங்களும் உண்டு. பொதுவாக இந்நிலங்கள் அவ்வக் கிராமங்களின் குடிகளுக்கே சேர்ந்தன. கிராமங்களிலே குடியிருப்புப் பகுதி, விளைவுப் பகுதி என இருவகை இடங்கள் உண்டு. இவற்றைதவிரப் பொதுவான இடங்களும் உண்டு. அவை பொது மேய்ச்சல் காடுகளாகவும் விளைவில்லாத புறம் போக்குகளாகவும் இருக்கலாம். இவைகளேயன்றி, நீர்ப் பாய்ச்சல் வசதிகளுக்கு ஏற்பட்ட நீர்நிலைகளும், மேய்ச்சலுக்குரிய காடு வனங்களும் உண்டு. இவைகள் அரசியலாருக்குச் சேர்ந்தவை. விளைவு நிலங்கள் குடிகளுக்குச் சேர்ந்தவை. இவைகளேயன்றி, வேறுவிதமான உரிமை நிலங்களும் உண்டு. அவைகள் தேவதாயம், பிரமதாயம், இனம், சோடி, பாளையம் முதலிய பல பெயர்களால் வழங்குபவை. இவ்வாறுள்ள பலவிதத் தீர்வை வேறுபாடுகள் அரசர்கள் காலத்திலும் முகம்மதியர்கள் காலத்திலும் ஏற்பட்டன. இவ் வேறுபாடுகளை நீக்கி ஒரே முறையான தீர்வை ஏற்படுத்த முயற்சிகள் தற்போது செய்யப்பட்டு வருகின்றன.

### பண்டைய ஊர் அமைப்பு

பெருமையில் திகழ்ந்த சோழர்கள் காலத்தில் ஏற்பட்ட ஊர் அமைப்புக்கள் தமிழர்களுடைய பண்பாட்டிற்கு ஒத்தவையாக இருந்தன. தமிழ்நாட்டில் பெரும் பிரிவுகளுக்கு மண்டலங்கள் என்றும், அவற்றின் உட்பிரிவுகளுக்கு வளநாடு என்றும், அவற்றின் உட்பிரிவுகளுக்கு

நாடு என்றும், அவைகளுள் ஊர்கள் என்றும் பெயர்கள் வைக்கப்பட்டிருந்தன. அவ்வவற்றிற்கு ஏற்ற ஆட்சித் தலைவர்கள் இருந்தனர். சில மண்டலங்களில் உட்பெயர் கள் மாறியிருந்தன. சான்றாகத் தொண்டைமண்டலத்தில் கோட்டம் என்றும், சோழநாட்டில் கூற்றம் என்றும் பெயர்கள் வழங்கின. தொண்டைமண்டலத்தில் 24 கோட்டங்கள் இருந்தன. கொங்குமண்டலத்தில் 24 நாடுகள் இருந்தன. இவ்வாறாகச் சில பெயர் வேறுபாடு கள் இருந்தன. எல்லாவற்றிலும் பொதுவில் சிறிய பிரி விற்கு ஊர்கள் என்ற பெயரே வழங்கி இருந்தன. ஊர் களில் (சதுர்வேதி) மங்கலம், நல்லூர் என்ற பிரிவுகள் இருந்தன. இவைகள் சமயத்தொடர்பில் ஏற்பட்டவை கள். ஊர்களில் மனைகட்கு இடமும், சுற்றிலும் விளைவு நிலமும் உண்டு. விளை நிலத்தைக் குடிகள் உழுது பயி ரிட்டு இறை செலுத்தி மற்றவற்றைத் தாம் எடுத்துக் கொள்ளுவர். இறை பெறுபவர் ஊர்ச் சபையினர். இவர் களே ஊரின் ஆட்சிக்கும் பொறுப்பானவர்கள். இவர் கள் தேர்தல் முறையில் பொறுக்கப்பட்டவர்கள். பொதுக் கோயில் ஆட்சி, நிலத் தீர்வை, அரசற்குப் பகுதி, குற்ற விசாரணை, வழக்குத் தீர்ப்பு, நீர்ப்பாய்ச்சல் முறை, வரி விதிப்பு முதலிய எல்லாப் பொதுச்செயல்களும் ஊர்ச் சபையாரே ஏற்றுக்கொண்டு நடத்திவந்தனர். ஊர் ஆட்சி குடியாட்சி என்றே கூறவேண்டும். நாட்டு அரசியல் ஊர் ஆட்சியில் தடையிட்டதே இல்லை. கொடுமை நேர்ந்த காலத்தில் மட்டும் உட்புகுந்து நேர்ப்படுத்துவார்கள். இந்த முறையைப் பின் வந்த விசயநகரத்தார் தொடவேயில்லை. முகம்மதிய ஆட்சியிலும் பெரும்பாலாக அவர்கள் நுழைய வில்லை. அவர்களுக்குப் பொருள் வந்தால் எதுவும் செய் யார்கள். ஆங்கில ஆட்சியிலோ முறைகள் மாறிவிட்டன.

குடியாட்சிக்கு மாருக கிராமத் தலைவன் ஆட்சி வந்தது. முன்னுளில் ஊர்க்கட்டோ, ஆட்சிக்கும் வாழ்க்கைக்கும் ஏற்ற வகையில் அமைந்திருந்தது. ஊரின் நடுவில் கோயில் இருக்கும். அதனைச் சுற்றிலும் நான்கு மடவிளாகங்கள் உண்டு. இவைகளில் கோயிற் பணிவிடையாளர்கள் வசிப்பார்கள். அதனைச் சுற்றிலும் மாடவீதி அல்லது தேர்வீதிகள் இருக்கும். இவைகளில் ஊர்ப் பெரிய குடிகள் வசிப்பார்கள். இவைகளுக்கு வெளிப் புறங்களில் தொழிலாளிகள், உழவர்கள் முதலியோர் வசிப்பார்கள். வெளியே சேரிகள் இருக்கும். அவைகளைச் சுற்றிப் புறம்போக்குகள், மேய்ச்சல் நிலங்கள், விளைவு நிலங்கள் இருக்கும். இந்த வகையில் ஊர் அமைப்பு ஏற்பட்டிருந்தது. இவ்விதச் செவ்விய முறைகளையே தமிழன் அறிந்து போற்றிவந்தான். உத்திரமேரூர்க் கல்வெட்டிலும் ஆகமங்களிலும் தலபுராணங்களிலும் அக்காலத்து ஊர்கட்கு முறைகள் கூறப்பட்டுள்ளன. இவைகளே தமிழர் செயற்கை முறையென்க.

தற்கால ஊர் அமைப்பு

இந்த அருமையான முறையே வடபாலிருந்து வந்த விசயநகரத்தார் ஆட்சியிலும் பெரும்பாலும் போற்றப்பட்டு வந்தது. முகம்மதியர்கள் பெரிய நகரங்களையும் பண வருவாயையுமே கவனித்துவந்தார்கள். ஆகவே, சிற்றூர்கள்பால் அவர்களுடைய கருத்து செல்லவில்லை. பணவருவாய் முட்டுப்பட்டால் ஒழிய ஊர் நிர்வாகத்துள் அவர்கள் கை வைக்கவே இல்லை. ஆகவே, பெரும்பான்மையாகப் பழைய முறையே நடந்துவந்தது. ஆனால், தீர்வையைப் பொறுத்தமட்டில் சிறிது சிறிதாக ஏற்றிக்கொண்டே வந்தார்கள். சபையார்களை அவர்கள்

எதிர்பார்க்கவில்லை; புறக்கணித்தார்கள்; ஊர்த்தலைவனையே பொறுப்பாக வைத்துக்கொண்டார்கள். ஆகவே, ஊர்த் தலைவன் அதிகாரம் ஓங்கிவரத் தொடங்கியது. நாளா வட்டத்தில் குடியாட்சி மறைந்துபோய் ஊர்த்தலைவ னுடைய ஆட்சியே பெருமைபெறத் தொடங்கியது. அதா வது, குடிஆட்சி அல்லது தண்டக்காரன் ஆட்சியே சிறக்கத் தொடங்கியது. ஆங்கிலர் ஆட்சிக்கு வரவே, அவர்களும் தாம் நேரில் கண்ட முறையையே எடுத்துக் கொண்டார்கள். ஒரே ஆளின் பொறுப்பில் விடுவது எளிது. ஒரு சபையாரின் பொறுப்பு சிறந்திருந்தாலும் அவர்களை ஆள்வது கடினம். ஆகவே, ஆங்கிலர் தனி மனிதன் ஆட்சியைக் கிராமங்களில் ஏற்றுக்கொள்வதை வற்புறுத்தினார்கள். ஆங்கில அரசியலாரின் ஆட்சியின் பயனே நம்முடைய குடியாட்சியைத் தொலைத்துக் குடி களுக்கு அடங்காத தனியாட்சியை ஏற்படுத்தினதே ஆகும். சமீபத்தில் பண்டைய ஆட்சியை மீண்டும் அமர்த்தும்பொருட்டுப் பல முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. பஞ்சாயத்துச் சபைகளும் கிராம சங்கங்களும் ஏற்படுத்துகிறார்கள். ஆனால், மக்களுக்குள் முந்தியிருந்த கூட்டுறவு உணர்ச்சி போய்விட்டது. தனி ஆட்சிக்காலத்தில் உணர்ச்சி குன்றிப் பிறருடைய தூண்டு தல் மேலிட்டுக் கிராமங்களில் பொறாமை மேன்மை யடைந்துவிட்டது. அரசியலார் மக்களின் கல்வியைப்பற்றி ஒரு சிறிதுங் கவனம் செலுத்தாததனால், காட்டு விலங்கு களைப்போல் எப்போதும் சச்சரவு செய்வதில் பொழுது போக்கத் தொடங்கினார்கள். இந்த முறையில் ஊர்களில் இருந்த அமைப்புக் கெட்டுப்போய் வழக்குகள் மிகுதியாகி ஒழுங்கு குன்றிவிட்டது. இந்த நிலைதான் இப்பொழுது உண்டு. படிப்பு, ஒழுக்கம், கூட்டுறவு, ஆட்சிப்பொறுப்பு

இவைகள் மீண்டும் வரும்போதுதான் முன்னுளின் பெருமை வாழ்க்கை வரும் என்க.

ஊரின் அழகு

ஆனுல் ஊர் அமைப்பின் இனிய அழகு இன்னும் முற்றும் மறையவில்லே. ஊர்க்கட்டு நடுவிலும், வேலியிட்ட நிலங்கள் சுற்றிலும், அமைந்துள்ள வடிவை உயரத்தில் உள்ள ஒரு குன்றின்மேல் ஏறி நின்று காணவேண்டும். மேல் கொங்கு நாட்டில் மருதமலே ஏறி மருதாசலக் கடவுள் கோயிலுக்கு அருகில் இருக்கும் குளிர் காற்று இனிதாக வீசும் அரசமரத்து மேடையில் நின்று கிழக்கே பாருங்கள். நம் அடிக்குக் கீழே தொலேவிலே அழகிய புலங்கள் சதுரம் சதுரமாகச் சொக்கட்டான் பலகையை ஒத்திருக்க, வேலிகள் நேர்கோடுகளாக அமைந்திருக்க, சாலேப்பாதைகளின் இருமருங்கும் பெருமரங்கள் வரிசையாக அமைய, நேரே அவை செல்லும் பெற்றியும், காட்டாறுகள் வெறுமணல் வழிகளாய் ஓடும் பாங்கும், ஆங்காங்கே ஒவ்வோரிடங்களில் சின்னஞ் சிறு கிராமங்கள் ஒட்டு வீடுகளேக் கொண்டு அமைந்திருக்கவும், ஓர் ஓவியன் சித்திரித்த படம்போல நாட்டுப்புறத்துக் காட்சியைக் கண்டு மகிழ்வோம். சென்னிமலே வேலவன் வீற்றிருக்கும் குன்றேறித் தெற்கே நோக்கினுல் நெடுந்தொலேவு மட்டும் நாட்டுஅமைப்பின் ஓவியத்தைக் காண்போம். பாண்டிய நாட்டில் திருமலேயில் முருகன் சன்னிதியிலும், பழனியில் ஆண்டவன் கோயிலருகிலும் தோன்றும் காட்சிகளேச் சொல்லவா?, தொண்டைநாட்டில் குன்றத்தூர்க் குன்றிலும், திருநீர்மலேமேலும் இதே தோற்றக் காட்சியைக் கூறவா? சோழநாட்டில் திரு ஈங்கோய் மலே உச்சியில் நின்ருல், காவிரி படர்ந்து நாட்டைச்

செழிப்பிக்கும் காட்சியைச் செப்பவா? இவை வேறு எங்கே காணமுடியும்? அண்மையில் ஓர் ஆங்கில நூலைப் படித்தேன்; ஆங்கில நாட்டின் அழகுகளையும் சிறப்புக்களை யும் அதில் எழுதியிருக்கக்கண்டேன். மிக எளிதான ஒன்றை மிகச் சிறப்பாக எழுதியிருக்கப் படித்தேன். ஆங்கில நாட்டில் ஒவ்வொரு குடியானவன் புலத்தினிலும் வேலி இருக்குமாம்; அது அவன் புலத்திற்கு அரணும்; போக்குவரவிற்கு வாயில் இருக்குமாம்; ஆட்களும் கால் நடைகளும் உள்ளே செல்லாமல் வாயிற் கதவுகள் உண் டாம்; இதுவே ஆங்கிலக் குடிகளின் உரிமை காட்டும் சிறப்பு என்று அதில் வருணிக்கப்பட்டிருந்தது. வேலி களில் பற்பல அமைப்புகள், வாயில்களின் நுண்ணிய பூட்டு கள் முதலியவைகள் படங்களோடு விவரிக்கப்பட்டிருந்தன. இந்த நிலை தமிழ் நாட்டில் எக்காலத்திலும் இருந்தது. குன்றுகளின் மேல் ஏறிப் பார்க்கும் காட்சிகள் இந்த அமைப்புகளை சிறந்த வடிவங்களாக எடுத்துக் காட்டுவன. இவைகள் எல்லாம் செயற்கைச் சிறப்புக்கள் என்க. தன் நாட்டுப்புறத்தின் அமைப்பைப் பெருமைப்படுத்தி எழுதிய ஆங்கிலப் புலவன் தமிழ்நாட்டை ஒருமுறை கண்டால் என்ன கூறுவானோ! நாம் அவைகளைப் படைத்திருந்தும் கண்டு மகிழும் வாய்ப்பைப் பெறுகிறோமில்லை!

நகர அமைப்பு

நம் தமிழ் நூல்களை, அவற்றிலும் சிறப்பாகத் தல வரலாறுகளைப், படிக்குங்கால் முதலில் காணும் நாட்டுப் படலத்தை ஏதோ ஒருவிதமாக வாசிப்போமே ஒழிய, நகரப் படலத்தைப் படிக்காமல் அதுவாகவே நகர்ந்து செல்ல விடுவோம். பண்டைக்காலத் தமிழர் பண்பாடு அதிலும் உண்டு என்றறிந்தால் நாம் அதையும் படிப்

போம். அதன்படி நகரம் எவ்வித அமைப்பைப் பெற்றிருந்தது? மக்கள் அவ்வமைப்பில் எவ்வித ஊக்கம் கொண்டிருந்தார்கள்? என்று அறிய முடியும். ஆங்கில நாடுகளிலே ஒவ்வொரு சிறிய நகரத்திலும் ஒரு நகர மண்டபம் இருக்கும். அதில் வைத்திருக்கும் நூற் சாலையில் அந்நகரத்தின் படமும் ஊர் அமைப்பின் வரலாறும் இருக்கும். வெளியூரான் அவைகளை வெகு எளிதில் அறிந்துகொள்வான். நமது நாட்டில் அக்கொள்கை இன்னும் முதிரவில்லை. நாட்டு அன்பும் நகர அன்பும் பெருகி வரும் இந்நாள் இச் சிறப்புக்கள் விரைவில் தோன்றிவிடும். நகர அமைப்பு ஒரு செயற்கை நலம். அது நகரமக்களின் நன்மைக்காக ஏற்பட்டது. ஒவ்வொரு குடியும் அதனால் எத்தனை பலன் அடைய முடியுமோ, அத்தனையும் அடையும் வண்ணம் சிறந்த அறிவாளர்களால் அது ஏற்படுத்தப்படவேண்டும். முற்காலத் தமிழர் நகர அமைப்பை ஆய்ந்து அறிந்து நிலைநிறுத்தினார்கள். பிற்காலத்தார் அதனை மறந்தார்கள். சில ஆண்டுகளுக்குமுன் டாக்டர் கெட்டிசு (Geddes) என்ற வெள்ளை அறிஞர் நமது நாட்டிற்கு வந்து நகர அமைப்பின் சிறப்பை எடுத்துச் சொன்னார். அப்போதுதான் நம் மக்கள் அப்படிப்பட்டது ஒன்று உண்டு என்று நினைவுகொண்டார்கள். அப்போது தான் இளங்கோவடிகள், சீத்தலைச் சாத்தனார், பரஞ்சோதி முனிவர், கச்சியப்பர் முதலியோரும் நகர அமைப்புக்களைப் பற்றிச் சிறப்புடன் புகழ்ந்துள்ளார்கள் என அறிந்தார்கள். பிறகு, அந்தந்த நகர ஆண்மைக் கழகங்களும் சீர்திருத்தங்களில் ஈடுபடத் தொடங்கினார்கள். கோயில் நகரம், உல்லாச நகரம், புற நகரம், பூங்கா நகரம், தொழில் நகரம் தோட்ட நகரம், விளையாட்டு நகரம், துறைமுக நகரம், மலை நகரம் முதலிய வேறுபாடுகளைச் சிந்தித்து வளர்ச்சி

பெறும் முறையில் அமைக்கும் ஏற்பாடுகளை எண்ணத் தொடங்கினார்கள். இனித் தமிழர் வாழ்ந்த சில பண்டைய நகரங்களின் அமைப்புக்களைச் சிறிது ஆராய்ந்து எடுத்துரைப்போம்.

பூம்புகார்

இருபது நூற்றாண்டுகளின்போது பண்டைச் சோழர்களின் தலைநகராக விளங்கின நகரம் காவிரிப்பூம் பட்டினம் என்ற பூம்புகார். அந்நாளில் மிகச் சிறப்புற்ற நகரம் ஆதலால் இதனைப்,

> "பூம்புகார் போற்றுதும் பூம்புகார் போற்றுதும்
> வீங்குநீர் வேலி யுலகிற்கு அவன் அளிபோல்
> ஓங்கிப் பரந்தொழுக லான்"

என்றும் மங்கல வாழ்த்தில் இளங்கோவடிகள் போற்றியிருக்கிறார். இந்நகரம் காவிரி ஆறு கடலிற் சேரும் இடத்தில் கட்டப்பட்ட ஒரு துறைமுகம். அது மருவூர்ப்பாக்கம், பட்டினப்பாக்கம் என்ற இரு பகுதிகளை உடையது. மருவூர்ப்பாக்கத்தில் கடற்கரையை ஒட்டிக் கண்ணைக் கவரும் அழகுடைய யவனர் இருப்பிடங்களும், வாணிகத் தின்பொருட்டுப் பல நாடுகளிலிருந்து வந்தோர் கலந்துறையும் இருப்பிடங்களும் விளங்குவன. வண்ணம், சுண்ணம், சாந்தம், பூ முதலியன விற்போர் திரியும் வீதியும், பட்டுச் சாலியர் தொழிலிடங்களும், நவமணிகளோடு பொன்னும், பொன்னகைகளும் விற்கும் கடைகளும், பல கூலக்கடைத் தெருவும், வெண்கலக்கன்னார், செப்பு தட்டிகள், தச்சர், கொல்லர், தட்டார் தொழிற்சாலைகளும், எழிசைப் பாணர்களும், ஏனையோரும் வாழும் இடங்களும் கூட்டம் கூட்டமாக இருந்தன. பட்டினப்பாக்கத்திலோ அரசர் வீதி, கொடித்தேர் வீதி, பீடிகைத் தெரு, வாணிகர் மறுகு,

அந்தணர் தெரு, வேளாளர் தெரு, மருத்துவர், சோதிடர், சூதர், மாகதர், கூத்தர், நாழிகைக் கணக்கர், காரிகையர் முதலியோர் இருக்கைகளும், யானை, குதிரை, தேர் செலுத்துவோர், மறவர் இருக்கைகளும் உண்டு. இவ்விரு பாக்கங்களுக்கும் இடையிலே சோலை மரங்களைக் கால்க ளாகக் கட்டப்பட்ட நாளங்காடிக் கடைத்தெருவும் உண்டு. அந்த நாளங்காடியில் பூதம் ஒன்றுண்டு. அதற்கு மறக் குடிப்பெண்டிர் பூவும் பொங்கலும் இட்டுக் குரவை ஆடி அரசனை வாழ்த்துவர். மருவூர் மருங்கில் மறவர் வீரரும், பட்டின மருங்கில் படைவீரரும் முரசுகொட்டி உயிர்ப்பலி இடுவர். இன்னும் அங்கே முத்துப்பந்தர், பட்டி மண்டபம், தோரணவாயில் கூடிய மண்டபம் ஒன்றுண்டு. வெள்ளிடை மன்றம், இலஞ்சி மன்றம், நெடுங்கல் மன்றம், பூத சதுக் கம், பாவை மன்றம் என்ற ஐவகை மன்றங்கள் உண்டு. வச்சிரக்கோட்டத்தில் முரசும் பெண்யானைக் கோட்டத்தில் யானையும், தருநிலைக் கோட்டத்தில் கொடியும் வைப்பார் கள். மேலும், பிறவாயாக்கைப் பெரியோன் ஆகிய சிவ பெருமான் கோயிலும், ஏனைய தேவர்கள் கோயில்களும், அறவோர் பள்ளிப்பீடங்களும் உண்டு. அங்கே அறநெறிச் சொற்பொழிவுகள் நடைபெறும்.

காவிரி கடலோடு சேரும் இடம் சங்கமுகம் எனப் பட்டது. அங்கே ஆறு ஆழமாக இருந்ததினால் மரக் கலங்கள் ஆற்றுக்குள் நெடுந்தொலைவு சரக்குகளை எடுத்துச் செல்லும் பாங்கு பெற்றிருந்தன. துறைமுகத்தருகில் கலங்கரை விளக்கம் இருந்தது. அது மரக்கலங்களுக்கு ஒளிசெய்து வழிகாட்டும். அங்கே ஆயத்துறைகள் இருந் தன. கணக்கற்ற வெளிநாட்டுச் சரக்குகள் குவிந்தவண்ண மாக இருக்கும். இதனைப் பட்டினப்பாலை நூலாசிரியர்,

"நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்
காலின் வந்த கருங்கறி மூடையும்
வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்
குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்
தென்கடல் முத்தும் குணகடற் றுகிரும்
கங்கை வாரியும் காவிரிப் பயனும்
ஈழத் துணவும் காழகத் தாக்கமும்
அரியவும் பெரியவும் நெளிய விண்டி"

(பட்டின—185-62)

என்று விரித்துரைக்கின்றார். மற்றும், இவ்வூரில் ஏழரங்கங்கள் கொண்ட புத்தர் ஆலயமும் இருந்தது. இத்தனை சிறப்புப்பெற்ற புகார் கடல்கொள்ளப்பெற்று மறைந்தது. என்றாலும், பண்டை நூல்களால் அதன் அமைப்பும் பெருமையும் அறிவோம். இவ்வூர்த் தமிழர் செயற்கை நலனுக்குத் தகுந்த ஓர் எடுத்துக்காட்டு எனல்வேண்டும்.

பூம்புகார் இருந்த இடத்தில் என்ன இன்று காண்கிறோம்? காவிரி கடலில் சேருவதில்லை. கடற்கரையில் சில செம்படவக் குடிசைகள் மட்டும் உண்டு. அருகில் அரைக்கல் தொலைவில் பல்லவனீச்சரம் என்ற ஒரு பாடல்பெற்ற தலம் மட்டும் இருக்கிறது. அதைக் காவிரிப்பூம் பட்டினத்துப் பல்லவனீச்சரம் என்று தேவாரம் கூறும். ஊர் இருந்த இடத்தைத் தோண்டிப் பார்த்தால், பண்டைச் சின்னங்கள் காணமுடியும். இதனைப் பண்டைக் கலைப் பகுதியார் ஆராயவேண்டும்.

கூடல்

இது பாண்டிநாட்டின் தலைநகர். வையைப் பேராற்றின் தென்கரையில் உள்ளது. சிலப்பதிகாரக் காலத்தில் இவ் வையையைக் கடப்பதற்குப் பெருந் தோணித்துறை ஒன்றிருந்தது. அத் தோணிகள் குதிரை

முகம், யானைமுகம், சிங்கமுகம் கொண்டவைகளாகச் சித்திரிக்கப்பெற்றிருந்தன. சிறு துறைகளிலே மரப் புணைகளும் உண்டு. ஆற்றோரம் வயல்கள், சோலைகள், பண்ணைகள், ஏரிகள் சூழ்ந்த தோப்புகள் உண்டு. கீழ்த் திசையில் புறஞ்சேரி ஒன்றுண்டு. அங்கே முனிவர்கள் வசிப்பார்கள். அதில்தான் கோவலனும் கண்ணகியும் மதுரை சென்றபோது முதலில் தங்கியது. மதுரையைச் சுற்றிக் காவற்காடுசூழ்ந்த அகழி ஒன்றுண்டு. அதற்குள் உயர்ந்த மதில்கள் உண்டு. அவைகளில் கொடிகள் பறக்கும். (சிலம்பு - புறஞ்சேரி இறுத்த காதை) அக் கொடிகளோ பிறரால் கவரக்கூடாதபடி வெற்றியுடன் திகழ்வது. கோட்டைவாயிலில் வளையும் பந்தும் தொங்கிக்கொண்டிருக்கும். அதனால் பகைவர்களை மகளிராக உவமித்ததாகும். எந்தப் பகைவனும் அவற்றைக் கழற்றவில்லையாம். (திருமுருகாற்றுப்படை) நகரத்து மதில் வாயில் யவனரால் காக்கப்பட்டது. அதனுள் புகுந்தால் நகரத்துள்ளே நுதல்விழிநாட்டத் திறையோன் (சிவன்) கோயிலும், உவணச்சேவல் உயர்த்தோன் (திருமால்) நியமமும், மேழிவலனுயர்த்த வெள்ளையன் (பலராமன்) நகரமும், கோழிச்சேவல் கொடியோன் (முருகன்) கோட்டமும், அறத்துறை விளங்கிய அறவோர் (புத்தர் முதலிய முனிவர்கள்) பள்ளியும், மறத்துறை விளங்கிய மன்னன் (பாண்டியன்) கோயிலும் இருந்தன. மதில் அகத்துள்ளே மிகச் செழிப்புடன் விளங்கிய குடிகள் மகிழ்ச்சியுடன் இருப்பர். கோவலன் ஊரைக் காணச் சென்றபொழுது கடைகழி மகளிர் காதலருடன் காலையில் புனல் விளையாடினர்; நண்பகலில் பொழில் விளையாடினர்; மாலையில் நிலா முற்றத்தில் இன்புடன் அமர்ந்திருந்தார்கள். இவ்வாறு செழுங்குடிச் செல்வரும் வையம் காவலரும் மகிழாநிற்கும்

வீதிகளும், அறுபத்துநான்கு கலையுணர்ந்த பரத்தையர் பெரு வீதியும், அரசரும் விரும்பும் செல்வமுடைய அங்காடி வீதியும், பயன்மிக்க இரத்தினக்கடை வீதியும், பல நூறு அடுக்குகளையுடைய புடவைக்கடைத் தெருவும், கூலங்கள் குவித்த கூலக்கடைத் தெருவும், நால்வகைக் குலத்தார் வசிக்கும் தெருக்களும், முச்சந்தியும், நாற்சந்தியும், கோயிற் கடைத்தெருவும் (ஆவண) வீதி மன்றுகளும், முடுக்கு களும், குறுந்தெருக்களும் இருந்தன. (சிலம்பு - ஊர்காண் காதை) தற்காலத்தில் மதுரையைப்போன்ற ஒழுங்கான தெருக்கள் உடைய பண்டையூர் காண்பதரிது. நடுவில் சிவன்கோயில் சுற்றிலும் சதுரம் சதுரமாக ஆடிவீதி, சித்திரைவீதி, ஆவணி மூலவீதி, மாசிவீதி, வெளிவீதி முதலான சதுர வீதிகள், ஒன்றன்மேல் ஒன்றாக அமைந் திருக்கும் முறை வேறெங்குண்டு. மேல்நாட்டோரும் இதன் ஒழுங்கைக் கண்டு வியப்பர். அரசரரண்மனையைச் சுற்றிலும் இவ்வாறான சதுர வீதிகள் உண்டு. மேல்நாடு களில் இவைகளைக் கோயில் நகரங்கள் (Cathedral Cities) என்பார்கள்.

காஞ்சி

தொண்டைநாட்டுத் தலைநகராகவும், பல்லவர்க ளுடைய இராசதானியாகவும் பல நூற்றாண்டுகள் செழித் திருந்த ஊர் காஞ்சியாகும். வடநாட்டாரும், சீன யாத்திரி களும் கண்டு மகிழ்ந்த ஊர். ஆகவே, வடமொழியில் இது ஏழுமுத்தி நகரங்களுள் ஒன்றாக மதிக்கப்பட்டு, நாடோறும் கூறும் சமயச்சடங்குச் சொற்களிலும் கூறப்படும் பெருமை பெற்றது. சைவசமயாச்சாரியர்களால் பாடல் பெற்ற ஐந்து கோயில்களும், வைணவ ஆழ்வார்களால் பாடல்பெற்ற பதினெட்டு கோயில்களும் கொண்டது.

மற்றும், காமக்கோட்டம் என்ற அம்மன் கோயிலும், குமரகோட்டம் என்ற முருகர் கோயிலும், அத்திகிரி என்ற திருமால் கோயிலும் உண்டு. ஏகம்பமும், பெருமாள் கோயிலும் மிகப் பெரியவை. இவைகளைச் சுற்றி மாட வீதிகளும், இவைகளை இணைக்கும் ஏனைய தெருக்களும், அவைகளில் பெருஞ் சதுரமாக இருக்கும் தேர்விழாத் தெருக்களும், வேறு எங்கும் காணல் அரிது. இவைகளில் 350 வேறு கோயில்கள் உண்டு. தெருக்கள் விசாலமாயும் நீண்டும் இருப்பன. கோயில்களையன்றித் தீர்த்தக் குளங்கள் மிகுதியும் உண்டு. பல்லவர் காலத்து மிகப் பண்டைக் கோயிலாகிய கைலாசநாதர் கோயில் ஊர்க்கு வெளியிலும், பரமேச்சர விண்ணகரமாகிய வைகுண்டப் பெருமாள் கோயில் ஊரின் இடையிலும் இருக்கின்றன. நகரம் முப் பகுதிகளாக அமைந்திருக்கின்றது. சிவகாஞ்சி (பெரிய), விஷ்ணு காஞ்சி (சின்ன), ஜினகாஞ்சி (பருத்திக் குன்றம்) என்பன. ஜினகாஞ்சியில் பண்டைச் சமண ஆலயங்கள் இன்னும் உண்டு. சத்திபீடமோ காமகோடி பீடம் எனப் படும். பௌத்த ஆலயம் முந்தி இருந்தது. பெரிய புத்த சிலைகள் இன்னும் இருக்கின்றன. மணிமேகலையோ இந்நகரம் சமயக் கணக்கர் தருக்கம் செய்து தங்கள் தங்கள் சமயங்களைத் தாபிக்கும் உரிமை பெற்றதெனக் கூறும். இந்நகரில் முக்காலத்தையும் அறிவிக்கும் கந்திற் பாவையும், துணை யிளங்கிள்ளி என்பவனால் கட்டப்பட்ட புத்தராலயமும், தரும மதவனம் என்ற பெயருள்ள ஒரு வனமும் இருந்தன. அறவண அடிகள்பால் அறங்கேட்டு மணிமேகலை பலநாள் தங்கின நகரம் இதுவே. திருக்குறிப்புத் தொண்டர், சாக்கிய நாயனர் முதலியோர் அவதரித்த நகரம் இதுவே. உடையவர் பல ஆண்டுகள் வழிபட்ட திருக்கோயில் உள்ள நகரமும் இதுவே. வள்ளல் பச்சை

யப்பர் அவதரித்து அறங்கள் செய்த நகரமும் இதுவே. ஆகவே, "நகரேஷு காஞ்சி" என்று சொன்னது தகுதி யல்லவா?

## திருவரங்கம்

இச் சிறந்த கோயிலே நகரமாக அமைந்த சீர் பெற்ற நகரம். மேல்நாட்டுக் கோயில் நகரங்கள் (Cathedral Cities) எவையும் இத்துணைச் சிறப்புப் பெறவில்லை. இந்நகரம் தமிழர் பண்பாட்டை நன்கு விளக்குவது. நடுவில் கருவறை என்ற மூலத்தானம். சுற்றிலும் பல்வேறு மண்டபங்கள், வாவிகள், பூங்காக்கள், சுற்றாலயங்கள், ஒன்றன்பின் ஒன்றாக மதிற்சுவர்கள். எல்லாம் சிற்ப நூல் முறையில் கட்டப்பட்டவை. பொருள் உற்ற வகையில் ஆக்கப்பெற்றவைகள். இதில்தான் அண்டமும் பிண்டமும் அடங்கின பொருளுவமை பெற்றிருப்பது. எல்லாம் ஒரு சிறு கோணலும் இல்லாமல் ஒழுங்காகக் கட்டப் பெற்றவைகள். இப்பெருங் கோயில் ஒருகாலத்தில் கட்டப் பெற்றது அல்ல. பலவேறு மன்னர்களால் பல காலங்களில் பல பகுதிகள் கட்டப்பெற்றவைகள் என்றாலும், ஒரே கருத்தைக் கொண்ட இயல்பு பெற்றவை. வெளிப்பிரகாரங்களில் மக்கட்குடி உண்டு. அவரவர்கள் தொழிலுக்கேற்றவாறு அமைப்புக்கள் உண்டு. இத்துணை ச் சிறப்புப்பெற்ற திருமால் கோயில் இது ஒன்றே. ஆகவே, இதற்குக் கோயில் என்ற சிறப்புப்பெயர் ஏற்பட்டு வழங்கி வருகின்றது. என்றும் வற்றாத பொன்னி நதியின் இரண்டு கிளைகளின் நடுவிலே இயற்கைச் செழிப்புக்கள் வாய்ந்த ஆற்றிடைக் குறையிலே (அரங்கம்) அமைந்த தெய்வீகத் திருக்கோயில் நகரம் இதுவாகும். இதற்குக் கிழக்கே சிவ பெருமானுக்கு உகந்ததோர் கோயில் உண்டு. அதுவே,

திரு ஆனைக்கா. அதுவும் உயர்ந்த சுற்றுமதில்களைக் கொண்ட கோயில் நகரமாகும். திருவரங்கத்திற்கு ஏழு மதில்கள். ஆனால், ஆனைக்காவிற்கு ஐந்து மதில்கள். ஒன்று மானிடனின் ஏழு உடல்களும், மற்றொன்று அவன் ஐந்து கோசங்களும் உவமையாகக் கொண்டவை. ஆகவே, இந் நகர்கள்தான் ஒரு தத்துவத்தின் எடுத்துக்காட்டாக அமைவுற்றவைகள். இவைகள் இரண்டும் ஆசாரிய ஆழ்வாராதியர்களால் பாடல்பெற்றவைகள். திருவரங்கத்தின் தலைக்கோபுரம் முற்றுப்பெறவில்லை. ஏழு நிலையோடு நிற்கிறது. முற்றுப்பெறுமானால், இந்தியாவிலேயே எங்கும் இல்லாத உயரத்தையும், கம்பீரத்தையும் கொண்டிருக்க வல்லது.

## ஏனைய நகர்கள்

ஏனைய கோயில் நகரங்களிலே சிதம்பரமும், திருவண்ணாமலையும் சிறப்பாகக் கூறலாம். இவைகள் உயர்ந்த மதில்களைக் கொண்டிருந்தன ஆதலாலும், போர்க்காலங்களில் எதிர்ப்புக்கு மிகுந்த வசதிகள் கொண்டிருந்தன ஆதலாலும், பிராஞ்சியரும், முசுலிமியரும் இவைகளைக் கோட்டைகளாக ஆக்கிக்கொண்டு மக்கள் நெஞ்சு நோகும்படி போர் அரண்களாக மாற்றிவிட்டனர். இக்கோயில்கள் அடைந்த அழிவுக்குறிகளை இன்றும் இவைகளில் காணலாம். இவைகள் எல்லாம் பண்டைக்கோயில் நகர்களே. இவைகளில் சிதம்பரம் சைவத்தில் கோயில் என்ற தனிப்பெயரில் வழங்குவது. அண்மையிலே ஆங்கிலர் காலத்தில் ஏற்பட்ட நகரம் சென்னையே. பழைய நகரம் கோட்டையும் பேட்டையும் கொண்டது. கோட்டை ஆங்கிலர் போர் வசதிக்கு ஏற்றபடி கட்டப்பட்டது. பேட்டை நாட்டு மக்கள் குடியிருப்புக்குத் தக்கவாறு நேர்



சிதம்பரம் கோபுரமும் குளமும்

[பக்கம் 28

கோடுகளில் கட்டப்பட்டது. வெகு நெருக்கடியானது. நகரம் பெருகப் பெருகச் சுற்றிலும் இருந்த பண்டைய சிற்றூர்கள் உடன்சேர்ந்து பெருநகரம் ஆயிற்று. இதில், திருவல்லிக்கேணியும், திருமயிலையும் சேர்ந்துவிட்டன. புறநகர்களாக அண்மையிலே தியாகராயநகர் போன்ற புதுப் பகுதிகள் தோன்றியிருக்கின்றன. ஏனைய புது ஊர்களோ வாலாஜாபேட்டை போன்ற முசுலிமியர் கட்டிய ஊர்கள். இப்படிப்பட்ட புது ஊர்கள் மிகக் குறைவு. ஒவ்வொரு நகரிலும் அண்மையிலே புறநகர்கள் தோட்ட நகர் என்ற முறையில் தோன்றி வருகின்றன. கோடைக் கால வசதிகளுக்காக மலைமேடுகளில் சில அழகிய நல வசதிகள் தோன்றியிருக்கின்றன. சிறப்பாக, நீலகிரியில் ஒத்தக்கல் மந்து (ஒற்றைக்கல் மன்று) குன்னூர் (குன்னி-சிறிய) முதலியவைகளும், பழனிமலைத் தொடரில் கோடைக்கானலும், சேர்வராயன் மலைகளில் ஏற்காடும், ஆகிய இப்படிப்பட்ட நல நகர்கள் உண்டு. இவைகள் மலைகள், பள்ளத்தாக்குகள் முதலியவற்றில் அழகாகக் கட்டப்பட்ட பூங்கா நகர்கள் ஆகும். பிராஞ்சு ஆட்சியில் உள்ள புதுச்சேரியும், காரைக்காலும் நேர்க்கோடுகள் போன்ற தெருக்களையுடைய ஊர்கள். அமைப்பு ஒழுங்காக இருப்பவை. இவைகளே நகர அமைப்புகளுக்கு எடுத்துக்காட்டுக்களாகக் கொள்ளலாம்.

---

## ௩. கோட்டைகள்

இதுகாறும் தமிழ்நாட்டின் வடிவைப்பற்றிக் கூறினோம். அதன் வடிவைத் தமிழன் எவ்வாறு தன் செயற்கையால் நலம்பெற அமைத்தான் என்று கூறினோம். அந்நாட்டினுடைய இயல்பைக் கூறும்போது திருவள்ளுவர் 'குடிகள் பசியின்றி உண்ணுதற்கேற்ற வளமுடையதாயும், தீராத நோய்க்கு இடமாவதன்றாயும், பகைவர் படையெடுப்புக் கிடமின்றி காக்கப்பட்டதாயும் இருப்பதே நாடாகும்' என்பார். அதனை,

> "உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
> சேரா தியல்வது நாடு" குறள் - எ௩௪.

என்றார். இதில் பகைவர் படையெடுப்பிற் கிடமின்றிக் காப்பது அரசியலின் கடன். அதனைச் செய்வதற்குத் தமிழ் அரசு நாட்டில் எங்கும் அரண்களைக் கட்டிற்று. அவ்வரணைப்பற்றிக் கூறும் வள்ளுவர் 'பகைவர் கொள்ளு தற்கரிதாய்ப் பலவகை உணவுகளை உள்ளேயே உடையதாய்த் தன்னுள்ளிருப்பவர் போர் செய்வதற்கு எளிதாய் இருப்பது அரண்' என்றார். அதனைக்,

> "கொளற்கு அரிதாய்க் கொண்டகூழ்த் தாகி அகத்தார்
> நிலைக்கெளிதா நீரது அரண்" குறள் - எ௪௫.

என்றார். இவ்வகை அரண்கள் நாடெங்கும் கட்டி இருந்தார்கள். அவ்வரண்கள் வலியுடன் இருந்தநாள்வரை தமிழ் அரசு தன்னுரிமை உற்றிருந்தது. அரண்களை உள்ளவாறு காவாது நின்றவுடன் உரிமையும் மறைந்தது. அரண்கள் ஊர்களிலும் தலைநகர்களிலும் நாட்டு எல்லைகளிலும் இருந்தன. அவ்வரண்கள் நான்கு இயல்புகளைக் கொண்டிருந்தன. அவை நீரரண், நிலவரண், மலையரண், காட்டரண் என்பவை. இதனை வள்ளுவர்,

"மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற்
காடும் உடையது அரண்" குறள் - எசுஉ.

என்றார். மற்றும் அரணில் கட்டப்படும் மதில்கள் உயர்ச்சியும், அகலமும், திண்மையும், அருமையும் பெற்றிருத்தல் வேண்டும். (குறள் 743) இவைகளை உட்கொண்டு கட்டப்பட்ட அரண்கள் கோட்டைகள் என்று கூறப்படும். அவைகளைச் சங்க நூல்கள் அடியிற்கண்டபடி கூறுவன.

## சங்ககாலக் கோட்டைகள்

மலை, காடு, நீர், மருமணல் இவைகள் இயற்கையாக ஏற்பட்ட இடங்களைப் போர் புரிவதற்கு ஏற்றபடி நல்ல அரண்களாக அமைப்பது வழக்கம். அவ்வாறு இயற்கை அரண்கள் இல்லாத உள்நாட்டில் கருங்கல் செங்கல் (இட்டிகை) முதலியவற்றால் அமைக்கப்பட்ட மதில்களால் கட்டப்பெற்றன. கோட்டைக்கு வெளியே வெகு தொலைவு வரை காவற்காடு பரந்திருக்கும். இக்காவற்காடானது வஞ்சனை பல வாய்த்துத் தோட்டி, முள் முதலியன பதிக்கப்பெற்றது. அக்காவற்காட்டைத் தாண்டி உள்ளே சென்றால் மதிலை அடுத்து அகன்று ஆழ்ந்த அகழி உண்டு. அதில் கரா சுறா மிகுதியாய் உண்டு. இதனை அடுத்து அமைக்கப்பட்டதே புறமதில். புறமதிலின் மேற்புறம் பல பொறிகள், பதணம், மெய்ப்புழை, ஞாயில் முதலியன அமைந்து, எழுவும் சீப்பும் உடைய வாயிற் கோபுரம் உடையது. கோட்டை மதிலில் வேறு பல யந்திரங்களும் உண்டு. இதற்கு உள்புறத்து உள்ளதே உள் மதில். சில கோட்டைகள் இயற்கை நீரரண் கொண்டவை. சில மலையரண் கொண்டவை. மற்றும் சில மேலிருந்து அம்பு எய்யும் பதுக்கிடங்கள் மதிலகத்தே அமைந்திருப்பன. இவற்றினுள்ளும் யந்திரம், பொறி முதலியன

யவனர்களால் அமைக்கப்பெற்றும் இருந்தன. யவனர் காவலும் இருந்ததென்று சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டுள்ளது.

இவ்விதக் கோட்டை மருதநிலத்து மதுரையில் இருந்தது. (சிலம்பு). குறிஞ்சிநாட்டுக் குறிச்சிகளில் முள் அரண்கள் இருந்தன. சிறப்பாக விலங்குகள் வாராதபடி அவை கட்டப்பெற்றிருக்கும். வேட்டை நாய்கள் காவல் இருக்கும். குறிஞ்சிப்பாட்டு "துஞ்சா முழவின் மூதூர் வாயில்........காவலர் கடுகினும் கதஞய் குரைப்பினும்..." எனக் கூறுதல் காண்க. நாட்டு எல்லைகளில் மலையரண்கள் மிகுதி. பாரியின் பறம்பு மலையும், அதிகமானின் தகடூரும், மற்ற வேளிரின் மலையரண்களும் இப்படிப்பட்டவையே. இவைகள் பெரும்பாலும் தமிழர் பண்டையநாளில் காட்டில் காத்த செயற்கை அரண்கள்.

இனி வடநூலார் அரணை ஒன்பது வகையினதாய்க் கூறுவர். ஒத்துப் பார்த்து ஆராயும் வகைக்கு அப்பாகுபாட்டை இங்கு எடுத்துக்கூறுவாம்: (1) களர் நிலவரண்—பிறர் உட்புக இயலாத பள்ளம், முள் கல் இவற்ருல் அமைக்கப்படுவது. (2) அகழியரண்—கோட்டையைச் சுற்றி ஆழமாக அகழி தோண்டி அமைப்பது. (3) மதிலரண்—செங்கல், கருங்கல், மண் முதலியவைகளால் சுவர் சூழ்வது. (4) காட்டரண்—பெரியமுள் மரக்கழு இவைகளால் அமைப்பது. (5) நிலவரண்—நீர் நிழல் இல்லாப் பெருவெளி. (6) நீரரண்—நீர்ப்பரப்பை உடையது. (7) மலையரண்—நீர் சூழ்ந்த மலையிலிருப்பது. (8) படையரண்—போர் வீரரால் சூழப்படல். (9) துணையரண்—சுற்றத்தாரால் காக்கப்படுவது (சுக்கிரநீதி). இப்பாகுபாட்டில் எண் அளவை மிகுதியே யொழிய தமிழர் கொண்ட பாகுபாட்டில் இவைகள் அடங்கும் என்க.

## தென்னாட்டுக் கோட்டைகள் (பொது வரலாறு)

தமிழ்நாட்டில் கோட்டைகள் ஏற்பட்ட வரலாற்றைப் பற்றிப் பொதுவாக ஒரு சிறிது கூறுவோம். முற்காலத்தில் தமிழர்கள் காடுகளை வெட்டி ஊர்களைக் கட்டிக்கொண்டு வாழ்ந்தார்கள். இயற்கையாகவே அவ்வூர்கள் தொடக்கத்தில் சிற்றூர்களாகவே இருக்கும். அவ்வூர்களைச் சுற்றிலும் வெட்டுப்படாத காடுகள் இருக்கும். அவைகளைச் சிறிது சிறிதாக அழித்து விளை நிலங்கள் ஆக்குவார்கள். சிற்றூர்கள் கட்டத் தொடங்கியவுடனே அவ்வூர்களுக்குப் போதுமான காவல் வேண்டியிருந்தது. சுற்றிலுமிருந்த காடுகளிலிருந்து கொடிய விலங்குகள் ஊர்களில் புகுந்து அழிவு செய்யக்கூடும். ஆகவே, அவ்வூர்களைச் சுற்றி முள் வேலிகள் இட்டார்கள். இவ்வகை முள் வேலியே பண்டைய கோட்டை அல்லது அரண். ஊர்கள் பெரியவைகளாக வளரத் தொடங்கும். தொழில்கள் செய்தலால் செல்வமும் ஏற்படும். செல்வத்தைக் கண்டு கள்வர்களும் வேறு நாட்டுப் பகைவர்களும் கொள்ளை கொள்ள முயல்வார்கள். அப்போது முள் வேலியினால் பயனில்லை. முள் வேலிக்கு மாறாக மண் கோட்டை கட்டுவார்கள். உயர்ந்த மண் சுவர் போதுமான காவல் அளிக்கும். அப்பேர்ப்பட்ட மண் கோட்டை ஊர்கள் இக்காலத்திலும் சில இருக்கின்றன. நிசாம் சீமையில் இருப்புப்பாதை ஓரத்தில் ஒரு மண்சுவர் சூழ்ந்த சிறு ஊர்க் கோட்டை கண்டேன். நெல்லைச் சரகத்தில் ஸ்ரீ வைகுண்டத்தில் கோட்டைப் பிள்ளைகள் வசிக்கும் அரண் இன்றும் மண்கோட்டையாகவே பழமையைச் சேமித்து வைக்கப்பட்டிருக்கிறது. கொங்கு நாட்டில் தாராபுரக் கோட்டையும் அந்தியூர்க் கோட்டையும் மண்கோட்டைகளே. நாள் ஆக ஆகப் போர்க் கருவிகள் வளர்ச்சியடைய மண்கோட்டை பயனற்

றுப் போகும். அப்போது மண்சுவர்களை இடித்துவிட்டுச் செங்கற்களால் மதில்களைக் கட்டுவார்கள். அப்படிப்பட்ட செங்கற்கோட்டைகள் தற்போது ஆர்க்காடு, சென்னை முதலிய இடங்களில் காணலாம். செங்கல்லும் பயனில்லை என்று எண்ணிப் பின்னர் கருங்கற்களால் கட்டினார்கள். மதுரை, தஞ்சை, வேலூர் முதலிய கோட்டைகள் அப் பேர்ப்பட்டவைகள். சில வெளியிடங்களில் தனிக் குன்று கள் இருக்கும். இவைகளை வெகு எளிதில் கற்கோட்டை கள் ஆக்கிவிடலாம். மலைகளின் மேல் எதிரிகள் ஏற முடியாத செங்குத்துப் பாறைகளைக் கல்மதில்களால் பாது காத்து மலையரண்கள் ஆக்க முடியும். இவைகளே நாட்டு எல்லைகளுக்கும் பெரும் பாதுகாப்பை அளிக்கவல்லவை கள். எடுத்துக்காட்டாக, தென்னாட்டில் அப்படிப்பட்ட கோட்டைகள் கணக்கற்று இருக்கின்றன. திண்டுக்கல், திருமெய்யம், திருச்சி, சங்ககிரி துர்க்கம், நாமக்கல், கிருஷ்ணகிரி, செஞ்சி முதலிய கோட்டைகள் அப்படிப் பட்டவைகளே. இவைகளைத் துர்க்கங்கள் என்பார்கள். வேலூரைச் சுற்றிப் பல மலைக்கோட்டைகள் இருக்கின் றன. இவ்வகையாகப் பல வகைப்பட்ட கோட்டைகள் தமிழ் நாட்டில் இருக்கின்றன.

### சிறப்பு வரலாறு

இவ்வாறாகப் பொதுவகையில் அரண் வளர்ச்சி பெற்ற வரலாறு இருக்கையில், இவ் வளர்ச்சியிலே தோன்றிய அடிப்படையான நிலைகள் இக் காலத்திலும் காணப்படுகின்றன அல்லவா? அது எப்படியெனில், கோயில்களின் வளர்ச்சியிலே அரசமரத்து மேடையி லிருந்து தொடங்கின கோயில் அமைப்பு, மிகவும் முதிர்ந்த சிற்பப் பண்புகளைக்கொண்ட எழுமதிற்

கோயில் வரை வளர்ச்சிபெற்றிருந்தும் அவ்வப் படிப் படியான கோயில் பண்புகளை இன்றைக்கும் காண் கிறோம் அல்லவா? மேலும் ஓருயிர்ப் பிறவியிலிருந்து ஆறுயிர்ப் பிறவிவரை, உயிர் வளர்ச்சி பெருகியிருந்த போதிலும் எல்லா வகை உயிர்களையும் இன்றும் பார்க் கிறோம் அல்லவா? அந்த முறையிலேயே அரண்களும் இருக்கின்றன. மக்களில் தாழ்ந்த நிலையிலிருந்து உயர்ந்த நிலை வரையில் மக்கள் பண்பாடுகள் இருக்கும் வரை யில் இவ்வித படிப்படி வேறுபாடுகளும் நிலைத்திருக்கும். அரண்களில் காணும் வளர்ச்சிமுறை சங்கத்தார் காலத்திலே முதிர்ச்சி பெற்றிருந்தது. அக்காலத்திலே குறிஞ்சிப் பாட்டில் கண்ட முள்வேலிச் சீறாரோடு மதுரைக் காஞ்சியில் கண்ட மதுரைக் கருங்கல் அரணும் இருந்தது. இந்தப் பண்பாடுகளைக் கொண்ட முதிர்ந்த சிற்பப்பணி, தமிழர்களாலேயே ஆக்கி இருந்தது எனல் வேண்டும்.

சங்கத்தார் காலத்தில் தலைநகர்களான கூடல், உறையூர், புகார் முதலான தலைநகர்களே சிறப்பாக வலிவுபெற்ற கோட்டை யரண்களாக ஆக்கப்பெற்றிருக்க லாம். எல்லைப்புறங்களில் வேளிர்களால் மலையரண் கள் கட்டப்பெற்றிருக்கலாம். பிறகு பல்லவர்கள் காலத்தில் காஞ்சியும், அதனைச் சார்ந்த மல்லை முதலிய துறைகளும் அரண்கள் ஆக்கப்பெற்றன. சைவ வைணவ சமய மேம்பாட்டுக் காலங்களில் (6,7 நூ.) பல அரண்கள் இருந்தன. திருமுறைகளிலே பல இடங்களில் மேற் கோள்கள் கிடைக்கின்றன. பிறகு விசயாலயச் சோழன் வம்சத்தில் அவ்வரண்கள் மிகவும் பெருகி இருக்கவேண் டும். இராசராசச் சோழன் எழுப்பின தஞ்சைப் பெருங்கோயிலும், இராசேந்திரன் கட்டிய கங்கை

கொண்ட சோளேச்சரமும், செயங்கொண்ட சோழன் கட்டிய செயங்கொண்ட புரமும், இறுதிச்சோழன் இராசராசனைக் கோப்பெருஞ்சிங்கன் சிறைப்படுத்திய சேந்தமங்கல அரண் கோயிலும் சோழர் ஆதிக்கத்தி லேயே (10-13 நூ.) கட்டப்பெற்றன. ஆனால் கோயில் தொடர்பு அற்ற அரண்களைக் கட்டின விவரம் நமக்குக் கிடைக்கவில்லை. இதனைப்பற்றிக் கல்வெட்டு ஆராய்ச்சி யிலேதான் புலப்படும்.

சோழ பாண்டியர்களுக்குப் பின்னர் தமிழ்நாட்டில் சிறப்புற்றோங்கியவர்கள் விசயநகரத்தார்களும் அவர்க ளுடைய பிரதிநிதிகளான நாயக்க மன்னர்களுமே ஆவர். விசயநகர மன்னர்கள் கட்டட வேலையில் மிகுந்த ஆர்வம் உள்ளவர்கள். இப்போது தென்னாட்டிலும் இராயலு சீமையிலும் மிகப்பெரிய கட்டடங்கள் எல் லாம் அவர்களும் அவர்களுடைய பிரதிநிதிகளுமே கட்டி னார்கள். மகத்தான சமய நிலையங்கள் அவர்களே எழுப்பி நாட்டிற்குப் புகழைத் தந்தார்கள். போர் இயலிலே அவர்கள் சிறந்தவர்கள். ஆகவே அரண்களை மிகுதியாகக் கட்டினார்கள். அவர்களுக்கு இயற்கை இடம் தந்தது. அவ்வுதவியை அவர்கள் போற்றிப் பெருக் கினார்கள். இராயலு சீமை என்னும் கருநாடதேயம் முழுதும் ஆங்காங்கே சிறுசிறு குன்றுகள் நாட்டுச்சமப் பரப்பில் ஓங்கிக் கிடக்கும். அக் குன்றுகளை மலையரண் களாக மாற்றியவர்களும் இவர்களே. ஆற்றோரங்களிலும் ஏரிக்கரைகளிலும் இயற்கை நீர் வசதிகளை வசப்படுத்திக் கொண்டு அருமையான வலிய கோட்டைகள் ஆக்கினார் கள். இப்படிப்பட்ட கோட்டைகள் தென்னாட்டில் பல கட்டப்பட்டன. நாம் தப்பாக ஐதர், திப்பு முதலிய முகம் மதியர்கள் கட்டினதாகச் சொல்வதெல்லாம் விஜயநகரத்

தார் கட்டினவையே ஆம். ஆர்க்காடு, வேலூர், கிருஷ்ணகிரி, சங்கரி, ஆற்றூர், செஞ்சி, பாலக்காடு, திண்டுக்கல் முதலிய கணக்கில்லாக் கோட்டைகள் விசயநகரத்துத் தலைவர்கள் கட்டினவையே. அவர்களுக்குப்பின்னர் அவைகளை முகம் மதியத் தலைவர்கள் பழுதுபார்த்துப் பயன்படுத்திக் கொண்டனரேயன்றிப் புதிதாக ஒன்றும் கட்டவே இல்லை. அதற்கு ஒரே ஒரு சான்று கூறினுற் போதும். மேற்கூறிய கோட்டைகளுள் எல்லாம் ஒவ்வோர் ஆலயம் இருக்கக் காண்பதே அச் சான்றாகும். மேலும் அனுமக்குறி, வராக இலச்சினை, தமிழ்க் கல்வெட்டுக்கள் முதலியவை களை அவர்களுடைய கோட்டைகளில் பொறித்து வைக்க விடுவார்களா? இனி ஆங்கிலர் தோன்றிய பிறகு சென்னைக் கோட்டை, தேவனும்பேட்டைக் கோட்டை என்ற இரண்டைத் தவிர வேறு ஒன்றையும் அவர்கள் கட்ட வில்லை. முன்னமே இருந்த கோட்டைகள் தற்காலத் திற்கு ஏற்காதென்றோ வேறு பல காரணங்களினலோ இடித்துத் தள்ளிவிட்டார்கள். நம் முன்னோர்கள் அருமையாக உண்டாக்கின சிற்பங்கள் அழிந்தன. இனி நமது தமிழ்நாட்டில் உள்ள குறிப்பிடத்தக்கதும் புகழ் உற்றனவுமான சில கோட்டைகளின் விவரங்களை நாடு வரிசையாக எழுதினுல் நலம் அல்லவா? ஆனல், இது வரை கிடைத்திருக்கும் விவரங்கள் முழுதும் எழுதினுல் கட்டுரை நீடிக்கும். ஆதலால், விரும்பத்தக்க சில குறிப்புக் கள் மட்டும் இங்கு எழுதப்படும்.

### தொண்டை நாடு

தெய்வத் தமிழ் வளர்த்த தொண்டைநாடு வீரத்தை யும் வளர்த்தது. பல்லவர் காலத்தில் தமிழ்ப்பண்பாட் டைச் சளுக்கிய நாட்டிற்குக் கொண்டு செலுத்தியது.

சிறந்த போர்வீரரைப் படைத்த தண்டுகொண்டு வாதாபித் தொன்னகரத்தைத் துகளாக்கிய பரஞ்சோதியார் என்ற சிறுத்தொண்டர் பல்லவர்க்காக வடபுலம் சென்று போர் புரிந்தார். அக்காலத்தில்தான் பல்லவர் அருமையாக அமைத்த குடைகோயிற் சிற்பத்தை அவர் மூலமாக சளுக்கியர்கள் அறிந்தார்கள். அதேகாலத்தில்தான் அவர்களும் வாதாபி மதில் மலையில் குடைகோயில்கள் தோண்டத் தொடங்கினர்கள். அதற்குப் பிரதியாக அத்தொண்டர் வாதாபி கணபதியைத் தெற்கே கொணர்ந்தார். குடைக்கோயிலும் மலையரணும் அப்போதே இரு நாடுகளிலும் தொடங்கின. மாமல்லை, திருக்கழுக்குன்றம், வல்லம், மாமண்டூர், குரங்கணின் முட்டம் முதலிய இடங்களில் மலைகள் குடையப்பெற்றுக் கோயில்கள் ஆயின. அக்கோயில்களேயன்றி மலைகள், அரண்கள் ஆக்கப்பெற்றன. சில அரண்கள் சிறப்பாகத் தொண்டைநாட்டில் ஏற்பட்டன. அவற்றுள் சிலவற்றைக் கூறுவாம்.

## வேலூர்க் கோட்டை

இது பாலாற்றுக்குத் தென் கரையில் உள்ளது. அகழி சூழ்ந்த கருங்கல் மதில்கள் நான்கால் சதுரமாக ஆக்கப்பெற்றது. அகழிக்குப் பாலாற்றிலிருந்து நீர்க்கால் உண்டு. கருங்கற் சுவர்கள் மிக வலிமையுடையதாய்க் கொத்தளங்களையும் உள் அறைகளையும் பீரங்கிகள் வைத்துச் சுடவல்ல துளை அமைப்புகள் கொண்டவைகளாய் உள்ளன. அந்தப் பீரங்கித் துளைகள்கொண்ட மதிலின் கைப்பிடிகள் அழகாகப் பாதிபாதி வடிவினதாய் அமைந்த கற்களால் கட்டப்பட்டுள்ளன. மேற்குக் கொத்தளத்தில் கொடிமரம் கட்டப்பட்டது. அகழியின்மீது முன்னுளில் அசைவுப்பாலம் இருந்தது. இப்போது கற்பாதை



வேலூர்க் கோட்டை

[பக்கம் 38

போடப்பட்டுள்ளது. இக்கோட்டை கட்டின விவரத்தைப்பற்றிப் பல கதைகள் உண்டு. பத்திராசலத்திலிருந்து வந்த பொம்மிரெட்டி திம்மிரெட்டி என்பவர்கள் கட்டி அதனை ஆண்டதாகக் கூறுவர். கோட்டைகட்டின பொம்மிரெட்டி உள்ளே உள்ள அருமையான கோயிலையும் கட்டினும். இக்கோயில் சலகண்டேசுரர் கோயில். கோயில் மூர்த்தி நீர்மட்டத்துக்குக் கீழே இருப்பவர். ஆகையால் அப்பெயர் வந்தது. கல்யாணமண்டபம் மிக அருமையான சிற்ப வேலைப்பாடுகொண்டது. வேலை நுணுக்கத்தைக் கண்டு ஆங்கிலச் சிற்பிகள் மிகவும் நன்ருகப் பாராட்டியுள்ளார்கள். கோயில் கோபுரம் மிகப் பெரியது. இரு புறங்களிலும் இரண்டு பெரிய துவாரபாலகர்கள் நிறுத்தப்பட்டிருக்கிருர்கள். இக்கோயிலையும் கோட்டையையும் கட்டின பொம்மிரெட்டி, ஒரு கனவில் பெற்ற ஆணையின் நிமித்தம் கோயிலை விசயநகரத்து இராயருக்குக் கொடுத்தானும். ஆகவே, இதற்கு இராயவேலூர் என்ற பெயர் வந்ததாம். 1550-ல் ஆண்ட வேங்கிடராயனுக்கு ஊழியப் பெண்ணிடம் கிருஷ்ணதேவன் பிறக்க அக்குழந்தையைக் கொன்றுவிடும்படி ஆணையிடப்பட்டது. ஆனல், அக்குழந்தை எவரும் கொல்லாமல் விடப்பட வண்ணுன் ஒருவனும் சக்கிலியன் ஒருவனும் அவனை வளர்த்தார்கள். 1586-ல் அச்சிறுவன் பட்டம் பெற்ருன். பின்னர் தன்னைக் காப்பாற்றின இருவருக்கும் இரண்டு கோட்டைகளை அவன் கொடுத்தானும். அவைகளே இப்போது வண்ணுன் கோட்டை, சக்கிலியக் கோட்டை என்று வழங்குகின்றனவாம். பதினைந்தாம் நூற்ருண்டில் பீஜப்பூர் சுல்தான் வேலூரைக் கைப்பற்றி அதில் மகம்மது கான் என்பவனைத் தலைவனுக நியமித்தான். அதுமுதல் கோயில் பூசை நின்றது. 1676-ல் துக்கோஜிராவ் இக்

கோட்டையைப் பிடித்து அருகில் சேண்பாக்கத்தில் விநாயகர் கோயில் கட்டினான். பிறகு, ஔரங்கசீப் காலத்தில் ஜுல்பீகர்கான் இதனை வசப்படுத்தினான். பிறகு, சில ஆண்டுகள் மராட்டியர் முகம்மதியர் இவர்களுக்குள் கைமாறிக்கொண்டே இருந்தது. 1708-ல் தாவுத்கான் இதனைப் பிடித்தான். அதுமுதல் ஆர்க்காட்டு நவாப்புக்கள் கைக்குள் சேர்ந்துவிட்டது. கோட்டைக்குள் இடம் விசாலமானது. அரண்மனை முதலிய கட்டடங்கள் இப்போது ஆபீசுகள் ஆகிவிட்டன. மைசூர் போருக்குப் பிறகு திப்புவின் குடும்பத்தார் இங்கே சிறை வைக்கப்பட்டிருந்தார்கள். 1806-ல் நடந்த சிப்பாய்க் கலகத்திற்குப் பிறகு அவர்கள் கல்கத்தாவிற்கு வெளியேற்றப்பட்டார்கள். வேலூருக்குச் சுற்றிலும் மலைத்தொடர்கள் இருக்கின்றன. அவைகளின்மீது நான்கு கற்கோட்டைகள் கட்டப்பட்டுள்ளன. ஏறுவது கடினம். வேலூர்க் கோட்டையில் சிறப்பாகப் பார்க்கக்கூடியது கல்யாண மண்டபத்துச் சிற்பங்களே. முகட்டில் தாமரைவிதானங்கள், தூண்களில் விசித்திர விலங்குகள் பலவாய்ப் பிரிக்கப்பட்ட சிறு தூண்கள், பல்லி தேள் முதலிய சிறு உருவங்கள் முதலியன பார்க்கத்தக்கவை. சிவமூர்த்தங்கள், புராண இதிகாசக் கதைகள், இவைகள் வெகு நுணுக்கமாகச் சித்திரிக்கப்பட்டுள்ளன. பல உருவங்கள் அழிக்கப்பெற்றும் இருக்கின்றன. தற்போது மூலத்தானங்களில் மூர்த்திகளும் இல்லை. பூசை நடைபெறுவதும் இல்லை. ஓர் அருமையான நிலவறை நிலத்தின்கீழே கட்டப்பட்டுள்ளது. அதில் போர்க்காலங்களில் மூர்த்திகளும் விலையுயர்ந்த நகைகளும் அடைக்கப்பட்டிருந்தனவாம்.

## ஆர்க்காடு

ஆர்க்காட்டுக்கோட்டை பாலாற்றின் தென்கரையில் உள்ளது. இது ஆற்றையே அகழியாகக் கட்டப்பட்ட தொரு பெரிய கோட்டை. 18-ம் நூற்றாண்டில் தென்னாட்டை முகம்மதியர்கள் பிடித்த காலத்தில் கர்நாடக நவாப்பிற்கு ஆர்க்காடு தலைநகராக இருந்தது. கிளைவ் என்ற ஆங்கிலன் இதனைப் பிடித்த பிறகு இதன் சிறப்புப் போய் விட்டது. பாலாற்றின் ஓரமாக ஆத்தி மரங்கள் (ஆர்) நிறைந்த காடு இருந்ததினால் இவ்விடத்திற்கு ஆர்க்காடு என்ற பெயர் வந்தது என்று பண்டைய நூல் ஆராய்ச்சி யாளர் கூறுகின்றனர். பிற்காலத்து மக்கள் ஆறு காடுகள் (ஷடாரணியம்) இருந்தன என்றும், அதனால் ஆறுகாடு என்ற பெயர் ஏற்பட்டதென்பர். இவ்வூருக்கு மேலும் கீழும் ஆற்றங்கரை யோரமாக ஆறு கோயில் உண்டு என்பது அதற்கேற்ற ஒரு குறிப்பு. ஆர்க்காட்டுக் கோட்டையையும் பொம்மிரெட்டி, திம்மிரெட்டி என்பவர் களே கட்டினதாகக் கதை உண்டு. விசயநகரத்து ஆட்சி யில் இக்கோட்டை செஞ்சி நாயக்கருடைய ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. 18-ம் நூற்றாண்டில் முகம்மதியர்கள் தென்னாட்டைப் பிடித்துக் கருநாடகத்திற்கு நவாப்பாக ஏற்படுத்திய தாவூத்கான் செஞ்சியைவிட ஆர்க்காடு நலமாக இருக்கிறதென எண்ணி இதனைத் தலைநகர் ஆக்கிக் கொண்டான். கோட்டையையும் பலவிதங்களில் உறுதிப் படுத்திப் பெருக்கி, புது மாளிகைகளைக் கட்டி, பேட்டை யில் 18 தெருக்களை அமைத்து, அவைகளுக்குத் தன் படைத்தலைவர்களின் பெயர்களைக் கொடுத்து, ஆர்க்காடு நகரத்தை மேன்மைப்படுத்தினான். முகம்மது அலி என்ற வன் எதிர்க்கரையில் தன் பெயரால் வாலாஜாபேட்டை யைக் கட்டினான். செஞ்சி இளவரசன் தேசிங்குராஜன்

போரில் இறந்துபட, அவன் இளவரசி உடன்கட்டை ஏறினதைக் கண்டு வியந்த நவாப் அவள் பெயரில் எதிர்ப் புறத்தில் ஓர் ஊர் அமைத்து அதற்கு இராணிப்பேட்டை என்று பெயர் தந்தான். நவாப்புகள் காலத்தில் ஆர்க் காட்டில் 360 மக்கான்கள் இருந்தன. நகரைச்சுற்றி ஐந்து கல் நீளம் கொண்ட மதில் இருந்தது. மதிலின் அடிப் பகுதியின் கனம் 24 அடியும், மேலே 12 அடியும் கொண் டது. அதில் ஐந்து வாயில்கள் உண்டு. வடக்கு வாயில் பாலாற்றில் இறங்குவது. அது டில்லி வாயில் என்று பெயர். இப்போது அது ஒன்றுமட்டும் அழியாமல் நிற்கிறது. ஏனைப் பகுதிகள் அழிக்கப்பட்டன. வெளிக் கோட்டையின் நடுவில் உட்கோட்டை ஒன்று இருந்தது. அதனைச் சுற்றிலும் தனி அகழியும், உள்ளே அரண்மனையும் இருந்தன. அக்காலத்து வாவி, பள்ளிவாசல் முதலியவை களை இன்றும் காணலாம். இப்போது கோட்டைவெளி விளைவுநிலம் ஆகிவிட்டது. 1811-ல் மிஞ்சியிருந்த கட்ட டங்கள் அழிக்கப்பட்டன. முகம்மது அலி அதற்கு முந்தியே ஆங்கிலரின் அடைக்கலம் புகுந்து சென்னைக்குக் குடிபோய்விட்டான். அவனுடைய உறவினர்களும் அவ னுடனே ஏகிவிட்டனர். ஆர்க்காட்டின் பண்டைய செழிப்புப்போய் அது பாழ்நகரம் ஆயிற்று. சில நவாப்பு களின் சமாதிகள் தான் இருக்கின்றன. சாதுல்லாகானின் சமாதி 50 அடி உயரமான வட்டமான சிகரத்தைக் கொண் டுள்ளது. பச்சைக் கல்லால் ஆக்கப்பட்டது. அருகிலே கட்டப்பட்ட ஜும்மா மஜீது ஜப்பிள்கானால் தொடங்கப் பட்டுப் பின்னால் அனுவருதீனால் பெரிதாக்கப்பட்டது. சுற்றிலும் பல சமாதிகள் இருக்கின்றன. குடியிடங் களுக்கு இடைகளில் எல்லாம் சமாதிகளே உண்டு. 'திப்பு அவுலியர்' என்ற பக்கிரியின் சமாதி புனிதச் சின்னமாகக்

கொண்டாடப்படுகிறது. ஒரு நவாப் ஆற்றிற்கு எதிரே மூன்று கல் நீட்டம் வரையில் ஒரு பெரிய படித்தோப்பு வைத்து அதற்கு 'நவ்லாக்' (9 லட்சம்) தோப்பு என்று பெயர் தந்தான். அதில் சோழர்கள் கட்டின கோயில்கள் இரண்டு இருந்து மறைந்துவிட்டனவாம். மற்ற நான்கு கோயில்களும் பூங்காடு, வேப்பூர், விசாரம், வன்னிமேடு என்பன. அவையே ஆறு கோயில்களாம். ஆர்க்காட்டு நவாப் பட்ட உரிமையைக் குறித்துப் பெரும்போர் நடந்த போது முகம்மது அலி திருச்சியில் இருந்தான். அப்போது கிளைவ் என்ற ஆங்கிலக் கணக்கன் போர்வேடம் பூண்டு ஆர்க்காட்டில் புகுந்தான். 1751-ல் முற்றுகை தொடங்கியது. அதில் கிளைவ் வென்றான். அதன் பிறகு ஆர்க்காடு ஆங்கிலர் வசம் சேர்ந்துவிட்டது. அதற்குப் பின்னரே ஆர்க்காடு தன் பெருமையை இழக்கத் தொடங்கிற்று.

## சாத்துக்குடிக் கோட்டை

சாத்துக்குடி வட ஆர்க்காடு வட்டத்தில் மலைகள் அடர்ந்த செழிப்பான நிலத்தில் உள்ளது. இதனை உருதுவில் 'சாத்கட்' என்பர். அதன் பொருள் ஏழு வீடு என்பது. இங்கே ஏழு குன்றுகள் தொடர்ந்து நிற்கின்றன. அவைகளில் ஏழு மலைஅரண்கள் கட்டப்பட்டுள்ளன. ஏழிற்கும் மலைமேலேயே பாதைகள் உண்டு. ஆனால் அவைகள் மிக நெருக்கடியானவை. சாத்துக்குடியைத் தெலுங்கில் 'ஏடு கொண்டல துர்க்கம்' என்கிறார்கள். குன்றுகளின்மீது ஆலயங்களும் ஆலயங்களைச் சுற்றி மண்டபங்களும் நீர்நிலைகளும் இருக்கின்றன. ஆகவே இவைகளைக் கட்டின மன்னர்கள் இந்து மன்னர்களே என்க. அவர்கள் விஜயநகரத்து நாயக்கர்களாக இருக்கவேண்டும். சிலர் மராட்டி

யர் என்கின்றனர். பொது மக்கள் நினைக்கின்றது போல முகம்மதியர்கள் அல்ல. இம்மலைகளைப்பற்றி ஒரு கதை உண்டு. ஒரு கோட்டையில் அழகிய ஒரு பிள்ளையார் உருவம் இருந்ததாம். அதன் பீடத்தில் "தலையைத் திருகிப் பணத்தை எடு," என்று எழுதப்பட்டிருந்ததாம். பலபேர் நரபலி இடவேண்டும் என்று எண்ணிக் காத்திருந்தனர். சமயம் வாய்க்கவில்லை. ஓர் அறிஞரான துறவி அதனைப் படித்து, உண்மை அறிந்து அப்பிள்ளையாரின் தலையாகிய யானை முகத்தைத் திருகினாராம். அது திருகிற்று. உள்ளே உடல் பொந்தாக இருந்தது. அதில் நிரம்பத் தங்கக் காசுகள் இருந்தன. அதனை எடுத்துச் சென்றனராம். தென்னாட்டு முகம்மதியர் கையில் அகப்படவே இந்தக் கோட்டைகளை முகம்மதலி என்ற ஒருவனுக்கு ஜாகீர் ஆக டில்லிபாட்சா கொடுத்தானும். இறுதியில் அது நவாப் வாலாஜா கைக்கு வந்ததாம். இக் கோட்டைகளுள் மிக உயர்ந்தது 2,367 அடி கொண்டது. ஏறுவது மிக்க கடினம். சுவையில் விருப்பம் கொண்ட ஆர்க்காட்டு நவாப் இக் கோட்டைகளுக்கு அருகில் அருமையான கிச்சிலித் தோட்டங்களை வைத்துப் பயிரிட்டான். இவைகளே பேர்போன சாத்துக்குடி ஆரஞ்சு எனப்படும். இப்போது கோட்டைகளின் பெருமையைக் காட்டிலும் ஆரஞ்சின் பெருமையே உலகெங்கும் பரவிக்கிடக்கிறது.

## செங்கற்பட்டுக் கோட்டைகள்

தென்இந்திய இருப்புப்பாதையில் செங்கற்பட்டு நிலயத்தைத் தாண்டிப் பாலாற்றைக் கடந்து செல்லுகையில் மதுராந்தகத்திற்கு முன்னடியே ஒரு கோட்டையின் பாழடைந்த மதில்கள் தெரிகின்றன. நாற்புறமும் அகழியால் சூழ்ந்து இடையில் கருங்கற்களால் கட்டப்பெற்ற

வலிவுள்ள கோட்டை அதுவாகும். அக்கோட்டையின் பல பகுதிகள் இடிந்து கிடக்கின்றன. இருப்புப் பாதையும் அக்கோட்டைக்குள் புகுந்தே செல்லுகிறது. மதில்களுக் குள் வெட்டவெளியான ஒரு மேட்டைத் தவிர, பிற எதுவும் தென்படுகிறதில்லை. அகழியும் மதுராந்தகத்து ஏரியின் கழிவுநீர் வாய்க்கால்களான இயற்கைக் காட்டாறு களாலே நிறுவப்பெற்றது. பழைய கோட்டைக்குள் இருந்த கட்டடங்கள் எல்லாம் மறைந்து தற்போது வெறும் நிலமாக இருக்கின்றது. மதிற்சுவர் வலிவுள்ள பெரிய கரியகற்களால் ஆக்கப்பெற்றிருப்பதே வியப்பைத் தரக்கூடியது. இதனைக் கருங்குழிக் கோட்டை என்பர்.

மேலும் செங்கற்பட்டு ஊருக்கும் ஏரிக்கும் இடை யில் இருப்புப்பாதை நிலையத்திற்கு வடக்கே செங்கற் பட்டுப் பழைய கோட்டை இருக்கிறது. இதற்கு ஏரி நீரே அகழியாக இருக்கிறது. மதில்கள் கருங்கற்களால் கட்டப்பெற்றவை. இக் கோட்டையை இப்போது சிறுவர் சிறைச்சாலை (சீர்திருத்தச்சாலை)க்காகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். கோட்டை வாயிலுக்கருகே சிறு கோயிலும் உண்டு. இக் கோட்டையைக் காக்கும் ஏரி மிகப் பெரியது. கிழக்கே உள்ள வல்லக்குன்றுகள் வரை எட்டியிருக்கிறது. அக்குன்றுகளின் பண்டைப் பல்லவக் குகைகள் உண்டு. இவ்வேரியும் கோட்டையும் மிகப் பழமை பெற்றவைகள் என அறியவேண்டும்.

### செஞ்சிக் கோட்டை

இது மிகவும் புகழ்பெற்ற கோட்டை. நாட்டுப் பாட லில் போற்றப்படும் புகழைப் பெற்றது. திண்டிவனத்தி லிருந்து மேற்கே திருவண்ணாமலைக்குப் போகும் வழியில் 16-ம் கல்லில் இருப்பது. இதனை முகம்மதியர் ‘நஸ்வத்

கட்டா' என்று பெயரிட்டிருந்தார்கள். கோட்டை முக்கோணமாக நிற்கும் மூன்று குன்றுகளை இணைத்துக் கட்டப்பெற்றது. மலைகளைச் சுற்றிலும் மலைமீதும் கணக்கற்ற மண்டபங்களும் மற்றக் கட்டடங்களும் இருக்கின்றன. இம்மலைகள் ஏனைய மலைகளைப்போல ஒற்றைப் பாறையால் அமைக்கப்பட்டவையல்ல. பெரிய கற்கள் இராசிபோலக் குவிந்த வண்ணமாக அம்மலைகள் தோன்றும். கற்கள் எங்கு உருண்டு விழுமோ என்று அஞ்சத் தகும் நிலையில் இருக்கின்றன. மதில்களில் கொத்தளங்கள் பீரங்கித் துளைகள் முதலியவை உண்டு. வெளிமதில் 60 ஆழக் கனமும், அகழி 80 அடி அகலமும், கொண்டவை. மலைச் சிகரங்களுக்குச் செதுக்கப்பட்ட படிகள் உண்டு. உச்சி சேர்வதற்குள் முழங்கால் வலியெடுத்துவிடும். கிருஷ்ணகிரி, சந்திரராயன் கிரி, இராசகிரி என்பன முக்கிரிகளின் பெயர். நான்காவது ஒரு சிறு கோட்டைக்குச் சக்கிலி துர்க்கம் என்று பெயர். இராஜகிரி கடல்மட்டத்தின்மேல் 968 அடி உயரமும், நிலமட்டத்திற்குமேல் 800 அடியும் உள்ளது. ஒருபுறம் தவிர மற்றப் புறங்கள் ஏறமுடியாத செங்குத்து. உச்சியில் ஒரு பெரும் பிளவு 24 அடி அகலமும் 60 அடி ஆழமும் கொண்டிருக்கிறது. இதற்கு ஒரு குறுகிய பாலம் உண்டு. இங்கே 10 பேர் இருந்து கொண்டு 10,000 பேரையும் எதிர்க்க முடியும். கிருஷ்ணகிரியில் அழகிய மண்டபங்கள் இருக்கின்றன. அங்கே தென்றல் காற்று சில் என்று வீசி மனத்திற்கு அமைதியைத் தருகிறது. கோட்டைகளுக்குள் கொலு மண்டபங்கள், படை வீடுகள், நீர்த்தொட்டிகள், மலர் வாவிகள், மருந்துச்சாலைகள், தானியக் களஞ்சியங்கள் முதலியன உண்டு. அரண்களில் இதைப்போலச் சிறந்தது தென்னாட்டில் எங்கும் இல்லை எனலாம்.

இக் கோட்டையின் வரலாறு மிக வியப்பானது. விசய நகரத்தாரின் மிகச் சிறந்த கோட்டை இதுதான். இது தனி இராஜதானியாக இருந்து ஒரு நாயக்கனின் ஆளுகையில் இருந்தது. 1644-ல் செஞ்சி முகம்மதியர்கள் வசம் சென்றது. 1677-ல் சிவாஜி செஞ்சியைப் பிடித்தான். உடனே அக்கோட்டையைப் பலவகையிலும் பலப்படுத்தி அழகும் செய்தான். வடக்கே யிருந்து டெல்லி பாட்சா ஔரங்கசீபு தென்னாட்டின்மீது படையெடுத்துக் கோல் கொண்டாவைப் பிடித்தபிறகு, செஞ்சியின்மீது சென்றான். 1691-ல் தொடங்கின முற்றுகை பல ஆண்டுகள் நடந்து முடிவில் வஞ்சனையால் கோட்டை பிடிபட்டது. அது கருநாடகத்திற்குத் தலைநகராக 1716 வரையில் இருந்தது. பிறகு உடல்நலக்குறைவால் ஆர்க்காடு தலைநகர் ஆகக் கொள்ளப்பட்டது. 1713-ல் செஞ்சித் தலைவனாக இருந்த 'தேஜ் சிங்கு' என்ற வீரன் ஆர்க்காட்டு நவாப்பிற்குக் கப்பம் கட்டவில்லை. நவாப் சாதத்துல்லாகான் செஞ்சியின்மீது படையெடுத்தான். தேஜ்சிங்கு தன்குல தெய்வமாகிய சிங்கவரம் இரங்கநாதரைத் துதித்துவிட்டு இராணியிடம் விடைபெற்றுக் கொண்டு போருக்குச் சென்றான். போர் ஐந்துகல் தொலைவில் நடந்தது. தேஜ்சிங்கு போரில் கொல்லப்பட்டான். இராணி உடன்கட்டை யேறினாள். இவள் பெயரால்தான் இராணிப்பேட்டை கட்டப்பட்டது. இந்தப் போர்தான் தேசிங்கு ராஜன் கதையில் பாடப் பெறுவது.

1750-ல் பிரஞ்சுக்காரர்கள் இதனைப் பிடித்துக் கோயில்களில் இருந்த தூண்களைக் கொள்ளை யடித்துக் கொண்டு போய்விட்டார்கள். அடுத்த ஆண்டில் ஆங்கிலர் அதனைப் பிடித்தார்கள். 1780-ல் ஹைதர் அலி இக் கோட்டையைச் சிறிது காலம் பிடித்து வைத்திருந்தான்.

ஆங்கிலர் வசம் ஆனபிறகு இக்கோட்டையை எவரும் கவனிக்கவில்லை. பல கொள்ளைக்காரர்கள் அதன் அழகிய சிற்பங்களை எடுத்துப் பாழாக்கி விட்டார்கள். இராஜகிரியின் மேலே ஏறினால் உச்சிக்கருகில் ஒரு புளியந்தோப்பு இருக்கிறது. இங்கே 'கமலக் கண்ணியம்மன்' கோவில் இருக்கிறது. கோயிலுக்கு முன்னால் ஒரு பெரிய பலகைக் கல்லில் ஒரு வில், ஐந்து அம்புகள், எருமை, ஒரு ஆடு, நான்கு மனிதத்தலைகள் செதுக்கப்பட்டிருக்கின்றன. இவைகள் முன் ஒரு காலத்தில் பலியிடப்பட்டவைகளோ என்று எண்ண இடமுண்டு. உச்சி மண்டபத்தில் சில பீரங்கிகள் இருக்கின்றன. சக்கிர குளத்திற்கு அருகில் தேசிங்கு ராஜன் தகனம் செய்யப்பட்டான். அருகில் ஒரு பெரிய அனுமார் உருவம் இருக்கிறது. இன்னும் கோட்டைக்குள் பல ஆலயங்களும் மண்டபங்களும் உண்டு. விரிக்கில் பெருகும்.

சோழநாட்டுக் கோட்டைகள்

சோழ நாடு காவிரி நதியால் பாயப்பெற்ற ஒரு நெற்களஞ்சியம். காவிரி கணக்கற்ற பிரிவுகளாகப் பிரிந்து சோழநாடு முழுதும் பாய்கிறது. எங்கும் மலையென்ற பேச்சே கிடையாது. நிலம் முழுதும் மருதநிலம். மக்கள் உழவுத் தொழிலிலேயே பிழைக்கும் குடிகள். போர் என்பதை அறியாதவர்கள். வெளிநாடுகளிலிருந்து இந்த இடத்திற்கு எந்த வெளியானும் வரமாட்டான். ஆகவே போர் அறியாத நாட்டிலே அரண் எதற்கு வேண்டும். அந்தக் காரணத்தினால் சோழ நாட்டில் கோட்டைகள் ஏற்படவில்லை. கோட்டை என்ற பெயர் பெற்ற ஊர்களிலும் கோட்டைகளைக் காண்பது அரிது. ஆகவே தலைநகர்களில் தான் அரண்மனைகளைக் காப்பதற்காகக் கோட்டைகள் ஏற்பட்டன. இவைகளும் மிகச் சிலவே. அவைகளில் ஒன்றிரண்டை இனி விவரிப்போம்.

### தஞ்சைக் கோட்டைகள்

தஞ்சாவூர் தற்போது தஞ்சை வட்டத்தின் தலைநகர். காவிரி ஆற்றின் ஒரு கிளை நதியாகிய விண்ணாற்றின் தெற்குக் கரையில் இருப்பது. அவ்வாற்றிற்கும் புது இராஜ வாய்க்காலுக்கும் இடையில் இருப்பது இப்பெருநகர். விஜயாலயச் சோழ வம்சத்தின் (9, 13-ம் நூற்றாண்டு) தலைநகராவும், பின்னர் நாய்க்க மன்னர் (15, 16 நூ.), பின் மராட்டிய மன்னர் (17, 18 நூ.) தலைநகராகவும் இருந்தது. சில பகுதிகள் மிகப் பண்டையவை. தஞ்சைத் தளிக்குளம் அப்பர் சுவாமிகள் பாடலில் வைப்புத்தலம் ஆகும். தஞ்சை மாமணிக் கோயில் திருமங்கை மன்னன் பாடல் பெற்றது. ஆகவே இவை (7, 8-ம் நூற்றாண்டில்) இருந்தன. விஜயாலயன் தஞ்சையை (9-ம் நூற்றாண்டில்) பெரும்பிடுகு முத்தரையனிடம் கவர்ந்தான். அதுமுதல் அது சோழர் தலைநகர் ஆயிற்று.

தஞ்சையில் இரண்டு கோட்டைகள் இருக்கின்றன. சிறு கோட்டை அல்லது சிவலிங்கக் கோட்டை சேவப்ப நாயக்கன் கோட்டை எனப்படும். இதில் பெரிய கோயில் இருக்கிறது. பெரிய கோட்டை ஊர் நடுவில் இருக்கிறது. இதில் அரண்மனைகள் இருக்கின்றன. இதை வீரராகவன் கோட்டை என்பர்.

சிவகங்கைக் கோட்டை சுற்று அகழியும் அதற்கடுத்து உள்ளே பலமான கருங்கல் மதிலும் கொண்டது. இதற்குள்ளே சிவகங்கைக் குளமும் அதன் கரையில் தஞ்சைத் தளியார் திருக்கோயிலும் உண்டு. மிஷனரி சுவார்ட்ஸ் கட்டின கிறிஸ்துவ ஆலயமும் இருக்கிறது. இக் கோட்டையின் பெரும்பகுதி பெரிய கோயிலாகும். இதனை இராசராசன் I ஏழுவருடங்களில் கட்டி முடித்தான். அதன் அளவு

793 × 397 அடி. விமானம் 216 அடி உயரம் 14 நிலை கொண்டது. அடிப்பகுதி 96 அடி சதுரம். சிகரத்தில் வட்டக் கலசம் 25½ அடி சதுரமுள்ள ஒரே கல்லின்மீது கட்டப்பட்டது. இவைகளில் உள்ள நந்திகள் 6½ × 5½ அடி ஒரே கல்லால் ஆக்கப்பட்டவைகள். இராஜராஜேசுரலிங்கம் மிகப் பெரியது. அளவினால் பெரியாவுடையார் என்ற பெயர் உற்றது. மேலும் கோயிலுக்குள் முருகன்கோயில் அம்மன்கோயில் முன் நந்திமண்டபம் முதலியவை உண்டு. இக்கோயிலினுடைய சிறப்பு மிக்க புகழ்பெற்றது.

பெரியகோட்டை 530 ஏகரா நிலம் கொண்டது. மதில்கள் 151 அடி உயரமானவை. 15 அடி கனமும் காதக் கணக்கில் நீளமும் கொண்டவை. இப்போது தூர்த்துவிடப்பட்டது. மதில்களுக்குள் பல கட்டடங்களும் நான்கு பெருந் தெருக்களும் உண்டு. கீழ்க்கொத்தளத்தின் மேல் 24 அடி நீளமுள்ள பீரங்கி இருக்கிறது. ஊருக்குள் 74 கோயில்கள் உண்டு. உள் மதிலுக்குள்ளே ஒழுங்கற்ற முறையில் கணக்கற்ற கட்டடங்களை அவ்வக் காலத்து அரசர்கள் மனதிற்குத் தோன்றியபடி கட்டியிருக்கிறார்கள். உள்ளே எட்டு நிலைகள் கொண்டதும் 190 அடி உயரமுமுள்ள கூடகோபுரம் இருக்கிறது. அதனை அடுத்து ஆறு நிலை கொண்ட மாடமாளிகை என்ற மற்றொரு கோபுரம் இருக்கிறது. மேலும் இரண்டு கொலு (தர்பார்) மண்டபங்கள் இருக்கின்றன. ஒன்று நாயக்கர், மற்றொன்று மராட்டியர் கட்டியது. இவைகளைத் தவிர ஒரு பெரிய நூலகமும் உண்டு. ஆயுதசாலை ஒன்று இருந்தது. அது இப்போது எடுபட்டுப் போய்விட்டது. மராட்டியருடைய சந்ததியார் பெயரளவில் ராஜா என்ற பட்டம் வகித்துக்கொண்டு சில பழைய கட்டடங்களில் வசிக்கிறார்கள். ஆலய தர்மகர்த்தா என்று ஒரு

பட்டம்மட்டும் மீந்து நிற்கிறது. கவனிப்பார் இன்றி பெரிய கோட்டையில் உள் இடங்கள் மிகுந்த சீர்கெட்ட நிலையில் இருக்கின்றன.

### வல்லத்துக் கோட்டை

வல்லம் என்ற ஊர் தஞ்சைக்குத் தெற்கே கல்லில் மேட்டுப்பாங்கான இடத்தில் உள்ளது. இப்போது தஞ்சை வட்டத்தலைவர் இருப்பிடமாக உள்ளது. இதனருகில் உள்ள கரும்பாறை மேடுகளில் பளிங்குக் கற்கள் அகப்படுகின்றன. அவைகளைச் செதுக்கிச் சாணையிட்டு அருமையான மூக்குக் கண்ணுடித் தட்டுக்கள் ஆக்குகின்றனர். இம் மேட்டில் பண்டைக்காலத்தில் ஒரு வலிவான கோட்டை கட்டப்பெற்றிருந்தது. அதில் மறவர்பேரால் வீரர்படை வைக்கப்பெற்றிருந்தது. தஞ்சை தலைநகராக இருந்த ஆட்சிகளிலே இவ்வூர்க் கோட்டை அதற்குத் துணைப்பலமாக இருந்தது. இக் கோட்டைக்கு நீர் ஆதாரமாக இருந்த தீர்த்தம் வெகு ஆழமானதும் மிகத் தெளிவான நீர் கொண்டதும் மேல் இருந்து அடிவரை கரிய பாறைகளால் வெட்டப்பட்டதாகவும் உள்ளது. இதன் பெயர் வைரவ தீர்த்தம் என்பது. வல்லம் முக்குலத்தோர் நாட்டில் உள்ளது. இதற்கு அவர்களே தலைவர்களாக இருந்தனர். மறவர்களுக்குள் வல்லத்தரசு என்ற ஒரு குலப்பெயர் இருத்தலும் காண்போம்.

இனி வல்லத்தைத் தவிர அந் நாட்டில் வேறு சில அரண்களும் உண்டு. கந்தருவன் கோட்டை, பட்டுக் கோட்டை, தம்பிக் கோட்டை முதலியன இருத்தல் காண்போம். இங்கே இருந்த கோட்டைகளும் அழியும் நிலையில் இருக்கின்றன.

TAMIL NADU ARCHIVES No. 105841 MADRAS-600 008

**திருச்சிராப்பள்ளி மலைக்கோட்டை:**

இம்மலைக்கோட்டை மிகவும் பெயர்பெற்றது. சோழ நாட்டில் தனிக் குன்று ஒன்றை, மலையரணாக்கியது இஃது ஒன்றே என்று கூறலாம். காவேரிக்குத் தெற்கே வெகு அழகாக அமைந்திருப்பது தாயுமானவர் மலை. இம்மலை ஒரே ஒரு பெரும் பாறை. அது முழுதும் ஒப்பற்ற ஒரு கற்றளியாக ஆக்கப்பெற்றுள்ளது. ஊரோ அம்மலையின் நாற்பாலும் சுற்றிக்கொண்டிருக்கிறது. இதனைச் சுற்றிப் பெரிய மதில்களால் கோட்டை கட்டப்பட்டிருந்தது. அக் கோட்டைக்கு வெளியே ஆழ்ந்த அகழி இருந்தது. அகழி தூர்க்கப்பட்டுப்போய் பெருந்தெருக்கள் ஆகியது. கோட்டை மதில்கள் இடிக்கப்பட்டுப்போய்த் திறந்தவெளி யாயிற்று. ஆனால், அக்கோட்டையின் மேற்கு வாயில் மட்டும் ஒரு சின்னமாக நிறுத்தப்பட்டிருக்கிறது. இதனைக் கண்டாலே பழைய கோட்டை எவ்வாறு அமைந்திருக்கக் கூடும் என்று எண்ண முடியும்.

திருச்சிக்கோட்டை சரித்திரத்திலேயே சிறந்த கோட்டை. பல போர்களும், முற்றுகைகளும் இங்கே நடைபெற்றிருக்கின்றன. இயற்கையான அமைப்புகள் இதற்குப் பெரிதும் உண்டு. மலையுச்சி உயர்ந்த பரண் போல கண்ணுக்கு எட்டிய தொலைவு எல்லாம் தெரியக் கூடிய நிலையில் இருக்கிறது. பகைப்படையை எளிதில் காணக்கூடிய வசதி இதில் இருக்கிறது. அகலமான காவிரி ஆறு இயற்கை நீர் அரணாகவும், அகழிகளுக்கு நீர் தரும் ஆதாரமாகவும் இருக்கிறது. அதன் கால்வாய்கள் முற்றுகை இடப்பட்ட கோட்டைக்கு நிரம்ப நன்னீர் அள்ளிக் கொடுக்கும். ஊரிலிருந்து குடிநீர்க் குளங்களுக் கும் இவ்வாறே நீர் தந்துகொண்டிருந்தது. 18-ம் நூற்



திருச்சி மலைக் கோட்டை

[பக்கம் 52

ருண்டில் கருநாடகப் போர்களில் இக்கோட்டை மிகப் புகழ்பெற்றது.

திருச்சியின் மேற்பகுதி உறையூர் என்பது. இதுவே பற்பல நூற்றுண்டுகளுக்குமுன் சோழர்கள் தலைநகராக இருந்தது. சைவ வைணவ மேம்பாட்டின்போது உறையூரிலும் திருச்சியிலும் இருந்த கோயில்கள் பாடல் பெற்றன. சோழர்கள் வலிவு குறைந்த காலத்தில் அதாவது 13-ம் நூற்றுண்டில் கன்னட நாட்டு ஒய்சளர்கள் தென்ஞட்டின்மீது படையெடுத்துத் திருச்சியைக் கைக்கொண்டார்கள். அருகில் வடக்கே இருக்கும் கண்ணனூரைத் தலைநகராக்கிக்கொண்டு ஒய்சள வீரராமநாதன் சிறிது காலம் ஆண்டான். விசயநகரத்தார் காலத்தில் திருச்சிப் பெருமை குன்றிவிட்டது. மதுரை தலைநகர் ஆகிவிட்டது. ஆனுல், மதுரை நாயக்கர்கள் பின்னுளிலே மதுரையை விட்டுத் திருச்சியைத் தலைநகராக்கிக் கொண்டார்கள். அரசி மங்கம்மாள் வாழ்ந்ததாகக் கூறும் அரண்மனை இன்று ஊர் மண்டபம் ஆகி இருக்கிறது. இறுதியில் இருந்த நாயக்க மன்னர்கள் இங்கேயே வாழ்ந்தனர். அரசி மீனுட்சியம்மாளும் இங்கேதான் ஆண்டாள். பிறகு மேலே காட்டியபடி கருநாடக நவாப்புகள் காலத்தில் போர் வகையில் புகழ்பெற்றது. இப்போது கோட்டை தொலைந்து போகக் கோயில் புகழ்பெற்றிருக்கிறது

பாண்டியநாட்டுக் கோட்டைகள் :

சோழநாட்டைவிடப் பாண்டிய நாட்டிலே கோட்டைகள் மிகுதி. காரணம், நாட்டின் இயற்கை அமைப்புதான். பாண்டிநாட்டிலே வைகை ஆற்றின் இருமருங்கில்தான் மருதநிலம். ஏனைய பகுதிகள் பெரும்பாலும் முல்லை,

குறிஞ்சி, நெய்தல் நிலப் பாங்கானவை. ஆகவே, மக்களும் அந்நிலங்களுக்குத் தக்க குணம் வாய்ந்தவர்கள். மறவர், கள்ளர், அகமுடையார் என்ற முக்குலத்தோர்கள் மிகுதி. மேலும், பனைமரம் ஏறுவோரும் தென்பாண்டியில் மிகுதியாக உண்டு. அங்கு சான்றோர்களும் மிகவுண்டு. இக்குலத்தார்கள் எல்லாம் மறவீரம் பொருந்தியவர்கள். ஆகவே, போர்க்குரிய சின்னங்கள் ஏற்படக் காரணம் உண்டு. நாட்டின் அமைதிக்கு அரண்கள் மிகத் தேவை. சங்கத்தார் நாள்முதலே இந்நாட்டில் பெரிய எயில்கள் இருந்தன. அவைகளில் ஒன்று கானப்பேர் எயில். இதுதான் தற்போது காளையார் கோயில் என வழங்குகிறது. வேளிர்களில் பலபேர்கள் இந்நாட்டு எல்லைகளிலே இருந்தனர். கிழக்கே பாரியின் பறம்புமலையும், தெற்கே ஆயின் பொதியமலையும், மேற்கே பொதினியின் குன்றும், வடக்கே குமணனின் முதிரை அரணும் இருந்தன. இவர்கள் எப்போதும் போர்த்தினவு கொண்டவர்கள். ஆகவே எயில், அரண், கோட்டை என்பவைகள் முளைக்கவேண்டியது இயல்பல்லவா? பிற்காலத்திலே நாயக்க மன்னர்கள் பாளையப் பட்டுகளை உண்டுபண்ணி நாடு முழுதும் அவர்களைப் பரப்பி அவர்களால் கோட்டைகள் கட்டச்செய்து படைத்திறனை வலுப்படுத்தினார்கள். அப்படிப்பட்ட பாளையங்கள் எழுபத்திரண்டு இருந்தன. அவைகளில் சிறப்புற்றவை பாஞ்சாலங்குறிச்சி, ஊற்றுமலை, சிங்கப்பட்டி முதலியன. இந்நாட்டில் தான் தற்போதும் பாளையக்காரர்கள் மிகுதியாக இருக்கின்றனர். மண்கோட்டை முதற்கொண்டு மலைக்கோட்டை வரை இங்கு உண்டு. இவைகளில் சிலவற்றை எடுத்துரைப்பாம். கூடலை (மதுரை)ப்பற்றி முன்னரே கூறியுள்ளதால் இங்கு மீண்டும் எழுதவில்லை.

திருமெய்யம்

இது தற்காலம் புதுக்கோட்டைச் சீமையிலே புதுக்கோட்டைக்குத் தெற்கே இருக்கும் ஒரு மலைக் கோட்டை. இயற்கையாய் இருந்த மலையைச் சுற்றிக் கருங் கல் மதில்கள் எழுப்பிப் பெருங் கோட்டையாகக் கட்டப் பட்டுள்ளது. கோட்டைக்குள்ளே மெய்யப்பர் (சத்திய மூர்த்தி) கோயில் உண்டு. இது திருமங்கை மன்னனால் மங்க ளாசாசனம் பெற்றது. ஆகவே, சைவ வைணவ மேம்பாட் டுக் காலத்திலேயே இருந்தது என்று கூறவேண்டும். மாற வர்மன் சுந்தரபாண்டியன் (1238) காலத்தில் மைசூர் சீமை ஒய்சள வீரசோமேசுவரன் தண்டநாயக்கரின் ஒருவனான அப்பண்ணதண்டநாய்க்கன் இந்தக் கோட்டைக்கு வந்து வெகுகாலமாக வைணவர்களுக்கும், சைவர்களுக்கும் ஏற்பட்டிருந்த சண்டைகளினால் ஆலயங்களின் பூசை நின்று கிடக்க, அவற்றைச் சமாதானப்படுத்திப் பூசை முதலியவைகளைத் தொடக்கிவிட்டான். (150-1894) என்று இக்கோயில் கல்வெட்டு ஒன்று கூறுகிறது. இக் கோயில் கருவறைச் சுவரில் ஒரு முனிவர் யாழை வாசிக் கும் சிற்பம் தீட்டப்பட்டிருக்கிறது. இஃது ஓர் அருமை யான சிற்பம். இக் கோட்டை பாண்டிய நாட்டின் வடகிழக் கெல்லையில் உள்ளது.

இனி, இதைப்போலவே வடகிழக்கெல்லையில் மற் றொரு மலைக்கோட்டை இருக்கிறது. அதுதான் பிரான் மலைக்கோட்டை என்பது. இம்மலையைச் சேர்ந்த கள்ளர் வகுப்பார்தாம் பிரான்மலைக் கள்ளர் எனப்படுவர். பிரான் மலை என்பது பாரி என்ற வள்ளலின் பறம்புமலையின் மருவாகும். இம்மலையே இன்றைக்கும் இராமநாதபுரத் திற்கும் புதுக்கோட்டைக்கும் எல்லையாகும். இம்மலை உச்சி யில் ஒரு பெரிய பீரங்கி இருக்கிறது. இஃது எவருடையது

என்ற வழக்கும் சில ஆண்டுகளுக்கு முந்தி இருந்தது. அப்பீரங்கியை அம்மலை உச்சியில் எப்படி ஏற்றினார்களோ தெரியவில்லை.

திண்டுக்கல் :

இது தன் பெயருக்கு ஏற்றபடி சமநிலத்தின் பேரிலே ஒரே திண்டுபோல முளைத்திருக்கும் குன்றாகும். இது கீழ்பால் தவிர, ஏனைய மூன்று திசைகளிலும் செங்குத்தாக இருக்கிறது. இம்மூன்று பகுதிகளிலிருந்தும் எவராலும் ஏறமுடியாது. கிழக்குப் பகுதியில் மலை சாய்வாக இருப்பதால், இங்கிருந்து மேலே ஏறப் படிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. சுற்று சுற்றாகப் பல மதில்கள் கட்டப்பட்டிருக்கின்றன. வெளிமதில் நிலமட்டத்தில் இருந்தது. இப்போது அழிக்கப்பட்டது. மேலே மதில்களில் வாயில்கள் உண்டு. ஏறிப் போகும்போது பல இடங்களில் நீர்ச் சுனைகள் இருக்கின்றன. பாழிகளில் மழைநீர் நிற்பதால் இச்சுனைகள் ஏற்பட்டுள்ளன. உள்ளே இருக்கும் சேனைகளுக்கு இந்நீரே குடிநீர் ஆகும். மேற்பகுதிகளில் நெற் களஞ்சியம், மருந்துச்சாலை, சிறைச்சாலை, படை வீடுகள் இவைகள் உண்டு. சிறைச்சாலை செங்கல் வளைவுகளால் ஆக்கப்பட்டது. இவைகளில்தான் பாஞ்சாலங் குறிச்சி ஊமைத்துரை முதலியவர்கள் அடைக்கப்பட்டிருந்தனராம். (1800) உச்சியில் இருந்த கோயில்கள் பாழடைந்திருக்கின்றன. இக்கோயிற் கல்வெட்டு ஒன்றில் விசயநகர அச்சுதராயன் கல்வெட்டு இருக்கிறது. அக்காலத்து விசய நகரத்தார் இந்தத் தொலைவான இடத்திலும் கோட்டை இருக்கவேண்டும் என்ற நெடுநினைவோடு கட்டியிருந்தார்கள். மைசூரார் இதனைத் தம் வயப்படுத்திக்கொண்டனர். ஐதர் அலி இதனைப் பிடித்து இதுவரை தன் அரசைப்

பெருக்கிக்கொண்டான். அப்போதுதான் மலைமேலிருந்த சிவாலயத்து உருவச்சிலை கீழே கொண்டுவரப்பட்டு அபிராமியீசர் ஆலயத்தில் வைக்கப்பட்டது. ஆங்கிலர் கைக்கு வந்தபிறகு கோட்டை பயனில்லாமல் பாழ்அடைந்து கிடக்கிறது. விசயநகரத்தார் நாளில் தென்னாட்டுப் பாளையக்காரர்கள் அஞ்சி அடங்கும்படி செய்த வலுவுள்ளகோட்டை இத் திண்டுக்கல் கோட்டை என்றறியவேண்டும்.

பாளையங்கோட்டை :

தென்பாண்டி நாட்டிற்குத் தலைநகர் திருநெல்வேலி. அது தாம்பிரவருணி என்று வழங்கும் தண் பொருநையாற்றின் மேல்கரையில் உள்ளது. அதனைப் பேட்டையாகக் கொண்டால் அதற்குக் கோட்டையாக வாய்ந்துள்ளது எதிர்க்கரையில் இருக்கும் பாளையங்கோட்டை. இப்போது அவ்வூர் கிறித்தவர்களால் நடத்தப்பெறும் கல்விச்சாலைகளுக்குப் பேர்போனது. ஊர் நடுவில் தெற்கே ஏகும் பெரும் பாதையில் பழைய கோட்டையின் சின்னங்கள் உள்ளன. மதில்களும், அகழிகளும் அழிந்தன. ஒன்றிரண்டு கொத்தளங்கள்மட்டும் நின்றிருக்கின்றன. கொத்தளங்கள் மதில்களின் மூலைகளிலே கட்டப்படும் வட்டவடிவமான அரண்கள். இவைகளிலே பீரங்கித் துளைகள் வைக்கப்பெற்றிருக்கும். போர்வீரர்கள் அத் துளைகளின் மூலம் குண்டுகளைச் சுடுவார்கள். அவர்கள் மீது எதுவும் விழாமல் கைப்பிடி வலுவாகக் கட்டப்பெற்றிருக்கும். இப்படிப்பட்ட அரண் இக்கோட்டையில் இடிபடாமல் நிறுத்தப்பட்டிருக்கிறது. கோட்டைக்குள் இருந்த சிவாலயமும், பெருமாள் கோயிலும் இருக்கின்றன. இக்கோட்டை உள்ள ஊர் முற்காலத்திலே திருமங்கை நகர் என்று பெயர்பெற்றிருந்ததாம். விசயநகர ஆட்சியில்

வடக்கே இருந்து கன்னடியத் தலைவர்கள் இங்கே வந்து ஆட்சிபுரியத் தொடங்கினார்கள். அவர்களில் ஒருவன் வெட்டின கால்வாய் 'கன்னடியக் கால்' என்ற பெயருடன் வழங்குகிறது. பாளையன் என்ற பெயருடன் வந்த ஒருவன் கட்டினதுதான் பாளையன்கோட்டை என்பர். அக்கோட்டையின் பெயரே பின்னர் ஊருக்கும் ஆயிற்று. இப் பாளையங்கோட்டையிலிருந்தே வடநாட்டுப் பிரதிநிதிகள் பாளையக்காரர்களை அடக்கி ஆண்டார்கள். இந்தக் காரணத்தினாலும் இவ்வூர்க் கோட்டை பாளையங்கோட்டை என்ற பெயர் பெற்றிருக்கலாம். ஆங்கிலர் இந்நாட்டை அடையத் தொடங்கினதும் தங்கள் படையை இக் கோட்டையிலேயே நிறுத்தினர். 1799 முதல் இங்கேயே ஆங்கிலப் படைத்தலைவன் இருந்து வந்தான். இங்கே கப்பமாக வந்த தானியமும் களஞ்சியத்தில் சேமிக்கப்பட்டிருந்தது. அதைக் கொண்டு சென்ற காரணத்தினால்தான் பாஞ்சாலங் குறிச்சியார் மூலமாகப் பாளையக்காரர்களின் கலகமும் 150 ஆண்டுகளுக்கு முந்தி யேற்பட்டது. அப்போது இக்கோட்டை சிறந்த அரணாக இருந்தது.

பாஞ்சாலங்குறிச்சி :

பாண்டிநாட்டை நாயக்க மன்னர்கள் ஆண்ட நாளில் நாட்டின் பாதுகாப்பிற்காக 72 பாளையக்காரர்கள் என்ற குறுநில மன்னர்கள் நியமிக்கப்பட்டார்கள். அப்படிப் பட்ட மன்னர்களில் பாஞ்சாலங்குறிச்சி மன்னர் ஒருவர். இவர்கள் வடக்கே இருந்து குடியேறித் தங்கிய தெலுங்குக் கம்பளத்தார்கள். தூத்துக்குடிக்குச் செல்லும் வழியில் ஒட்டபிடாரத்திற்கு அருகே இப்பாளையம் இருந்தது. இதனை ஆண்ட வமிசம் மிகப் புகழ்பெற்றது. அது அஞ்சா நெஞ்சுடைய வீரர்கள் வமிசம். வேட்டையாடுகையில் ஒரு

வேட்டை நாயை ஒரு முயல் எதிர்த்த காரணத்தினுல் உரம் பெற்ற நிலம் என்றறிந்து, இந்த இடத்தில் ஒரு கோட்டை எழுப்பி அதை ஆண்டு வந்தனர். இக்குடும்பத்தார்க்குக் ‘கட்டபொம்மு’ என்ற பட்டம் உண்டு. கருநாடக நவாப் பிடமிருந்து ஆங்கிலர் தமிழ்நாட்டைப் பெற்றுக்கொண்ட போது, பாஞ்சாலங்குறிச்சி முதலிய சில பாளையக்காரர் கள் ஆங்கிலருக்கு அடங்கவில்லை. அப்போது நடந்த கலகப்போரில் ஆங்கிலர் பக்கம் எட்டியாபுரம் சேர்ந்தது. பாஞ்சாலங்குறிச்சியோடு வேறு சிலர் சேர்ந்தார்கள். ஆங்கிலர் குண்டுகளுக்கு வில்லும் வேலும் நிற்குமா? பாஞ்சாலங்குறிச்சி தோல்வியுற்றது. கோட்டை அழிக்கப் பட்டது. கட்டபொம்முவின் குடும்பத்தார் எல்லாரும் தூக்கிலிடப்பட்டும், சிறையில் அடைக்கப்பட்டும் நசுக்கப் பட்டார்கள். ஆனுல், அக்காலத்தில் அவர்கள் காட்டிய வீரம் பாணர்களால் இப்போதும் போற்றப்பட்டுப் பாடப் படுகிறது. நாடகங்கள் நடிக்கப்படுகின்றன. கோட்டை மண்கோட்டை. ஆனுலும் மிக்க வலிமையோடு இருந்த தாம். ஆதலால், அது மண்கோட்டைக்கு ஓர் எடுத்துக் காட்டாகக் கொள்ளப்படும். இப்போதும் தம் குழவிகள் ஆண்மையோடு வளரவேண்டும் என்ற நோக்கத்துடன் உள்ள தாய்மார்கள் இக்கோட்டை இருந்த இடத்து மண்ணை ஒரு சிறிது எடுத்து நெற்றியில் பூசுவது உண்டாம். நாயக்க மன்னர்கள்கீழ் இருந்த குறுநில மன்னர்களான பாளையப்பட்டுக்களில் 16 பாளையப்பட்டுக்கள் தமிழர்கள்; 56 பாளையப்பட்டுக்கள் தெலுங்குக் கம்பளத்தார்கள்.

கொங்கு நாட்டுக் கோட்டைகள் :

பண்டைத் தமிழரின் பண்பாடு முழுதும் மறைந்து போகாமல் நின்று விளங்குவது கொங்கு நாட்டில் என்ருல்

அது மிகை அல்ல. பண்டைப்பழக்க வழக்கங்கள் திரு விழா, நோன்புகள், ஆடல் பாடல்கள், உரிமை பெருமை கள் இக் காலத்திலும் மறக்கவிடாமல் போற்றப்படுவது கொங்கு நாட்டிலேதான். ஆகவே, கோட்டை கொத்தளங் களிலும் பண்டைச் சிறப்புகள் இங்கே மிகவுண்டு. இருபது நூற்றாண்டுகளுக்கு முன்பே, கொங்கர் சிறப்புற்றிருந் தார்கள் எனச் சங்கப் பாடல்கள் வெளியிடுகின்றன. சிலப் பதிகாரக் காலத்தில் கொங்கிளங்கோசர் அந்நாட்டுத் தலைவர் என்ற முறையில் கண்ணகிக்குக் கோயில் நிறுவினர். சைவ வைணவ மேம்பாட்டுக் காலத்தில் ஏழு பாடல்பெற்ற தலங்களும் பல வைப்புத்தலங்களும் இங்கு இருந்தன. தலைக்காட்டுக் கங்கர்கள் காலத்தில் பெருங் கதை முதலிய காவியங்கள் எழுதப்பட்டன. பல சமண ஆசிரியர்கள் இலக்கிய இலக்கணங்களை வகுத்தார்கள். ஒய்சள மன்னர் ஆதிக்கத்தில் தண்டநாயக்கன் கோட்டை சத்தியமங்கலக் கோட்டை முதலியவைகள் தோன்றின. தெற்குச் சீமைக்கே இக் கோட்டைகள் தலைமை இடங்கள் ஆயின. கீழ்க்கொங்கு நாடாகிய சேல வட்டத்தில் இருக் கும் இயற்கை யரண்கள் முற்றும் செயற்கைத் துர்க்கங்க ளாக மாற்றப்பட்டன. அக் காலத்தில் சங்ககிரி, கிருஷ்ண கிரி, தருமபுரி முதலியவைகள் சிறப்புற்றோங்கின. இவ் விதமாக வலிவு பொருந்திய அரண்களின் உதவிகளால் தான் கருநாடக மைசூரார்கள் ஏனைய வெளிநாட்டார்க ளாகிய வெள்ளையருடன் போர்புரியத் துணிந்தார்கள். மைசூர்ப் போர்களில் கொங்குநாட்டு மலைக்கோட்டைகளே மிகுதியாகப் படைத்தலங்கள் ஆயின. அந்தந்தக் காலங் களுக்கு ஏற்றவாறு மலைக் கோட்டைகளும் அமைக்கப் பெற்றன. இன்றைக்கும் பண்டைக் கோட்டைகளின் நிலைமை அறியவேண்டும் என்றால், கொங்கு நாட்டிற்குத்

தான் ஏகவேண்டும். அவைகளில் சிலவற்றை எடுத்துக் காட்டாக விவரிப்போம்.

சத்தியமங்கலக் கோட்டை

வானியாறு (பவானி) மேற்கே நீலகிரியில் தோன்றிக் கிழக்கே காவிரியோடு பவானிக் கூடலிலே கலக்கிறது. இதன் பள்ளத்தாக்கில் வானியின் வடகரையில் உள்ளது சத்திய மங்கலம். இப் பள்ளத்தாக்கை அடுத்து வட புறத்தில் சுவர்போலப் படுத்திருப்பது திம்பம் ஆசனூர் மலைத்தொடர். மைசூர் பீட பூமியின் தெற்கெல்லையாகிய இம் மலைத்தொடரைவிட்டு இறங்கிக் கொங்கு நாட்டுச் சம வெளிக்கு வருதற்குக் காவல்நகர்போல இருப்பது சத்திய மங்கலம்; பண்டைக்காலம் முதற்கொண்டே ஆண்ட அரசர்கள் இவ்விடத்தை அரண் செய்து வைத்தார்கள். மைசூரார் காலத்தில் இவ்வூர் தென் மாகாணத்திற்குத் தலைமை தாங்கியது. கோட்டை வானியாற்றின் வட கரையில் அதனை ஒட்டியே கட்டப்பட்டது. ஒருபுறம் ஆறும் மற்றப் புறங்களில் அகழியும் இருந்தன. அடுத்துத் 'தவளகிரி' என்ற முருகன் கோயில் சிறு மலைமேல் இருக் கிறது. இதுவே இக் கோட்டைக்குப் பரண் போன்றது. கோட்டை மதில் 25 அடி உயரமாகக் கருங்கற்களால் கட்டப்பட்டது. உள்ளே தெப்பக்குளமும் கோட்டை முனியப்பன் கோயிலும் இருந்தன. அடுத்து மேற்கே கோட்டைவீரன்பாளையம் என்ற சிற்றூர் இருக்கிறது. கோட்டையின் வரலாறு கல்வெட்டுக்களால் தெரிய வருகிறது. 11, 12-ம் நூற்றாண்டில் ஆண்ட கொங்கு சோழர்கள் கல்வெட்டு உண்டு. முதற் கல்வெட்டு 1153-ல் குலோத்துங்கனால் ஏற்பட்டது. பிறகு ஒய்சள அரசர்கள் தென்னாட்டின்மீது படையெடுத்தார்கள். அவர்களில்

வீரசோமேசுவர மன்னனின் (1235-1253) படைத் தலைவன் பெருமாள் தண்டநாயக்கன் இந்நாட்டை அகப் படுத்தினன். அங்கே டணய்க்கன் கோட்டையைக் கட்டி அதனையே தலைமைத்தானமாக அமர்த்தினன். இக் கோட்டையும் மிகச் சிறந்ததொரு கோட்டை. மலைச் சுரத்தினல் இப்போது தங்க இயலாது. திருவரங்கத்தை முகம்மதியர் அழிக்கவந்த நாளில் வேதாந்ததேசிகர் கொங்குநாட்டிற்கு வந்து சத்தியமங்கலத்தில் சிறிது காலம் தங்கினர். பிறகு மைசூர் உடையார்கள் மேம்பாடு அடைந்தபோது மைசூரார் சத்தியமங்கலக் கோட்டையை வலுப்படுத்தி இதனையே தென் மாகாணத்திற்குத் தலைநகர் ஆக்கினர்கள். அப்போது தவளகிரிக் கோயிலுக்கு நன் கொடை அளிக்கப்பட்டது (1669). பின்னலே அருகிலே கிறித்தவசமயம் பரவிற்று. ஆனல் அது முகமதியர் படையெடுப்பில் குறைந்தது. ஐதர், திப்பு ஆட்சிகளில் சத்தியமங்கலம் படைகள் செல்லும் வழியாக இருந்தது. அப்போது அக்கோட்டை இராணுவத்திற்குச் சிறந்த இடமாக இருந்தது. 1799-ல் சீரங்கபட்டண வீழ்ச்சி யிலே சத்தியமங்கலம் ஆங்கிலர் வசம் ஆயிற்று. கோட்டை யின் பெருமையும் அழிந்தது.

கோயமுத்தூர்க் கோட்டை :

கோவை நகரில் தெற்குத் திசையில் சிறிய ஏரிக்கு அடுத்து இருக்கும் இடம் கோட்டைமேடு என்ற பெயரால் இக்காலத்தில் வழங்குகிறது. ஊர் அம்மனகிய கோணியம்மன் கோயிலுக்குத் தெற்கும், ஏரிக்கு வடக் கும் அப்பகுதி யிருக்கிறது. இப்பகுதியில் பண்டைக் காலத்தில் மண்ணுற் கட்டப்பெற்ற கோட்டையும் அதனைச் சூழ்ந்த அகழியும் இருந்தன. இப்போது இவை

அழிந்துபோயின. இந்த நாடு காடாக இருந்தபோது, இருளர் இங்கே குடிசைகள் கட்டிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் தலைவன் கோவன் என்பவன் பெயரால் அது கோவன்பதி என்ற சிற்றூர் ஆயிற்று. 9-ம் நூற்றாண்டில் சமயமுதலியும் (சுந்தரமூர்த்திகள்), சேரமான்பெருமாளும், கரிகால்சோழனும் இங்கே வந்து காட்டை வெட்டி நாடு ஆக்கினதில் கோட்டையும் பேட்டையும் கட்டிக் குடியேற்றம் செய்தார்களாம். அப்போது ஏற்பட்டது இக்கோட்டை. ஊருக்குக் கோவன்புத்தூர் எனப் பெயர் வந்தது. கோட்டைக்குள் சங்கமேசுவரர், கரிவரதராசப் பெருமாள் கோயில்கள் ஏற்பட்டன. கோட்டை ஈசுவரன் கோயில், இப்போது சுப்பிரமணியர் கோயில் என்று வழங்குகிறது. கொங்குசோழர் காலத்தில் இவ்வூர் வீரகேரளநல்லூர் எனப் பெயர் உற்றது. பின்னாலே ஒய்சளர், விசயநகரம், தெற்கணாம்பி முதலிய தலைவர்கள் இந்நாட்டை ஆண்டார்கள். கன்னடப் பிரதிநிதி மாதையன் ஆண்டபோது மாதேராசா மகால் ஏற்பட்டது. சிறிது காலம் நாய்க்க மன்னர் கைப்பற்றிய காலத்தில் பேரூர்க் கனகசபை கட்டப்பட்டது. மைசூர் ஆதிக்கம் மீண்டும் வந்து மாதேராசா, சிக்கேராசா குளங்கள் ஏற்பட்டன. ஐதர் கோவையில் பாளையம் இறங்கி யிருந்தான். அப்போது இக்கோட்டையில் இரணவீர கவுடனைச் சிறை செய்திருந்தான். ஆங்கிலர் இக்கோட்டையை மும்முறை முற்றுகையிட்டனர். இறுதியில் சீரங்கபட்டணத்து வீழ்ச்சியின் பிறகு இக்கோட்டை ஆங்கிலர் வசம் ஆயிற்று. முகம்மதியர் காலத்தில் படையெடுப்புகளுக்கு அஞ்சி நிலத்தில் புதைத்திருந்த பெருமாள் கோயிலின் உற்சவ மூர்த்திகள் வீடு தோண்டும்போது கிடைக்க, அவைகளை ஆங்கில அரசியலார் எடுத்துக் கண்காட்சிக்கு அனுப்பி

விட்டார்கள். கோட்டைக்குத் தெற்கே உள்ள சின்ன ஏரித் தென்கரையில் ஓர் அருமையான வீரக்கல் இருக்கிறது. இது இந்த ஊரின் பழமையை எடுத்துக்காட்டுகிறது. ஆங்கிலர் ஆட்சியிலே கோட்டையும் அகழியும் அழிக்கப்பட்டு, கோட்டைமேடு பள்ளத்தாழ்வாகி நோய்களுக்கு முதல் இடம் ஆகிவிட்டது.

சங்ககிரி துர்க்கம்:

சேலவட்டத்தில் சங்ககிரி துர்க்கம் என்ற நிலையத்திலிருந்து கோட்டை இரண்டுகல் வடகிழக்கில் உள்ளது. இது சுற்று வட்டத்திலிருந்து 1500 அடி உயரம் கிளம்பி இருக்கும் பெருங் கற்பாறை. கீழ்ப்பால் சரிவாக உள்ளது. மற்றைப் பகுதிகள் செங்குத்தானவை. ஆகவே, கிழக்கிலிருந்துதான் மலை ஏறமுடியும். இத்திசையோ பத்து மதில் அரண்களால் காக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொன்றிலும் வலுவான கோட்டை வாயில் உண்டு. அடிவாரத்தில் பெரும் பாறைகளும், குண்டுக் கற்களும் இருக்கின்றன. தலைவாயில்கள் ஒவ்வொன்றுகத் தாண்டித்தான் மேலே ஏறவேண்டும். மூன்றும் வாயில் தாண்டினதும் ஒரு குளமும், வரதராசர் கோயிலும் இருக்கின்றன. பிறகு கற்படிகள் செங்குத்தாக இருக்கின்றன. ஐந்தாவது வாயிலுக்கு மேலே இரண்டுவட்ட அரண்கள் உண்டு. மதிலில் பீரங்கித்துளைகள் செய்யப்பட்டுள்ளன. மேலே சென்றால், ஒரு குகைக்கு முன்னல் சிறு மசீது இருக்கிறது. இதன் பெயர் கபீர் மசீது. ஏழாவது வாயிலுக்கருகில் வெடிமருந்துச்சாலை இருக்கிறது. ஒன்பதாவது வாயில் 1799-ல் ஆங்கிலரால் பழுதுபார்க்கப்பட்டது. பத்தாவது வாயில் மைசூர் வாயில் என்று பெயர். இப் பத்து வாயிலையும் தாண்டினல்தான் கோட்டை பிடிபடும். ஆகவே

இதன் வலிமை கூறவும் வேண்டுமோ? உச்சியில் சென்ன கேசவப்பெருமாள் கோயில் இருக்கிறது. அதனருகில் கொடிமேடை, தானியக் களஞ்சியம் முதலியன இருக்கின்றன. உச்சியின் உயரம் 2,345 அடி. வெள்ளைப்பாறை ஆனதினால் சங்ககிரி என்ற பெயர் பெற்றதாம். சங்கைப் போன்ற வடிவமும் கொண்டதென்பர். வாயில்களில் பெயர்கள்—புலிமுகம், திட்டிவாசல், கெடிகார வாசல், இரணமண்டல வாசல், புதுக்கோட்டை வாசல், ரோக்கல் திட்டிவாசல், இடிவிழுந்தான் வாசல், இலட்சுமிகாந்தன் வாசல், வெள்ளைக்காரன் வாசல், மைசூர் வாசல் என்பன. கோட்டைக்குள் பல சுனைகள் உண்டு. அடிவாரத்தில் உள்ள 30 அடிக் குண்டுப்பாறை 'முதலியார் குண்டு' என்பது. இங்கே திப்பு, கெட்டிமுதலியாரை நிறுத்தி உயிர்துறக்கச் செய்தானும். கல்வெட்டுகளில் இத்துர்க்கம் குன்றத்தூர் துர்க்கம் எனக் கூறப்பட்டது. 1522, 1524 கல்வெட்டுகள் விசயநகர ஆட்சியை நிரூபிக்கின்றன. பிறகு இக்கோட்டை மைசூர்வசம் சேர்ந்துவிட்டது.

தருமபுரிக்கோட்டை :

சேலவட்டத்தில் இவ்வூர் ஒரு தாலூகாவின் தலை நகர். கோட்டை ஊருக்கு வடக்கே சந்தைக்கு அடுத்து இருக்கிறது. மதில்கள் அழிக்கப்பட்டன. இங்கே மல்லிகார்ச்சுனசுவாமி ஆலயமும் பரவாசுதேவர் ஆலயமும் இருக்கின்றன. சிவாலயம் பின் பல்லவர் சிற்பத்தை ஒட்டியிருக்கிறது. (8, 9-ஆம் நூற்றுண்டில்) அம்மன் கோயில் உயர்ந்த தளவரிசையில் பெரியதாக 48 மூலைகள் கொண்டதாக இருக்கிறது. சுவர்களில் இராமாயண கதை தீட்டப்பட்டுள்ளது. உள்ளே ஒரு தூண் நிலத்தில் படாமல் தொங்கிக்கொண்டிருக்கிறது. பழைய தருமபுரியில் நர

சிம்மன் ஆலயம் இருக்கிறது. (தெலுங்கு சதகம் இங்கு ஏற்பட்டதா?) தாமஸ் மன்றோ 100 அடி சதுரக்குளம் வெட்டிப் பூங்காவனம் கட்டினும். அது இப்போது இல்லை. தருமபுரியின் பண்டைப்பெயர் தகடூர் என்பது. சங்கத்தார் காலத்தில் தகடூர் யாத்திரை என்ற நூல் இருந்தது. அக்காலம் இங்கு ஆண்ட அதிகைமான் நெடுமான் அஞ்சியும், அவன் மகன் பொகுட்டெழினியும் சேரனேடு போர் புரிந்து தோற்றூர்கள். கோட்டை சேரன் கையில்பட்டது. 9-ம் நூற்றுண்டில் கங்கமன்னன் (840, 870) இராசமல்லனுடைய மகள் ஜெயப்பேயை நொளம்பன் மணந்து பெருமைபெற்றுன். அவர்களுடைய மகன் மகேந்திரன் அவன் மகன், ஐயப்பன் முதலியவர்களுடைய கல்வெட்டுக்கள் இங்கே இருக்கின்றன. அக்காலத்தில் ஒரு வியாபாரி இங்கே ஒரு சமணவசதி கட்டினும். இராமாக்கா குளத்திற்கருகில் ஒரு கன்னடச் செய்யுள் (நொளம்பர் காலம்) தகடூர் உலகத்தினுடைய பிரதிபிம்பம் என்று புகழ்கிறது. பின்னல் ஒய்சளர்களும், விசயநகரத்தார்களும் இக்கோட்டையை வசப்படுத்திக்கொண்டு ஆண்டார்கள். பிறகு மைசூர் கண்டீரவநரசனும், இறுதியில் ஆங்கிலரும் பிடித்துக்கொண்டார்கள்.

நாமக்கல் கோட்டை :

நாமக்கல் சேலவட்டத்தில் உள்ள ஊர். ஊரின் இடையில் ஓர் அருமையான குன்று இருக்கிறது. அதன் பெயர்தான் நாமக்கல் அல்லது நாமகிரி. இது உருண்டை வடிவமான வெள்ளைக் கற்பாறை. பாறையின்மீது மலைக் கோட்டை கட்டப்பெற்றிருக்கிறது. ஊரும் இரண்டு பகுதியாக உள்ளது. மலைக்குக் கிழக்கே பேட்டையும், மேற்கே கோட்டையும் உண்டு. கோட்டையின் அகழி தூர்ந்துபோய் வீடுகள் கட்டப்பட்டுள்ளன. மலை 200

அடி உயரமும் ஒரு கல் சுற்றளவும் கொண்டது. மலையில் பாழிகளும் அவற்றில் சுனைநீரும் உண்டு. அடிவாரத்திலும் மழைநீர்க் குளம் இருக்கிறது. கோட்டைவழி தென்மேற்குக் குறுகலான படிகள். வடபுறத்தில் திட்டிவாசற் படிகள். மேலே மதிற்சுவர்கள் கருங்கல் பணி. கைப்பிடி செங்கல். பீரங்கித் துளைகள் கொண்டது. மலையின்மேல் மதில்கள் இடையே 17 ஏகர் நிலம் உண்டு. இதில் ஒரு கோயில், களஞ்சியம், மருந்துச்சாலை இவைகள் உண்டு. கோயிலில் பாண்டியர் மைசூரார் கல்வெட்டுகள் உண்டு. இக்கோட்டையைச் சேர்ந்தமங்கலம் இராமச்சந்திர நாயக்கன் கட்டினதாகச் சொல்வர். மைசூரார் கட்டினதாகவும் கூறுவர். அடியில் இரண்டு குடை கோயில்கள் உண்டு. நரசிம்மசுவாமி நாமகிரியம்மன் கோயிலும், இரங்கநாதர் கோயிலும் உண்டு. ஒரு பெரிய அனுமன் சிலை இங்கே இருக்கிறது. பெரிய தீர்த்தத்தின் பெயர் கமலாலயம். இவ்வூரில் பத்து கல்வெட்டுக்கள் கிடைத்திருக்கின்றன. அவைகளின்படி இம்மலைக்குத் திருவாரைக்கல் என்றும், அதில் உள்ள பெருமாள் கோயில் அருளாள விண்ணகர் என்றும் பெயர். அடிவாரக் குடைகோயிலின் பெயர் அதியேந்திர விண்ணகரம். இதனால் இக்கோயிலை அதிகைமான்கள் கட்டியிருக்கவேண்டும் என்பது திண்ணம்.

## ஏனைய கோட்டைகள்

கொங்கு நாட்டில் என்றும் கணக்கற்ற கோட்டைகள் இருந்தன. அவைகளில் சிறப்பாகக் கூறவேண்டியவை கிருஷ்ணகிரி, ஒசூர், அதமன் கோட்டை (அதிகைமான்) சேலம், இராயக்கோட்டை, நீலகிரித் துர்க்கம், டெங்கனிக் கோட்டை, பெண்ணாகரம், ஆற்றூர் முதலியன. சேலத்திலும், பவானி, அந்தியூர், தாராபுரம் (இராசராசபுரம்),

பெருந்துறை, ஊராட்சிக்கோட்டை, சக்கரகிரி, முதலியவை கோவையிலும் உள்ளன. இவைகளை விரிக்கவேண்டியது இல்லை. ஆனால் கொங்கு நாட்டிற்கு முந்திச் சேர்ந்ததாய் இப்போது மலையாளத்திற்குச் சேர்ந்திருக்கும் தமிழர் ஊராகிய பாலைக்காட்டுக் கோட்டையைப்பற்றி ஒரு சிறிது விளக்கவேண்டியுள்ளது. பாலைக்காடு கோவைக்கு மேற்கே 30 கல் தொலைவில் உள்ள ஊர்த்தொகுதி. இதில் நடுவில் உள்ளது கோட்டை. அது வெட்டவெளியில் சதுரமாய் கட்டப்பட்ட மதில்களை உடையது. பார்வைக்கு வேலூர்க் கோட்டையைப்போல் உள்ளது. இதில்தான் இப்போது பல அரசியல்துறைகளும் இருக்கின்றன. இதன் அமைப்பைக் கண்டால் விஜயநகரத்தார் கட்டடத்தைப் போன்றே இருக்கிறது. இதனை ஐதர், திப்பு, பிடித்துப் பழுது பார்த்திருக்கிறார்கள். அதைக்கொண்டு முகம்மதியர் கட்டினதாகக் கூறஇயலாது. இவ்வூரில் தமிழர் பெரும்பான்மையாக உள்ளதால் இக்கோட்டை தமிழ்நாட்டுக் கோட்டைகளுள் சேர்க்கவேண்டியதுதான் முறை.

இதுவரை விவரித்த செய்திகளால் தமிழ்மக்கள் கோட்டைகளைக் கட்டி நாட்டைப் பாதுகாப்பதில் எத்தனை பொறுப்பு எடுத்துக்கொண்டார்கள் என்று அறியக்கூடும். இக்காலத்தில் கோட்டைகளினால் மிகுதியாகப் பயன் இல்லாமல் போனபோதிலும் பண்டைய மக்களின் பண்பாட்டை அறிவதற்கு அவைகள் பயன்படுகின்றன என்று அறியவேண்டும். ஆகவே, அவற்றை முழுதும் அழித்து விடாமல் நினைவுச் சின்னங்களாக வைத்திருத்தலே நன்று.

# 4. சமய நிலையங்கள்

சமய நிலையங்கள்

உலகில் ஒவ்வொரு நாடும் ஒவ்வொரு குறிக்கோளைக் கொண்டு பாடுபடுகின்றன. சிறப்பாக நாகரீகம் பெற்ற நாடுகள் ஏதாவது ஒரு சிறந்த குறிக்கோளை வைத்துக் கொண்டே முன்னேற்றம் அடைய முயல்கின்றன. கிரீக்கு அழகையும், ரோம் சட்ட மேன்மையையும் குறிக்கோளாகக் கொண்டன. இந்தியாவோ சமயத்தைக் கொண்டது. ஆனால் தமிழ் நாடோ சமயத்திலும் சமய நிலையங்களைச் சிறந்த குறிக்கோளாகக் கொண்டு விளங்குகிறது. வேறு நாட்டு அறிஞர் எவர் இந்நாட்டிற்கு வந்தபோதிலும் இங்குள்ள சமயநிலையங்களைக் கண்டு மகிழ்ந்து வியந்து எழுதாதார் இல்லை. ஆகவே தமிழ்மக்கள் சமயநிலையங்களுக்கு வளர்ச்சி தந்து அவைகளைச் சீரியமுறையில் வைக்கப் பாடுபடுவதே குறிக்கோளாகக் கொண்டிருந்தார்கள் என்பதில் ஐயமில்லை. சமய உணர்ச்சி எப்போது ஏற்பட்டது என்று சொல்ல இயலாது. மனிதன் தோன்றினநாள் முதற் கொண்டே அவனிடத்தில் அஃது ஊன்றி இருக்கிறது. சமயத்தைக் கண்டித்து அதனை வேரோடு களைந்து எறிய வேண்டும் என்ற எதிர்ப்பு அவ்வப்போது அங்கங்கே தோன்றிப் பல இன்னல்களை விளைத்துவந்தும் பொதுவாக மக்களிடம் சமய உணர்ச்சி நீங்கவே இல்லை. புதிது புதிதாக விஞ்ஞான ஆராய்ச்சி மிளிர்ந்து உலகில் பரந்தும் அதனால் சமய உணர்ச்சிக்குப் பல எதிர்ப்புகள் தோன்றியும் சமயம் குறைந்தபாடில்லை. ஆகவே சமய உணர்ச்சியின் பிடிப்பு மனிதனை விடாது பற்றிக்கொண்டேயிருக்கும். போதனைகள், துதிகள், நூல்கள், சடங்குகள், விழாக்கள் இவைகள் எல்லாம் சமயத்தை மறக்க முடியாமல் செய்

கின்றன. அப்போது உணர்ச்சி ததும்பி நிற்கிறது. உணர்ச்சி வெளிப்படையான சின்னங்களை உண்டு பண்ணுகின்றன. அச்சின்னங்களும் சமயத்தைக் காக்கின்றன. இவ்வாறு ஒன்றற்கொன்று உதவி புரியும் நிலையில் சமயமும் சமய நிலையங்களும் காக்கப்படுகின்றன. தென்னாட்டில் சமய உணர்ச்சியின் மேம்பாட்டிற்கு அவ்வுணர்ச்சி விளைவித்த நிலையங்களே போதிய சகாயத்தைச் செய்கின்றன. அஃது எவ்வாறு ஏற்படுகிறது என்று ஆராய்வோம்.

நிலையங்களின் வளர்ச்சி

சமய நிலையங்கள் கோயில், மடம், சங்கம் முதலிய பல இருந்தபோதிலும் சிறப்பாக இருப்பது கோயில் ஆகும். கோயில் மக்கள் வழிபடும் இறைவனின் இருப்பிடமாகும். மனிதன் தான் வாழ ஓர் இடம் அமைப்பது போலத்தான் வழிபடும் இறைவன் வாழ ஓர் இருப்பிடம் அமைத்தான். அப்படிப்பட்ட இருப்பிடம் அவனவனுடைய பண்பாட்டிற்கு ஒத்திருக்கிறது. இறைவன் உருவம் இல்லாதவனாக இருந்தபோதிலும் மனிதனுடைய வழிபாட்டிற்காக அவனுக்கு ஓர் உருவம் அமைக்கவேண்டிவரும். உருவம் இருந்தால் அது இருக்க ஓர் இடம் வேண்டாமா? அதுதான் கோயில் என்னப்பட்டது. மனிதன் வெறும் இல் கொண்டான். தன் இறைவனுக்கு கோ + இல் (= சிறந்த இல்) அமைத்தான். முதலில் ஒரே மேடையில் ஒரு கல் உரு வைக்கப்பட்டது. அதற்கு நிழல் கொடுக்க அரசமரம் தரப்பட்டது. மழைக்கும் வெயிலுக்கும் காப்பாக மட்டைச் சாலை போடப்பட்டது. பிறகு மண்சுவர் எழுப்பப்பட்டது. பிறகு செங்கல்மனையும் வில்லைக் கோப்பும் ஆக்கப்பட்டன. இப்படிப்பட்ட எளிய அமைப்புகளே பல்லவர் காலம் மட்டும் இருந்தது. (5 நூ.) அப்போது மகேந்திரவர்மன் என்ற பேரரசன் தோன்றினான். (600-630) இவன் கற்

பாறையில் உளியால் தோண்டிக் குடைகோயில் உண்டாக்கினன். அவைகள் திருக்கழுக்குன்றம், சிராப்பள்ளி, தளவனூர், சித்தன்னவாசல் முதலிய இடங்களில் உள்ளன. கற்றூண்கள் பொருந்திய மண்டபமாக ஆக்கப்பட்டது. அவன் மகன் மாமல்ல நரசிம்மன் (630-668) தகப்பன் செய்ததைப் பெருக்கினதன்றித் தனிப்பாறைகளைக் கோயில்களாக உருப்படுத்தினன். இவைகளே மாமல்லபுரத்திலுள்ள கல்தேர்கள். அவன் மகன் வர்மன் மாமல்லையிலுள்ள கடற்கரைகோயிலை செதுக்கின கற்களைக் கொண்டு கட்டுவித்தான். இதுவரைத் தனி உள் ஆக இருந்த கோயில் மற்றோர் அறையைக் கொண்டதாகி விட்டது. வீடுபோலக் கற்களாலே கட்டடமும் செய்யப்பட்டது. நரசிம்மவர்மன் II (690-715) காலத்தில் காஞ்சிக் கைலாசநாதர் கோயில் கட்டப்பட்டது. இதில் சுற்றுச் சிறு அறைகளும் மதிலும் சேர்ந்தன. பிறகு நந்திவர்மன் (717-779) பல்லவமல்லன் காஞ்சி வைகுண்டநாதன் கோயிலைக் கட்டினன். இதில் விமானம் வளர்ச்சி பெற்றது. பல அடுக்குகளைக் கொண்டிருந்தது. ஆகவே பல்லவர்கள் கோயில் கட்டடச் சிற்பத்தின் வளர்ச்சிக்கு வெகுவாகக் காரணபூதர்களாக இருந்தார்கள். பல்லவர்களுக்குப் பிறகு விஜயாலயச் சோழர்கள் தோன்றி 9-ம் நூற்றூண்டு முதல் 13-ம் நூற்றூண்டு வரை அதை வளர்த்துவிட்டார்கள். கைலாசநாதர் கோயிலின் சிற்பத்தை வளர்த்து வெகு பெரிதாக இராசராசன் I (980-1016) தஞ்சைக் கோயிலைக் கட்டினன். அதன் கம்பீரமான விமானம் உலகத்திலேயே பேர்போனது. அவன் பல பரிவார தேவர்களையும் சேர்த்துவைத்தான். அவன் மகன் கங்கைகொண்ட சோழன் (1012-1043) அதைவிடப் பெரிய கோயில் எழுப்ப முயன்றான். இவனே முதன் முதலாக அம்மனுக்

குத் தனிக்கோயில் எழுப்பினவன். பின் சோழர்கள் இக்கோயிலுக்குப் பல சேர்க்கைகளையும் மண்டபங்களையும் கோபுரங்களையும் கூட்டினர். கோபுரங்களையும் மண்டபங் களையும் மிகுதியாகவும் பெரிதாகவும் செய்தவர்கள் விஜய நகர அரசர்கள். அவர்களுடைய பிரதிநிதிகளான நாய்க் கர்கள் கல்யாணமண்டபங்கள் முதலிய சிற்ப விசேடங் களைச் சேர்த்தனர். வேலூர்க் கல்யாணமண்டபம், மதுரைப் புதுமண்டபம் இவைகளில் சேர்ந்தவை. அண்மையில் திருப்பணி செய்த நகரத்தார்கள் உண்ணாழி மண்டபங்கள், பிராகார மண்டபங்கள் இவைகளை ஆக்கினார்கள். மதுரை, இராமேச்சுரம் முதலிய கோயில்களிலுள்ள சுற்று மண்ட பங்கள் பெயர்போனவை. ஒரு மதிலை முதலில் கொண்ட கோயில் மூன்றுமதில், ஐந்துமதில், ஏழுமதில் கொள்ளத் தொடங்கியது. இந்த வளர்ச்சியைக் காணில் அரசமரத்து மேடைக்கோயில் நகரம்ஆக வளர்ந்தது என்னலாம். இவ் வளர்ச்சி முற்றுப்பெற, ஆயிரம் ஆண்டுகள் பிடித்தன. இது தான் தமிழ்ச் சமயநிலைய வளர்ச்சியின் சுருக்க வரலாறு.

### ஆலய அமைப்பின் பொருள்

மனிதனுடைய இருப்பிடம்போல் இறைவனுடைய இருப்பிடமாக ஆலயம் அமைக்கப்பட்டது என்று முன்னமே கூறப்பட்டது. மனிதனுடைய இருப்பிடம் எளிமையிலிருந்து வன்மை பெறல்போல் ஆலயத்தி னுடைய உருவமும் அமைப்பும் வளர்ச்சி அடைந்தது. மனிதனுக்குத் தேவைகள் மிகுதியாக ஆகஆக இருப்பிடத் தின் உறுப்புகளும் பெருகும். அதுபோலவே ஆலயத்தின் தேவைகள் சடங்குகளினால் பெருகப் பெருகப் புதுப்புதுச் சேர்க்கைகளும் சேர்க்கப்பெற்றன. ஆகவே ஆலயத்தின் பொருள் இறைவனின் இருப்பிடம் என்ற நிலையில்

கணிக்கப்பட்டது. இப்போதும் அந்நிலையில் தான் பொது மக்கள் அறிகிறார்கள். ஆனால் மனிதனுடைய தத்துவ அறிவு பெருகப் பெருகப் புதுப்புதுத் தத்துவங்களை எங்கும் காணத்தொடங்கினான். சமயத்திலும் சமயநிலையங்களிலும் புதுத் தத்துவங்களைக் காணுகிறான். ஆலயம் மனிதனுடைய உடலுக்கு உவமிக்கப் பெற்றது. மனிதனுடைய உயிர் அல்லது ஆன்மா அவன் உடலில் இருப்பதை ஒத்து இறைவன், கோயிலில் இருக்கிறான் என்பதே அது ஆகும். ஆன்மா இதயத்தில் இருக்கிறது. அது பல வாயில்கள் இல்லாதது. ஆகவே இறைவன் இருக்கும் கருப்பக் கிரகமும் பல வாயில்கள் இல்லாதிருக்கவேண்டும். மனிதனுக்குச் சடஉடல் ஒன்று. நுண்ணுடல்களோ, மூன்று ஐந்து ஏழு என்ற எண்ணிக்கை கொண்டவை. அது போல் ஆலயங்களும் ஒரு பிராகாரம், மூன்று ஐந்து ஏழு பிராகாரங்கள் கொண்டு இருக்கக் கட்டப்பட்டன. மூன்று-தூலம் சூக்குமம், காரணம் என்றும், ஐந்து - அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம், ஆனந்தமயம் என்ற கோசங்களென்றும், ஏழு - பூ, புவ, சுவ, மகா, தப, ஜன, சத்தியம் என்ற லோகங்களுக்கு ஏற்ற நுண் உடல்கள் என்றும் முதலான தத்துவங்கள் கூறப்பட்டன. இதனை திருமூலர் கூறுகிறார். மேலும் ஆலயத்தில் இருக்கும் ஒவ்வொரு பகுதிக்கும் ஒவ்வொரு பொருள் கூறப்படுகிறது. சடங்குகளுக்கும் அவ்வாறே பொருள்கள் உண்டு.

## கோயில் அமைப்பு வகைகள்

கோயில்களின் வகைகளிலே சிற்ப வகைகள், புராண வகைகள் என இரண்டு பிரிவுகளாக வகுக்கலாம். சிற்ப வகைகளில், நிலக்கோயில், மாடக் கோயில் என இரு வகைப்படும். சமநிலத்தில் கட்டுவது இயல்பாக ஏற்

பட்டதே. ஆனால், பல அடிகொண்ட மாடம் எழுப்பி அதன்பேரில் கோயில் கட்டுவது சிறப்பானது. சோழ நாட்டில் கோச்செங்கணார் 70-கோயில்கள் யானை புகாத படி மாடக்கோயில்களாகக் கட்டினதாக வரலாறு உண்டு. அவைகளில் சில பெருங்கோயில் என்றும் வழங்கும். அவைகளில் சில, வைகல், நாலூர், குடவாசல், நன்னிலம், அம்பர், ஆக்கூர், சாய்க்காடு, பழையாறைவடதளி, திரு வழுந்தூர், தலைச்சங்காடு, கீழ்வேளூர், தண்டலைநீணெறி, வலிவலம், திருநறையூர் என்பன. வைணவத்தில் அப்படிப் பட்டவை கச்சி, அத்திகிரி, சீவில்லிபுத்தூர் என்பன.

பழய கோயில் பழுதுபடப் புதுப்பித்தற்கு முன் பாலாலயம் செய்வதுண்டு. இதற்கு இளங்கோயில் என்று பெயர். உ-ம். மீயச்சூர் இளங்கோயில். மலைக்கோயில் கள் ஆவன சோழநாடு—ஈங்கோய்மலை, வாட்போக்கி, கற் குடி, சிராப்பள்ளி, எறும்பியூர், ஈழம்—திருக்கோணமலை, பாண்டி—பரங்குன்று, கொடுங்குன்று, கொங்கு—செங் குன்றூர், நடு — அறையணிநல்லூர், அண்ணாமலை, தொண்டை—கழுக்குன்றம், காளத்தி என்பன.

இனி, புராண ஐதீகங்களை ஒட்டி, பஞ்சபூதக் கோயில் கள், எட்டு வீரட்டக் கோயில்கள், சப்த விடங்கக் கோயில் கள், ஏழு தியாகராயக் கோயில்கள், பஞ்சசபைக் கோயில்கள், ஏழு நடனக் கோயில்கள், ஏழு ஸ்தானக் கோயில்கள், பதினொரு கருடசேவைக் கோயில்கள், பதினொரு இடபவாகனக் கோயில்கள், ஆறு படைவீடு கள், நவ திருப்பதிகள், பாடல்பெற்ற கோயில்கள், மங்களாசாசனக் கோயில்கள், வைப்புத்தலக் கோயில்கள், குன்றுதோறாடல்கள், சூரியபூஜைக் கோயில்கள், துவா தச சோதிர் லிங்கங்கள் முதலிய பல பாகுபாடுகள்

உண்டு. மேலும், ஈச்சரம், ஊர், களம், காடு, கா, காரோணம், குடி, குளம், குன்றம், கோயில், துறை, பள்ளி, புத்தூர், புலியூர், வாயில் முதலிய விகுதிகளைப் பெற்ற கோயில்கள் பல தொகுதிகளாய் உண்டு. இப் பாகுபாடுகள் அக்கோயில்கள் அமர்ந்த இடவசதிகளைப் பொறுத்து இருக்கின்றன.

### விமானம்

ஆலயத்தில் மிகப் புனிதமான பகுதி விமானம் என்பது. இது கருப்ப அறையாகிய மூலத்தானமும் அதில் மேல் கட்டப்படும் சிகரமும் சேர்ந்த பகுதி. விமானம் என்பதற்கு நன்றாக அளக்கப்பட்டது என்பது பொருள். கடவுள் இருப்பிடமாதலால் எல்லாச் சிறப்பும் இது பெற்றிருக்கவேண்டும் அல்லவா? பண்டைக் காலத்தில் ஆலயத்தில் மிகப் பெரிய பகுதி விமானம் தான். அப்படிச் சோழர் காலம் மட்டும் இருந்தது. (இராசராசேச்சரம் காண்க.) பின்னாலே நாய்க்கர்கள் காலத்திலே விமானம் சிறிதாகிக் கோபுரம் பெரிதாகிவிட்டது. மூலத்தானத்தின் சிறப்பு குறைந்தது. பிற்காலத்தில் சுற்றிலும் தென்முகக் கடவுள், லிங்கோத்பவர், காளி, திருமால் வைக்கப்பட்டனர். ஆனால் விமானமோ ஒரு நிலைமுதல் 7-நிலைமட்டும் உயர்ந்தது. தஞ்சையில் 14-நிலைகள் மட்டும் ஏறியது. பல தெய்வ உருவங்களும் வைக்கப்பட்டன. விமானம் மூன்று விதமாக ஏற்பட்டது.

1. நாகரம் (வடநாடு)
2. வேசாரம் (நடுநாடு)
3. திராவிடம் (தென்னாடு) என்பன

சிவபெருமானுக்குத் திராவிடமும், அம்மனுக்கு நாகரமும், முருகனுக்குத் திராவிடமும், பிள்ளையாருக்கு வேசாரமும் ஏற்படுவதற்குக் காரணம் உண்டு. இப்பிரிவுகள் வடமொழிச் சிற்பப் பிரிவினை. ஆனால் தென்னாட்டில் வேறொரு பிரிவினை உண்டு. சதுரக் கருவறை, அரை வட்டக் கருவறை என்பன. பொதுவாக சதுரக் கருவறை எங்கும் உண்டு. அரைவட்டக் கருவறை தொண்டை நாட்டில் மிகுதி. திருநின்றவூர், பனங்காட்டூர், மழிசை ஒத்தாண்டீசர், மாடம்பாக்கம் முதலான கோயில்கள் அரைவட்ட அறைகள். கருவறைகளுக்கு மேல் விமானம் சதுரம், நெல்லிக்கனி, வட்டம் முதலிய உருவங்கள் உண்டு. அரைவட்டக் கருவறையின்மேல் யானை முதுகுபோல் இருப்பது இயல்பு. திருநின்றவூர் முதலிய கோயில்களில் இருப்பவை அதுபோன்றவையே. திருத்தணி நந்தியாற்றங்கரையில் யானை முதுகும் அரைவட்ட முகமும் விமானத்திற்கு உண்டு. பெருமாள் ஆலயங்களில் பல வித உருவங்கள் உண்டு. அவற்றில் மூன்று அடுக்குள்ள அஷ்டாங்க விமானம் சிறந்தது. காஞ்சி வைகுண்டநாதர், திருக்கோட்டியூர் முதலிய கோயில்களின் விமானங்கள் இப்பேர்ப்பட்டவை.

மண்டபங்கள்

கோயிலினுள்ளே மக்கள் நின்று துதிப்பதற்கும் வேறு சடங்குகளைச் செய்வித்தற்கும் அமைக்கும் கட்டடங்கள் மண்டபங்கள் என்னப்படும். இவைகள் இரு வகைப்படும். பயனை அனுசரித்தவை, கால்களின் எண்ணிக்கைக் கொண்டு பெயர் பெறுபவவை.

பயனை அனுசரித்தவை வருமாறு:—1. கர்ப்பக்கிருகத்திற்கு முன்பாக வரிசையாக 1. அர்த்தமண்டபம்—4-கால்.

2. மகா மண்டபம்—6-கால். 3. ஸ்நபன மண்டபம்—8-கால். 4. நிருத்த மண்டபம்—12 அல்லது 20-கால். 5. விருஷப மண்டபம் 16 அல்லது 32 கால். இம்முறையில் கட்டப்படும். இவைகளில் கருவறை—தலை, அர்த்த மண்டபம்—நெற்றி, மகா மண்டபம்—கண்கள், ஸ்நபனம்—மூக்கு, நிருத்தம் — வாய், விருஷபம்—கழுத்து ஆகும். இவைகள் கருப்ப கிரகத்திற்கு உயரமாக இருக்கக்கூடாது.

இவ்விதமாக ஐந்து மண்டபப் பெயர்களேயன்றி வேறு பெயர்களும் உண்டு. 1. கருப்பக்கிருகம், 2. அந்தராளம், 3. அர்த்த மண்டபம், 4. மகா மண்டபம், 5. ஸ்நபனம், 6. முக மண்டபம் என்பன. முற்றுப்பெற்ற கோயில்களிலே இம்மண்டபங்கள்முழுதும் இருக்கும். ஆனால், முற்றுப்பெறாத கோயில்களிலே சில மாத்திரம் இருக்கலாம். இம்மண்டபங்கள் ஆராதிக்க வருபவர்கள் தங்கள் பக்குவத்திற்குத் தக்கபடி நின்று ஆராதிப்பார்கள்.

கோயிலிலே பிராகாரங்கள் ஐந்து வைக்கப்படும். அவைகள் I. கர்ப்பாவரணம், II. அந்தராக்கம், III. மத்தியார்க்கம், IV. மரியாதை, V. மகா மரியாதை என்னப்படும். இவ்விதமான பிரிவினைகள் காமிக ஆகமத்தில் கூறப்படுகின்றன. ஒவ்வொரு மண்டபத்திலும் என்னென்ன காரியங்கள் செய்யவேண்டும் என்றும் அது கூறுகின்றது.

2. எண்ணிக்கை மண்டபங்கள் :— இவைகளில் நான்கு, எட்டு, பதினாறு, முப்பத்திரண்டு, அறுபத்து நான்கு, நூற்றெட்டு, ஆயிரத்தெட்டுக் கால்களைக்கொண்ட மண்டபங்கள் உண்டு. இவைகளில் பெரியவைகள் பெரும்பாலும் வெளிப் பிராகாரங்களில் உண்டு. அவை பெருந் திரு

விழாக்களில் பயன்படுபவை. 100-கால்களும் 1000-கால்களும் கொண்டவை பெரும்பாலும் விஜயநகரத்தார் கற்பித்தவை.

(a) **1008**-கால் கொண்டவை:—1. சிதம்பரம் இராச சபை, சேக்கிழார் காலத்திலே இருந்தது.

2. திருவண்ணுமலை—1505-ல் கிருஷ்ணதேவராயன் கட்டினது, முடிவு பெறவில்லை.

3. மதுரை—1561-ல் அரியநாயக முதலியார் கட்டினது. அருமையான வேலைப்பாடு.

4. நெல்வேலி—நாயக்க மன்னர் வேலை. சிறு சிற்பங்கள் மிகுதி.

5. திருவரங்கம்—952-கால்கள் திருவிழாவில் 56-சேர்ப்பார்கள், முன் தூண்கள் அருமைப்பணி.

6. காஞ்சி ஏகம்பம்—3-ஆம் பிராகாரம், கால்களில் உருவங்கள் உண்டு.

7. திருப்பதித் திருமலை—1464-ல் சாளுவ மல்லையன் கட்டினது.

8. திருவக்கரை— சந்திர மௌலீசர் கோயில், கட்டினது சம்புவராயன், 13-ம் நூற்றுண்டு.

9. திருவாரூர்—தேவாசிரிய மண்டபம், காவணமாயிருந்தது கற்றாணுக்கப்பட்டது.

10. திருவானைக்கா—முன்னுல் உள்ளது, பூ வேலை, கொடிவேலை மிகுதி.

(b) **108**-கால் கொண்டவை :—1. சிதம்பரம், நரலோக வீரன் கட்டியது. 12-ம் நூற்றுண்டு.

2. திருச்சிராப்பள்ளி — தாயுமானவர் மலைமேல் இடது புறமாக உள்ளது.



காஞ்சிபுரம் நூற்றுக்கால் மண்டபம் [பக்கம் 78

3. திருவதிகை—வலதுபுறம், மணலிக்கூத்தன் நரலோக வீரன் கட்டியது. 12-ம் நூற்றாண்டு.
4. காளையார் கோயில்—1038. மாறவர்மன் குலசேகரன் I. காலம்.
5. காளத்தி—இரண்டாம் பிராகாரம், 1517-ல் கிருஷ்ணதேவராயன் கட்டியது.
6. முட்டம்—(தென் ஆர்க்காடு) குறுநில மன்னர்கள் வேலை.
7. மதுரை — புதுமண்டபம், 1625-ல் திருமலை நாயக்கன் கட்டியது. நாயக்க மன்னர் உருவங்கள் தூண்களில் உண்டு.
8. காஞ்சி—வரதராசர், அனந்தசரசின் தென்கரை, 1515-ல் கிருஷ்ணதேவராயன் கட்டியது. சிறந்த வேலைப்பாடு. யாளிகள், சங்கிலிகள், தாமரைகள் உண்டு.
9. காஞ்சி ஏகம்பம்—இதில் கச்சிமயானர் தளி உண்டு.
10. திருவானைக்கா—மூன்றும் பிராகாரம்.
11. திருக்கடவூர்—முதல் பிராகாரம், இடதுபக்கம். மேலே வளைவு கொண்டது.

108-ம், 1008-ம் கால்கள் கொண்ட மண்டபங்கள் வேறு எந்த நாட்டிலும் இருப்பதாகத் தெரியவில்லை. தமிழர்கள் சிற்ப வேலைப்பாட்டில் இவைகளை ஒரு பெரிய ஆக்க வேலைகளாகக் கொள்ளவேண்டும். திருவிழாக்கள், சொற்பொழிவுகள் முதலியவை நிகழ்வதற்கே இவை இயற்றப்பட்டன. சிதம்பரத்தில் ஆயிரக்கால் மண்டபத்தில் தான் சேக்கிழார் அடிகள் திருத்தொண்டர் புராணத்தை எடுத்துரைத்தார் என்பது வரலாறு. இவைகளில் பலவும்

தகுந்த பாதுகாப்பு இன்மையால் அழிந்து வருகின்றன. மேலே கூறியவைகள் சிறப்பாகத் தெரிந்தவைகள். தெரியாதவைகள் பலவும் இருக்கலாம்.

## கோபுரங்கள்

வீட்டிற்கு வாயில் இருப்பதுபோல, கோயிலுக்குக் கோபுரம் நியமிக்கப்பட்டது. கோபுரம் என்றால் பசு புகும் வாயில் என்பது பொருள். அதற்குக் கதவு உண்டு. ஆலயத்தின் அளவிற்குத் தக்க கோபுரம் கட்டப்பட்டது. முன் சோழர்கள் காலத்தில் விமானம் பெரியது கோபுரம் சிறியது. ஆனால், விஜயநகரத்தார் காலத்தில் விமானம் சிறியது கோபுரம் பெரியது. மிகப் பெரிய கோபுரங்கள் கிருஷ்ணதேவராயனால் (1509-1536) கட்டப்பட்டன. வெளிக் கோபுரம் அலங்காரமாகவும் பெரிதாகவும் கட்டப் படும். உட்கோபுரங்கள் ஒவ்வொரு வாயிலுக்கும் நன்றாக இருக்கும். பெரிய கோயில்களில் நாற்புறமும் நான்கு வாயில்கள் உண்டு. ஒவ்வொரு மதிலுக்கும் நான்கு வாயிலும் உண்டு. ஆகவே, மதுரை, நெல்வேலி, சிதம் பரம், திருவரங்கம், திருவண்ணாமலை முதலிய கோயில் களில் பல கோபுரங்கள் உண்டு. மிகப்பெரிய கோபுரங் கள், மதுரை, திருவண்ணாமலை, சிதம்பரம், விருத்தாசலம், சிவில்லிபுத்தூர், திருச்செந்தூர், இராமேச்சரம் முதலிய இடங்களில் உண்டு. காளத்தியில் இரண்டு பெரிய கோபுரங்கள் தனித்தனியே நிற்கின்றன. இவை, கிருஷ்ண தேவராயன் கட்டியவை. கோபுரங்கள் ஒன்று முதல் ஏழு நிலைகளைக் கொண்டுள்ளன. மேலே ஏறி இருக்கப் படிகள் உண்டு. ஒவ்வொரு நிலையிலும் பெரிய அறைகள் உண்டு. மிகப் பெரிய மாவிட்டங்கள் போட்ட அறைகள் உண்டு. ஒவ்வொரு தளத்தில் 300, 400 பேரும் தங்கி



திருவண்ணாமலை [பக்கம் 80

இருக்கத்தக்க அளவு கொண்டவை. காஞ்சிக் கோபுரத்தில் சில அதிகாரிகள் விருந்தும் விளையாட்டும் வைத்திருந் தனராம். அத்தனை பெரியது என்க. கோபுரத் தோற் றம் வெகு தொலைவில் தெரியும். அது தூலலிங்கம் என் பர். முதலில் அதையே தரிசிக்கவேண்டும். அதில் இறைவன் திருவிளையாடல் பொறித்திருக்கும். சிதம்பரம் கோயிற்கோபுரங்கள் பல காலங்களில் பலர் கட்டினர். கோப்பெருஞ்சிங்கன் கட்டினது கீழ்க்கோபுரம். இதில் 108-வித நடன உருவங்கள் சமைக்கப்பெற்றிருக்கின்றன. ஒரு கோபுரம் பச்சையப்ப முதலியார் மனைவி பழுது பார்த்தது. சீவில்லிபுத்தூர் கோபுரம் மிகப் பெரிய தாகும்.

## மதில்கள்

ஒவ்வொரு மதிலுக்கும் சுற்றுமதில் உண்டு; அதுவே கோயிலைப் பாதுகாப்பது. பெரிய கோயில் களில் அவை மிக வலுவாகக் கட்டப்பட்டிருக்கின்றன. செங்கல்லாலும் கருங்கல்லாலும் ஆகியவை உண்டு. மதில் கள் ஒன்று முதல் பதினொன்றுவரை உண்டு. இதனைத் தேக அமைப்புக்கும் அண்டபிண்டங்களுக்கும் உவமை யாகக் கூறுவர். பிள்ளையார் கோயிலில் ஒன்று இருந் தால், கோயில் நகரத்தில் பதினொன்று இருக்கும். மதில் களில் முன்னால் ஒரு வாயிலும், முன்பின் இரண்டுவாயிலும், நாற்புறங்களில் நான்கு வாயில்களும் இருப்பது உண்டு. மதில்களின்மேலே கோட்டை மதில்போல பூவேலைப் பாடும் உண்டு. பெரும்பாலும் மூலைகளில் நந்தி, கருடன் இவைகள் வைக்கப்பெற்றிருக்கும். மதில்கள் கட்டின தைக் குறித்துப் பல கதைகளும் உண்டு. திருவானைக் காவில் திருநீறு கொடுத்து மதில் கட்டினதாகக் கதை

உண்டு. கூலியாள் வீடு சென்றதும் வேலைக்குத்தக்க கூலி அதில் அங்கு இருக்குமாம். இக்காலங்களில் பல மதில்கள் அழிந்தும், செடி கொடிகள் படர்ந்தும் இருக்கின்றன. அவ்வாறு அழிந்து போகாதபடி பழுது பார்ப்பதற்காகக் கட்டினவர்கள் நிலதானம் செய்ததுண்டு. காளத்தி, திருவாலங்காடு முதலிய கோயில்களின் மதில்கள் கட்டின விஜயநகரத்தார் வராகஇலச்சினை இட்டிருக்கிறார்கள். திருவண்ணாமலை வெளிமதிலில் அதனைக் கட்டின விஜயநகரமன்னர் உருவங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. தாரமங்கலத்துக் கோயிலில் அதைக் கட்டின கெட்டி முதலியாரின் இலச்சினை வைக்கப்பட்டிருக்கிறது. காஞ்சி ஏகம்பர் வெளிமதிலில் புத்த நிர்வாண ஐதீக உருவம் இருக்கிறது. இவ்விதமாக மதில்களும் தம் கதையைப் பேசும் திறமை வாய்ந்திருக்கின்றன. சில மதில்களில் உட்புறம் சுற்றுமண்டபம் உண்டு. அஃது அம்மதிலுக்கு ஆதரவாக இருப்பதோடு மக்கள் இருப்பதற்கும் வசதியாக இருக்கும். சில ஆலயங்களில் அம்மண்டபம் இரட்டைநிலை கொண்டிருக்கும். சிதம்பரம் முதலிய கோயில்களில் அவ்வித மண்டபங்களைக் காணலாம். மதில்களிலே பெரும்பான்மையாகக் கல்வெட்டுக்கள் பொறிக்கப்பெற்றிருக்கும். அவைகளால் கோயில் வரலாறுமட்டுமேயன்றி, நாட்டு வரலாறும் அறிய முடியும். ஆகவே, மதில்களே கோயிற் கலைக்களஞ்சியங்கள் ஆகும்.

### சிற்பங்கள்

தமிழ் நாட்டில் சிற்பக்கலைக்கு மிகுந்த ஆதரவு அளித்திருக்கிறார்கள். உயர்ந்த சிற்பங்கள் கோயில்களில்தான் உண்டு. ஏனைய நாடுகளைப்போல சமயச் சார்பற்ற சிற்பங்கள் தென்னாட்டில் இல்லை. சமயச் சார்பு அற்றவை



திருவண்ணுமலை கணேசர் கோயில்

[பக்கம் 82

கோட்டைகள்தான். அங்கேயும் சமயக் கலப்பு இருக்க அறிகிறோம். ஆலயங்களில் எந்த மூலை முடுக்குகளை எடுத்துக்கொண்டாலும் சிற்ப மேம்பாடு உண்டு. மண்ட பங்களின் தூண்களில் எல்லாம் தேவர்களின் உருவங்கள், புராணக் கதைகள், அடியார்களின் வரலாறுகள், பலவித செடி, கொடி, விலங்கு, பூதம் முதலிய உருவங்கள், நாடகம், இசைகள், ஆடல்கள் முதலியன, மலர்கள், சங்கிலிகள் முதலியன எல்லாம் அருமையான வேலைப் பாட்டோடு ஆக்கப்பட்டிருக்கின்றன. நிலத்திண்ணைகள், சுவர்கள், விதானங்கள் முதலியவற்றிலும் இவைகளைக் காணலாம். கட்டின மக்களின் உருவங்களும் காணக் கூடும். வடிவங்கள் மிக மென்மையாகவும் நுண்ணிய தாகவும் இருக்கும். வேலூர் கல்யாண மண்டபத்திலும், கிருஷ்ணபுரம் சபாமண்டபத்திலும், பேரூர்க் கனகசபை யிலும், தாரமங்கலம் குதிரை மண்டபத்திலும் உள்ள சிற்பங்கள் மிகப் பெயர் பெற்றவை. யாளிவாயில் குண்டும், அசையும் சங்கிலிகளில் பூமொட்டும், குதிரை வாயில் சங்கிலிவாரும், சுவர்களில் பல்லி, அணில், தேள், பாம்பு, குரங்கும் அதிசயிக்கத்தக்க வகையில் செதுக்கப் பெற்றிருக்கின்றன. கோலாட்டங்களும், நடன பாவனை களும் சிதம்பரத்திலும் விருத்தாசலத்திலும் வெகு உருக்கமாக உண்டு. இவைகளை உண்டுபண்ணின கோப் பெருஞ்சிங்கனுடைய பணியாளர்கள் யாரோ அறியமுடி யுமா? இப்படிப்பட்ட சிற்பிகளின் சரித்திரங்களை ஐரோப் பியர்கள் எழுதாமல் விடுவார்களா? கோபுரங்களில் உள்ள காறைவேலையும், தேரில் உள்ள மரவேலைகளும், சில ஆலயங்களில் சந்தனமரத்தடுக்கு வேலையும் எவராலே செய்யமுடியும்? புராணக் கதை முழுதும் தேரில் அடங்கி யிருப்பது வியப்பல்லவா? மேலும், கோபுரங்களையே

தேராக உருவகப்படுத்தியதும், திருஅதிகையில் மூலத்தான விமானத்தையே திரிபுரதகனத் தேராக இயற்றியதும் எவர்தாம் கூறாமல் இருக்க முடியும்? இச் சிற்பப் பணி வேறெந்நாட்டில் உண்டு?

ஓவியம்

தமிழர்கள் பண்டைக் காலத்தில் கொண்டிருந்த ஓவியக் கலை இக்காலத்தில் இல்லை. என்றைக்கும் அழியாத வண்ணங்களை எப்படிக் கண்டு பிடித்தார்களோ அறியோம். சிற்றன்னவாசல் சித்திரங்கள் அழியாதவை என்பது மட்டுமோ, இயற்கையைக் காண்பதுபோல் உருவங்களைத் தீட்டியதே பெருமை யென்க. தஞ்சைக் கோயில் திருவுண்ணாழியில் உள்ள ஓவியங்கள் அழியாமல் இன்னும் இருக்கின்றன. சோழர் ஓவியத்தின்பேரில் நாயக்கர் ஓவியம் தீட்டப்பெற்றது வியப்பல்லவா? ஆனால், இவ்வோவியக்கலையை மிகுதியாகப் பிற்காலத்தார் கையாளவில்லை. காஞ்சியில் திருப்பருத்திக் குன்றத்தில் சமண ஆலயத்தின் மண்டபத்து முகட்டில் 24 தீர்த்தங்கரர்களின் சரிதமும் வரலாறாகத் தீட்டப்பெற்றதைக் கவனிக்க வேண்டும். திருவரங்கம் அரங்கநாயகி சன்னிதியில் உள்ள ஓவியம் பிற்காலத்தது. எனினும், அக்காலத்திய நடையுடை பாவனைகளை அவை காட்டும். தஞ்சை நாயக்கர்களும், மராட்டியரும் பல ஓவியப் படங்களை வரைப்பித்திருக்கிறார்கள். அவைகளிலே அக்காலத்து அரச உருவங்களைக் காணலாம். கொலு மண்டபங்களில் வண்ணப் பூக்கள் தீட்டினதையும் கண்டு களிக்கலாம்.

படிமங்கள்

ஆலயங்களில் திருவிழாக்களுக்காகச் செப்புத் திருமேனிகள் ஆக்கப்பட்டிருக்கின்றன. செப்பு என்றால்

செப்பு மட்டும் அல்ல. ஐந்து உலோகங்களையும் சேர்த்தே வார்த்திருப்பார்கள். இவ்வடிவங்கள் மிகவும் சிறந்தன. வடநாட்டாரும் தென் இந்திய வடிவங்களையே பாராட்டி எழுதியிருக்கின்றனர். இயற்கை அழகிலும் செயற்கை அழகிலும் தென் நாட்டுப் படிவங்களைப்போல் வேறு எங்கும் இல்லை எனலாம். எல்லாவற்றிலும் சிறந்த திருமேனி நடராச உருவமே ஆகும். தில்லை நடராசர் உரு உலகப்பிரசித்திபெற்றது. தஞ்சை நடராசர் எவரும் ஆச்சரியப்படத்தக்கது. பாண்டிநாட்டிலும் கோனேரிராசபுரத்திலும் உள்ள நடனமூர்த்திகளின் உருவங்கள் மிகப் பெரியவை. தென்முகக்கடவுள் சோமஸ்கந்தர் முதலிய திருமேனிகள் மிக அழகானவை. அடியார்களிலே நால்வர்களின் திருமேனிகள் ஒப்பற்ற சிறப்புவாய்ந்தவை. இலங்கைப் பொலன்னறுவையில் கண்டெடுத்த திருவுருவங்கள் இலங்கைப் பொருட்சாலையில் இருக்கின்றன. 13-ம் நூற்றுண்டுக்கு முன் செய்யப்பட்ட இவை இன்று செய்யப்பட்டவைபோல மிளிர்கின்றன. அனேக படிவங்களில் பெயர்கள் எழுதப்பட்டிருக்கின்றன. சிற்பநூல் விதிகளை அனுசரித்தே வார்க்கப்பெற்றிருக்கின்றன. கார்வேட்டி நகரத்து இராமர் ஆலயத்து இராமலட்சுமணர் சீதாப்பிராட்டி உருவங்கள் மிகப் பிரசித்திபெற்ற வேலைப்பாடு கொண்டவை. வெண்கலத் திருமேனிகளேயன்றி, கற்சிலைகளும் கணக்கில்லாத விதங்களில் உள்ளன. பாண்டிநாட்டு நடராசர்கள் கல்லினுல் செய்தவைகள். மிகப் பெரியவைகள். நாச்சியார்கோயில் கருடவாகனம் கல்லினுல் ஆனது. இவைகளின் வேலைப்பாடு மிகச் சிறந்தது.

## தேரும் வாகனமும்

கோயில்களில் திருவிழாக்கள் மூவகைப்படும். நித்தியம், நைமித்திகம், விசேடம் என்பன. நித்தியம்

என்பது நாள்தோறும் காலைமுதல் இரவுவரை நடை பெறுவது; நைமித்திகம் என்பது ஒரு நிமித்தத்தை ஒட்டி நடைபெறுவது; விசேடம் என்பது எப்போதாவது சிறப்பாக நடைபெறுவது. இவற்றில் பிரமோற்சவம் என்பது ஆண்டுக்கொருமுறை ஒருபட்சம் முழுவதும் நடைபெறுவது. கொடியேற்றம் முதல்கொண்டு சாந்தி வரை 15-நாள் நடைபெறும். ஒவ்வொரு நாளும் ஒவ் வொரு வாகனத்தில் உற்சவமூர்த்தி ஊரில் எழுந்தருளு வது. அந்த உற்சவங்களுக்காக வாகனங்கள் செய்து வைக்கப்படும். அவ்வாகனங்களாவன:—1. சந்திரசூரிய பிரவை, 2. இடபம், 3. மயில், 4. யானை, 5. மூஷிகம், 6. சிங்கம், 7. மஞ்சம், 8. தேர், 9. தெப்பம், 10. சப்பரம், 11. காமதேனு, 12. கற்பகவிருட்சம், 13. கைலாசம், 14. பூதம், 15. பல்லக்கு முதலியன இவைகள் ஆலயச் சொத்துக்குத் தகுந்தபடி மரம், பூச்சு, பித்தளை, வெள்ளி, தங்கம் இவைகளால் செய்யப்படும். வாகனங்களை எடுப்பதற்கு ஆளோ, சகடோ இருக்கும். தேர்கள், மரத்தேர், வெள்ளித்தேர், தங்கத்தேர் முதலியவை உண்டு. தேர்களில் மிகச் சிறந்த சிற்பவேலை செய்து பதிக்கப்பெறும். உருளை நான்கு முதல் 10-உருளை வரை இருப்பது உண்டு. திருவாரூர்த் தேர் மிகப் புகழ் பெற்றது. சீவில்லிபுத்தூர்த் தேர் மிகப் பெரியதென்பர். தேர் ஓட்டுதல் ஒரு சிறந்த கலை. எல்லாராலும் முடியாது. புறப்பட்ட பிறகு நிலைக்குச் சேர்ப்பித்தல் மிகக் கடினம். ஆயிரக் கணக்கான மக்கள் அதனை இழுக்கவேண்டும். தெப்பத் தேர், நீர்மேல் மிதக்கும் தேர். இஃது இக்காலத்தில் மின்சார விளக்கு களால் அலங்கரிக்கப்பட்டு வெகு சிறப்பாகச் செய்யப் படுகிறது. வெள்ளித் தேர்கள், திருவண்ணாமலை, பழனி

முதலிய இடங்களில் உண்டு. தேர்களில் ஆபாசமான உருவங்கள் வைத்ததன் பொருள் விளங்கவில்லை. வாகனம் தேர் இவைகளைச் செய்யும் தொழிலும் ஒரு சிறந்த தொழிலாகும்.

நந்தவனம்

திருவிழாக்களுக்கும் சிறப்பாக நித்தியபூஜைக்கும் மலர்கள் வேண்டும். புட்பவிதியில் ஏற்பட்ட மலர்கள் அந்தந்தக் கோயிலுக்கு ஏற்பட்ட முறையில் கிடைக்க வேண்டும். அதற்காகப் பண்டைக்காலம் முதலே பூந் தோட்டங்கள் ஆலயங்களை ஒட்டி வளர்க்கப்பட்டன. இத் தோட்டங்கள் நந்தவனங்கள் எனப் பெயர்பெறும். தோட்டங்களில் வேண்டிய பூஞ்செடிகளை வைத்து நீர் பாய்ச்சி விளைந்த மலர்களை விடியலில் எடுத்துத்தொடுத்துக் கோயிலுக்குச் சேர்ப்பதே ஓர் அரிய தொழில். சைவத்தில் சிவகாமியாண்டார், வைணவத்தில் பெரியாழ்வார் இத் தொழிலிலே ஈடுபட்ட அடியார்கள். இவ் வேலைக்காகப் பண்டை அரசர்கள் அனேக தான தருமங்களைச் செய்திருக்கிறார்கள். நந்தவனங்களில் கிணறு தோண்டி நீர் இறைத்தற்குத் தக்க ஊதியமும் உண்டு. பூக்கள் கோட்டுப் பூ, கொடிப்பூ, நீர்ப் பூ, நிலப்பூ என நான்கு வகை. இவைகளை வளர்ப்பதற்காகக் கிணறுகளேயன்றித் தடாகங்களும் வைக்கப்படும். சில பூந்தோட்டங்களில் கோயிலுக்கு வேண்டிய தேங்காய் பழம் வகைகளுக்காகத் தென்னை, மா, கமுகு, வாழை முதலியவைகளும் பயிரிடுவதுண்டு. ஆலயங்களில் திருவமுது செய்வித்தற்கு முன்னாளில் நன்செய் புன்செய் நிலங்களைத் தானம் செய்திருந்தார்கள். இவைகளில் விளையும் நெல் முதலிய தானியங்கள் நைவேத்தியத் தினத்திற்கும், திருப்பணியாளர்களின் பிரசாதங்களுக்கும் வினியோகம் செய்யப்படும்.

இவ்வகைச் செயல்களை நடத்தக் கணக்கர் முதலிய தொழிலாளர்கள் உண்டு. தானியங்களைச் சேகரித்து வைக்கக் களஞ்சியங்கள் கட்டிவைத்திருப்பதுண்டு. பெரிய களஞ்சியங்களை அழகர்கோயில் முதலிய கோயில்களில் காணலாம்.

### தீர்த்தங்கள் திருக்குளங்கள் முதலியன

ஆலயங்களை ஒட்டித் திருக்குளங்கள் உண்டு. மூர்த்திகளுக்குத் தீர்த்தம் எடுப்பதற்கும், அன்பர்கள் நீராடுவதற்கும் திருக்குளங்கள் உண்டு. மிகப் பெரிய குளங்களும் சிறிய கேணிகளும் இருக்கின்றன. பெரிய திருக்குளங்களில் தெப்பம் நடைபெறும். நாற்புறங்களிலும் அழகாகப் படிகள் கட்டியிருப்பார்கள். திருக்குளங்களுக்குத் தனித்தனிப் பெயர்களும் உண்டு. தெப்பத்திற்குத் தனிக்குளமும் தீர்த்தத்திற்கு வேறு குளமும் இருப்பதுண்டு. மதுரையில் பொற்றாமரை, சிதம்பரத்தில் சிவகங்கை, திருவரங்கத்தில் சந்திரபுஷ்கரணி, திருமலையில் கோனேரி, காஞ்சியில் சருவதீர்த்தம், திருக்கழுக்குன்றத்தில் சங்குதீர்த்தம், திருவாரூரில் கமலாலயம் முதலிய பெயர்கள் உண்டு. மதுரை வண்டூர் தெப்பக்குளமும், திருவாரூர்க் கமலாலயமும் மிகப் பெரியவை. ஒவ்வொரு கோயிலில் பல திருக்குளங்கள் உண்டு. திருவண்ணாமலையில் அவ்விதம் காணலாம். சில குளங்களுக்குப் போக்கு வரவு உண்டு. திருப்பேரூர்க்குளம் பதினாறு மூலைகொண்டு அழகாக வாய்ந்திருப்பது. அதனைத் திருக்கணம்பிசங்கரையன் மகன் மாதையன் கட்டினான். சில தீர்த்தங்களில் கட்டினவன் இலச்சினை செதுக்கப்பட்டிருக்கிறது. தாரமங்கலத்தில் அப்படிப்பட்ட இலச்சினை உண்டு. சில குளங்களுக்கு



திருப்பரங்குன்றம் தெப்பக்குளமும் மலையும் [பக்கம் 89

இறங்குவழிக்கு மேலே சிங்கம் அல்லது நந்திஉருவம் முகத்துவாரமாக வைக்கப்பட்டிருக்கும். குடியேற்றம் முதல் திருச்செங்கோடு, அவிநாசி, பேரூர் முதலிய கோயில்களில் காணலாம். சில தீர்த்தங்கள் அரைவட்டம், முழுவட்டம், சதுரம், நீளச்சதுரம், சுவத்தீகம் முதலிய உருவங்களைப் படைத்திருக்கின்றன. சுவத்தீகம் திருவெள்ளறைக் கோயிலில் கண்ட தீர்த்தத்தின் உருவம். சில இடங்களில் ஆறுகளே தீர்த்தங்களாக அமைந்திருக்கும். சில தீர்த்தங்களே தலத்திற்குப் பெயர் தருவன. திருவையாறு, திருவல்லிக்கேணி முதலியன.

## கலையுணர்ச்சி

திருக்கோயில்கள் வழிபாட்டுக்கு மட்டுமன்றி கலையுணர்ச்சி ஊட்டுவதற்கும் கல்வி பயிற்றுவிப்பதற்கும் பயன்படுகின்றன. தேவாராதி பண்கண்ட பாடல்கள் கோயில்களிலேயே தோன்றி கோயில்களிலே பயிலப்படுகின்றன. சோழர்கள்காலமுதல் தேவாராதிகளை ஓதுவதற்கு ஓதுவார்கள் நியமித்து அவர்களுக்குத் தான தருமங்களைச் செய்துள்ளார்கள். இசையும் துதியுமேயன்றிப் பலவிதக் கலைகளையும் ஓதிவைக்கக் கலாசாலைகளும் ஏற்பட்டிருந்தன. நாள்தோறும் திருமுன்னர் நடனம் ஆடுவதற்கும் நாட்டியக்கலை போதிக்கப்பட்டது. இவைகளுக்கு வேண்டிய இசைக் கருவிகளும் தொகுத்து வைத்திருந்தனர். தமிழர்களுடைய பண்டை இசைக் கருவிகளை ஆலயங்களிலேதான் காணலாம். தோற்கருவி, துளைக்கருவி கஞ்சக்கருவி, நரம்புக்கருவி முதலிய வேறுபாடுகளைக் கோயில்களில்தான் காணமுடியும். உலகவழக்கில் பிற நாட்டுக் கருவிகள் புகுந்துகொண்டன. ஆனால், கோயில்களில் அவை புகவில்லை. பண்டைய தமிழர் இசைக்

கருவிகள் நெல்லை, கிருஷ்ணாபுரம் கோயில்களில் கற்சிற்பங்களில் காணலாம். கல்நாகசுரம் ஆழ்வார்த்திருநகரியிலும், பஞ்சமுக வாத்தியம் என்னும் குடமுழா திருத்துறைப் பூண்டியிலும் பார்க்கலாம். ஆடல் பாடல்களேயன்றி, சகல கலைவளர்ச்சியும் கோயிலே பரிபாலித்து வந்தது என்று கூறினால் மிகை இல்லை.

---

## 5. நீர் நிலைகள்

### இயற்கை வளங்கள்

தமிழ்நாடு இயற்கையிலேயே பல நிலவளங்களைப் பெற்றிருக்கிறது என்று முன்னமே கூறியிருக்கின்றோம். அவற்றிலே நீர்நிலைகள் சிறந்தவை. நீர்நிலைகளுக்குப் பருவ மழையே ஆதாரம். மழைக்கு மலைகளில் இருக்கும் பெருஞ்சோலைகளே தூண்டுதல். இந்த வகைகளில் எல்லாம் தமிழ்நாடு சிறப்புப் பெற்றிருக்கின்றது. நாட்டின் சில ஒழுங்கை ஆராய்வோம். மேற்கு எல்லை அனைத்தும் மலைத்தொடர்கள். அங்கிருந்து நிலம் கீழ்க்கடல்வரை சாய்வாக இருக்கிறது. ஆகவே, மேற்கு மலைகளிலே ஆறுகள் தோன்றிக் கிழக்கே ஓடிக் கடலில் விழுகின்றன. மேற்கு மலைகளில் பெய்யும் மழையினால்தான் நீர்ச் செழிப்பு நாட்டில் விளங்குகிறது. மற்ற இடங்களில் பெய்யும் மழையினால் சிறு குட்டைகள் சிறு ஏரிகள் நிரம்பலாம். அவைகள் ஆண்டுமுழுதும் தாங்கா. ஆகவே, நாட்டின் செழிப்பு மேற்குமலை மழையைச் சேகரித்து வைப்பதிலேதான் நிற்கிறது. அஃதாவது அங்கே தோன்றுகிற ஆறுகளைக் கட்டுப்படுத்தி வெள்ளத்தைத் தடைசெய்து தேக்கம் செய்வதினாலேயே நீரைக் கட்டுப்படுத்தலாம்.

இந்தச் சிறப்பைப் பண்டைக் காலத்திலேயே தமிழர்கள் அறிந்திருக்கிறார்கள். அந்த அறிவைப் பயன்படுத்திக் கொண்டு தம் சொந்த உழைப்பினாலே நாட்டில் பஞ்சம் ஏற்படாமல் பாதுகாத்திருக்கிறார்கள். அந்த முறையில் தமிழர்கள் முன்னாளில் செய்த செயற்கைப்பணிகள் பல. அப்பணிகளை ஆய்ந்து பார்த்தால் அவர்கள் கொண்ட முயற்சியின் பெருமை நன்கு அறியலாம்.

1. மலைகள்: மேற்குமலைத்தொடர் வடக்கே குடகுநாட்டிலிருந்து தெற்கே குமரிமுனை மட்டும் படர்ந்து ஓங்கி நிற்கிறது. இத்தொடர் சில இடங்களில் உயர்ந்தும் சில இடங்களில் தாழ்ந்தும் இருக்கிறது. நீலகிரிப் பகுதி, பழனி அல்லது வராகமலைப் பகுதி என்ற இரண்டும் அடர்ந்தும் அகன்றும் உயர்ந்தும் உள்ளவை. இவைகளிலிருந்து தோன்றும் ஆறுகள் மிக்க பலனைத் தருகின்றன. மற்றும் சில பள்ளத்தாக்குகளிலும் அவ்வாறே காணலாம்.

2. ஆறுகள்: இம்மலைகளில் தோன்றும் ஆறுகள் பலவும் ஒன்றுகூடி கடல்வரையும் செல்லுபவை சிலவே. பாலாறு, பெண்ணாறு, காவிரியாறு, வைகையாறு, தண்பொருநையாறு இவைகளே சிறந்தவை. இவைகளே யன்றிக் கூவம், அடையாறு, வடவெள்ளாறு, தென்வெள்ளாறு, வைப்பாறு முதலிய சிற்றாறுகள் உண்டு. மேலே கண்ட பேராறுகளுக்குப் பல உப ஆறுகள் உண்டு, சிறப்பாகக், காவிரிக்கு மாயாறு, வானியாறு, நொய்யலாறு, ஆன்பொருனையாறு (ஆமிராவதி), சண்முகநதி, குடவனாறு முதலியன உண்டு. காவிரியின் கிளைநதிகள் கொள்ளிடம், முடிகொண்டான், அரிசிலாறு, வெட்டாறு, குடமுருட்டி, விண்ணாறு முதலியன. இவ்வகையில் பல ஆறுகள் தென்னாட்டைச் செழிக்கச் செய்கின்றன.

3. ஏரிகள்: ஆறுகளிலிருந்து வாய்க்கால்கள் பிரிக்கப்பட்டு அவ்வாய்க்கால் வழியாக நீர் சென்று ஏரிகளில் நிறைந்து தேங்குகிறது. அந்நீர் மீண்டு வாய்க்கால் வழியே சென்று நிலங்களுக்குப் பாய்கிறது. இந்த வகையில் மேட்டுப் பாங்கான இடங்களும் நீர் பெறுகின்றன.

4. குளம் குட்டைகள்: மழைநீர் தேங்கி, குளம் குட்டைகளில் நிரம்பி அவைகளின்மூலம் சில்லறைப் பாசனங்களுக்குப் பாய்ச்சலும் கிணறுகளுக்கு ஊற்று நீரும் தருகின்றது. இந்த வகையில் பெரும்பாலான உள்நாட்டு இடங்கள் நீர்வசதி பெறுகின்றன. இந்த வசதிகள் எல்லாம் செய்த மக்கள் தமிழர்களே. அச் சிறப்புச் செயல்களைச் சிறிது விரிவாக ஆராயலாம்.

அணைக்கட்டுகள்

ஓடும் ஆற்றின் குறுக்கே கல்லால் அணைகட்டித் தண்ணீரைத் தேக்கிக் கால்வாய் வழியாகப் பிரித்து மேடான நிலங்களுக்கு நீர்பாய்ச்சிச் சாகுபடி செய்யும் நுண்ணிய அறிவு பண்டைத் தமிழர்களுக்கு இருந்தது. சிறிய ஆறுகளுக்கு அணைகட்டுதல் மிக எளிது. பெரிய ஆறுகளுக்கு அணைகட்டுதல் மிகக் கடினம். இக்காலத்தில் காவிரிக்குக் கட்டிய மேட்டூர்அணை பல கோடி ரூபாய் செலவழித்துப் புதிய இயந்திர உதவிகளினால் கட்டப்பட்டது. பல ஆயிரம் ஆட்கள் மிகப் படித்த பொறிவல்லாரைக் கொண்டு பல ஆண்டுகள் கட்டப்பட்டது. ஆனால், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்தி இக்காலத்திய விஞ்ஞானக் கலை முதிராத நாளில் அதே காவிரிக்கு மூன்று பெரிய அணைகளைச் சோழ மன்னர்கள் எவ்வாறு கட்டி முடித்தார்கள். பல நூறாயிரக் கணக்



மேட்டூர் அணைக்கட்டு

[பக்கம் 92

கான ஏகர் நிலங்களை உயர்ந்த நன்செய்கள் ஆக்கியது சோழர்களுடைய நன்மதி அல்லவா? கரிகாற்சோழன் 2000-ஆண்டுகளுக்கு முன் திருவரங்கத்திற்கு மேற்கே திருப்பராய்த்துறைக்கு அருகில் அணைகட்டி மிகுதியாக வந்த வெள்ளத்தை நாட்டின்மீது ஏறுதபடி கொள்ளிடம் கொள்ளும்படி நீரைத் திருப்பின செயல் எவரே செய்ய முடியும்? மேலும், அதற்குச் சில காதங்களுக்குக் கிழக்கே மற்ருேர் அணைக்கட்டைச் சோழர்கள் கட்டிப் புது ஆறு களை உண்டாக்கி நாட்டை நெற்களஞ்சியம் ஆக்கினது எவர் செய்யமுடியும்? அதற்கும் கிழக்கே மூன்ருேம் அணைகோலி மற்றும் வேறு கிளைகளைப் பிரித்துவிட்டது எப்படிப்பட்ட அருஞ்செயல்? அக்காலத்துச் சோழர்கள் அணைகட்டிப் பல கிளைநதிகளைத் திருப்பின வரலாற்றைப் பல அருங்கதைகளாகக் கூறுகின்றனர். சசிசேகரச் சோழன் என்ற காவிரிக்குக் கரைகண்டசோழன் கதை இப்படிப்பட்டதே! கொள்ளிடம், அரிசிலாறு, முடி கொண்டான், குடமுருட்டி, வெட்டாறு, விண்ணுறு முதலிய பல கிளைகளும் இந்தச் செயற்கை வகையில் ஏற்பட்டவையே! இவைகளில் கொள்ளிடமும் அரிசி லாறும் தேவாராதிகளில் கூறப்பட்டதென்று அறிய வேண்டும். பின், சோழர்களும் இந்த அணை வேலைகளை அவ்வப்போது பழுது பார்த்து வளர்த்திருக்கிருர்கள்.

மேலும், மற்ற ஆறுகளுக்கும் இவ்வாறு பல அணை கள் கட்டப்பட்டன. வானியாறு என்ற பவானி நதிக்குக் கொடுவேரியில் கட்டிய அணை பூதங்களால் கட்டப்பட் டது என்பர். இஃது இரண்டு தாலூகா நிலங்களுக்கு இருபோக நெல்லைத் தருகிறது. பவானிக்கருகில் கட்டின அணையும் பெயர்போனதே. இதனைக் காளிங்கராயன் என்ற குறுநிலத்தலைவன் ஆக்கினது. இதிலிருந்து பிரி

யும் கால்வாய் அவன் பெயராலே இன்று வழங்குகிறது. 35 கல்வரைக்கும் நீர்பாய்கிறது. டணாய்க்கன் கோட்டை அணை தண்டநாயக்கன் என்ற படைத் தலைவனால் ஆக்கப் பட்டது. ஒரு பகுதி இடிந்துபோக அதனைப் பழுது பார்க்க ஆங்கிலர் பட்ட வருத்தத்திற்கு அளவில்லை. நொய்யலாற்றிற்குப் பண்டை மன்னர்களால் கட்டப்பட்ட அணைகள் பதினாறு. இவைகளால், கொங்குநாட்டின் ஒரு பகுதியே நன்செய் ஆகிவிட்டது. இவ்வாறாகவே, பாலாறு, கொள்ளாறு, தாமிரபரணி, சிற்றாறு முதலிய பல ஆறு களுக்குப் பல அணைகள் கட்டப்பட்டன. இவைகள் எல்லாம் பண்டை ஆட்சிக் காலங்களிலேயே கட்டப் பட்டன.

குறுக்கே அணைகள் கட்டி நீரை வாய்க்காலில் திருப்புவது ஓர் அரிய செயல். அதுமட்டும் அல்ல. பெரும் வெள்ளம் வந்து கரைபுரண்டு நிலங்களும் ஊர் களும் சேதம் அடைவது இயற்கை. அவ்விதமாகக் காவிரி அடிக்கடி கரைபுரண்டதுண்டு. சோழர்கள் அதற்குக் கரை கட்டினார்கள். அவன் பெயர் 'காவிரிக்குக் கரை கண்டசோழன்' என்பது. இக்கரைகள் மாயனூர், திருப் பராய்த்துறை என்ற இடங்களுக்கு அருகில் உள்ளன. வைகையிலும் ஒருகால் கரை உடைந்தது. அப்போது வாதவூரடிகள் காலம். பாண்டியன் கரைகட்ட ஆட்கள் விட வந்தியின் ஆள் திருவிளையாடல் செய்தது அறிவோம். மேலும், தாமிரபரணியில் சீவைகுண்டத்திற்கருகில் இப் படிப்பட்ட பெரிய அணை உண்டு. இவ்வாறான அணைகள் பண்டை அரசர்கள் காலத்திலேயே கட்டப்பட்டன. பல சிற்றாறுகளுக்கும் இவ்விதமான கரையணைகள் உண்டு.

வாய்க்கால்

அணையிலிருந்தோ அல்லது ஆற்றிலிருந்து நேராகவோ வாய்க்கால்கள் பிரிக்கப்படும். அதிலிருந்து சிறுசிறு கால்கள் பிரிந்து நிலத்திற்கு நீர் பாயும். இப்படிப்பட்ட வாய்க்கால்களை அரசர்களே வெட்டி யிருக்கிறார்கள். வெட்டின ஆட்களின் பெயராலே அவை வழங்குவ துண்டு. கோவையில் பேரூர் அணையிலிருந்து பிரிந்த வாய்க்காலுக்குக் கல்வெட்டில் வெட்டினவர் பெயரொன் றிருக்க அஃது இப்போது இராஜ வாய்க்கால் என்று மட்டும் வழங்குகிறது. சில வாய்க்கால்கள் ஊர்ப் பெய ரால் வழங்கும். உதாரணம்: குறிச்சி வாய்க்கால். சில தேவதைகளின் பெயரால் வழங்கும். உதாரணம்: சோழ நாட்டில் நீலி வாய்க்கால்.

வாய்க்கால் அமைப்பதற்கு மிகுந்த அறிவு வேண் டும். நீர் தேங்காமல் ஒரேவிதமாக ஓடுவதற்குரிய வாட் டம் கண்டுபிடித்துத் தோண்டிக் கரைகட்டவேண்டும். இக்காலத்தில் நீர்மட்டம், இரசமட்டம் முதலிய கருவி கள் உண்டு. முன்னாளில் இக்கருவிகள் இல்லாதிருந்தும் எவ்வாறு பிசகின்றிக் கட்டினார்களோ அறியோம்.

வாய்க்கால் கட்டுவதில் பயனில்லை. அவைகளின் வழியாகப் பாயும் நீரை வீண் இன்றியும், குறைவின்றியும் போதுமான அளவு நிலங்களுக்குப் பாய்ச்சுவதே மிகக் கடினமான வேலை. அதனை இக்காலம் அரசியல் பணி யாளரும் கிராமப் பஞ்சாயத்தாரும் செய்கின்றனர். என் றாலும், குற்றம் குறைகள் நிரம்ப ஏற்படுகின்றன. 'வல்லான் வகுத்ததே வாய்க்கால்' என்ற பழமொழியும் புகுந்துவிட்டது. முன்னாளில் ஊர்ச் சபையார்கள் இச் செயலைச் செய்து வந்தார்கள். எவருக்கும் யாதொரு

வருத்தமுமின்றி நீர்ப்பாய்ச்சலை வகுத்துவிட்டார்களாம். அப்போது உண்மைக்குடியரசு இருந்ததினால் யாதொரு ஒரச்செயலும் இன்றி, செயல் நன்றாக நடந்துவந்தது. இதனைக் கல் வெட்டுக்கள் மெய்ப்பிக்கின்றன.

ஏரி

மலைகள் பள்ளத்தாக்குகள் உள்ள இடங்களில் பெரிய ஏரிகளை அமைப்பது எளிது. தாழ்வான இடத்தில் அணைகோலினால் போதும். ஆனால், சமநிலத்தில் ஏரி கட்டுவது கடினம். அதிலும், பெரிய ஏரிகளைக் கட்டுவது எல்லாம் மிகக் கடினம். தமிழ்நாட்டிலே பண்டைக் காலம் முதல் உள்ள பெரிய ஏரிகள் சிலவே. வட ஆர்க்காட்டில் காவேரிப்பாக்கம் ஏரி, மாமண்டூர் ஏரி, இவைகள் பல்லவர் காலத்திலேயே ஏற்பட்டிருக்கவேண்டும். காவேரிப்பாக்கத்து ஏரியில் மகேந்திரவாடிக் கால் வாய் ஓடுகிறது. மகேந்திரன் (7-ம் நூற்றாண்டு) பல்லவன் மாமண்டூர் ஏரியின் கரையில் குடைக்கோயில் உண்டு. ஆகவே, அதுவும் பல்லவர் காலம். செங்கற்பட்டில் செம்பரம்பாக்கம், செங்கற்பட்டு ஏரிகள் பெரியவை. இவைகளின் அருகேயும் குடைக்கோயில் மலைகள் உண்டு. தென் ஆர்க்காட்டில் வீராணம் ஏரி இருக்கிறது. இது புராண சம்பந்தப்பட்டது. இதைப்பற்றிச் செங்குந்தர் புராணத்திற் காண்க. இந்த ஏரிகள் மிகப் பெரியவைகள். அவைகள் ஒவ்வொன்றும் பல சதுரமைல் கொண்டவை. 50, 60 கிராமங்களுக்கு நீர் பாயும்படியானது.

இராமநாதபுரம் வட்டத்தில் உள்ள பாய்ச்சல் ஏரிகளுக்குக் கண்மாய் என்று பெயர். அவைகள் பெரும்பாலும் மழைநீர் நிரம்பிய ஏரிகள். கொங்கு நாட்டில் குளங்கள் என்று பெயர். பெரும்பாலும் ஆற்றுநீரால்

நிரம்புபவை. ஆனால், இவைகள் ஒன்றிரண்டு சதுரமைல் அளவு கொண்டவைகளே. கோவையைச் சுற்றிப் பல குளங்கள் உள்ளன. செல்லாம்பதி, கிருஷ்ணம்பதி, நரசாம்பதி, பெரியகுளம், சின்னக்குளம், வாலாங்குளம் என்ற பெயர்களைக் கொண்டவைகள். இவைகளுக்கு வாய்க்கால் வழியாக நீர் வரும்.

ஏரிகள் குளங்கள் முதலியவைகளிலிருந்து மதகுகளின் வழியாக நீர் ஓடி, வாய்க்கால் வழியாக நிலங்களுக்குப் பாயும். இப்பாய்ச்சல் வசதிகள் எல்லாம் முன் நாளில் சிறந்த அறிவோடு ஆக்கப்பெற்றது. எத்தனை நிலங்களுக்குப் பாய்ச்சக்கூடுமோ அத்தனைமட்டும் அளவிட்டு அமைத்திருந்தார்கள். இதுவும் வியப்பே.

## குளம், குட்டை, கிணறுகள்

ஆற்றங்கரை ஓரமும் ஏரிகளின் கீழும் நன்செய் சாகுபடி நடைபெறும். அவைகளுக்கு நீர்ப்பாய்ச்சல் வாய்க்கால்களே. ஆனால், அவ்வாறான நீர்வசதிகள் இல்லாத மேட்டு நிலங்களிலே என்ன ஏற்பாடு செய்யப்பட்டது? வானவாரி நிலங்கள் மழை நீரையே எதிர் பார்த்திருந்தன. பருவமழை கெட்டால் நிலத்தில் பயிரும் கெட்டுவிடும். ஆகவே, உழைப்பு மிகுந்த உழவர்கள் குளம், குட்டை, கிணறு இவைகளை வகுத்திருந்தார்கள். குடியிருப்புக்களுக்கு அருகில் மண்மேடு இட்டுக் கரை ஆக்கி நீர் தேங்கச் செய்வார்கள். இவைகள் சிறிய அளவிலே இருந்ததினால் இவைகளுக்குக் குளம், குட்டை, என்ற பெயர்கள் வந்தன. இவைகளில் நீர் நிரம்பினால் அடுத்துள்ள ஊர்க் கிணறுகளுக்கும் காட்டுக் கிணறுகளுக்கும் நீர்ஊற்றம் ஏற்படும். கொங்குநாட்டில் எல்லாச் சிற்றூர்களிலும் இப்பேர்ப்பட்ட சிறு குளங்

களும் குட்டைகளும் இருந்தன. ஆனால், அண்மையிலே பேராசையினாலே பல குட்டைகள் தூர்க்கப்பட்டு வேளாண்மைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. பல குட்டைகள் தகுந்தபடி பழுது பார்க்கப்படாமல் தூர்ந்து போயின. இந்தக் காரணத்தினால் நீர் நிற்காமல் வீணாகப் போய்க் கிணறுகளுக்கு ஊற்றம் இல்லாமல் போய்விட்டது. பழைய முறைப்படி குட்டைகளைச் சீர்திருத்துவதே நன்று என்று மக்கள் முறையிடுகிறார்கள். குட்டைகளுக்குப் பாண்டிநாட்டில் தாங்கல் அல்லது ஏந்தல் என்ற பெயர் உண்டு. ஊர்களுக்கும் அருகாமை என்ற காரணத்தினால் இப்பெயர்கள் ஏற்பட்டுவிட்டன. இளவரசனேந்தல், வெள்ளைத்தாங்கல் என்பவை காண்க.

இனி ஊர்நடுவில் மக்கள் உண்ணுவதற்காகக் காவ லிட்டு வைத்திருக்கும் குட்டைகளுக்கு ஊருணி என்று பெயர். இவை பாண்டிநாட்டில் மிகுதி. திருக்குறளில்,

> "ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
> பேரறி வாளன் திரு"

என வந்துள்ளதைக் காண்க. எ-டு. செக்கா னூருணி.

நெய்தல் நிலத்தில் மணற் பாங்கான இடத்தில் தோண்டும் நீர்நிலைக்குக் கேணி என்று பெயர். திருக்குறளில்,

> "தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
> கற்றனைத் தூறும் அறிவு"

எனப்படும். எ-டு. திருவல்லிக்கேணி.

மேட்டுப்பாங்கான நிலத்தில் கற்பாறைகளில் ஆழமாக வெட்டும் நீர்நிலைக்குக் கிணறு எனப் பெயர். எ-டு. வெள்ளைக்கிணறு. கிணறுகள் ஊர்களில் குடிநீர் எடுத்தற்குமட்டும் அன்று. தோட்டக்கால்களில் நீர் இறைத்தற்கும்

உதவும். கொங்குநாட்டிலும், நடுநாட்டிலும் இறைவைக் கிணறுகள் மிகுதி. ஆழமான கிணறுகளில் கவலை ஏற்றத்தி ஞலும், ஆழமில்லாத கிணறுகளில் கையேற்றத்திஞலும் (ஏணி ஏற்றம்) நீர் இறைப்பார்கள். இக்காலத்தில் புது முறை ஏற்றங்கள் பல ஏற்பட்டிருக்கின்றன. ஆழமான கிணறுகளில் படிக்கிணற்றுக்கு 'இறங்குகிணறு' எனவும், படியில்லாக் கிணற்றுக்குச் 'சேந்துகிணறு' எனவும் பெயர்.

பாலாற்றிலும் பெண்ணையாற்றிலும் மழைக்காலம் தவிர, ஏனைய பருவங்களில் வெறும் மணல்வெளியே தோன்றும். அதில் ஊற்றுக்கால்கள் தோண்டி வாய்க் கால் ஆக்கிக் கீழ்நிலங்களுக்கு நீர் பாய்ச்சுவார்கள். ஊற்றுக்கால் அமைப்பதற்குத் தலைமடையில் ஒரு பெரிய கிணறுபோல ஆழமான குழி தோண்டியிருப்பார்கள். இக் குழியிலிருந்தே ஊற்றுப் பெருகி வாய்க்கால் வழி ஓடி நிலங்களுக்குப் பாயும். இக் குழியையும் வாய்க்காலை யும் அடிக்கடி பழுதுபார்த்து மணல் நிரம்பாமல் பாது காப்பது வழக்கம். அக் குழிக்கிணறுக்கு 'மண்டைக் கிணறு' என்ற பெயர் நடுநாட்டுத் திருவெண்ணெய் நல்லூருக்கு அருகில் வழங்குகிறது. பாலாறு முழுதும் இப்படிப்பட்ட தலைக்கிணறுகளிலிருந்தே வாய்க்கால் நீர் ஓடுகிறது. இதனைச் சேக்கிழார் தம் திருத்தொண்டர் புராணத்தில்,

"பிள்ளை தைவரப் பெருகுபால் சொரிமுலைத் தாய்போல்
மள்ளர் வேனிலின் மணல்திடர் பிசைந்துகை வருட
வெள்ள நீரிரு மருங்குகால் வழிமிதந் தேறிப்
பள்ள நீள்வயல் பருமடை யுடைப்பது பாலி."

(திருந். திருக்குறிப்பு. உஉ.)

என அழகாக உரைத்திருக்கின்றூர். கிணறுகள் உழவர் களின் உழைப்பிஞலே உண்டானவைகள். தமிழ்நாட்டில் கிணற்றுப்பாய்ச்சலே மிகுதி. இது செயற்கை நலனே.

துறைகள்

நீர்நிலைகள் எங்கு உண்டோ, அங்குத் துறைகளும் உண்டு. கடலில் துறைகள் உண்டு. உள்நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்குச் சரக்கு நாவாய்களில் ஏற்றிப் போவதற்கும் வெளிநாடுகளிலிருந்து உள்நாட்டிற்குச் சரக்கு இறங்குவதற்கும் துறைமுகம் பயன்படும். படகுகள் கண்ட இடத்தில் இறங்கமுடியாது. பாய் இறக்கி, நங்கூரம் போடக்கூடிய இடத்தில்தான் அவைகள் இறங்க முடியும். துறைகளை வேண்டியபடி கட்டட வகைகளால் காப்புச் செய்தும் இருப்பார்கள். ஆகவே, குறிப்பிட்ட இடங்களில்தான் துறைமுகங்கள் இருக்கும். துறைமுக ஊர்கள் பட்டினம் என்னப்படும். காவிரிப்பூம்பட்டினம் நாகப்பட்டினம் முதலியவைகளில் கலங்கரைவிளக்கம் முதலியவைகளை அமைத்துத் துறைமுகம் கட்டப்பட்டிருக்கும். வாணிபப்பண்டகசாலைகளும் மிகுதியாக இருக்கும். இப்படிப்பட்ட துறைகளைப் புகார்க் காண்டத்திலும், மயிலை சிவநேசர்வரலாற்றிலும் விவரித்திருப்பதைக் காணலாம். அக்காலத்தில் மரப்பாலங்களும் இக்காலத்தில் இருப்பு வாராவதிகளும் கட்டப்பெற்றிருக்கும். இவைகளிலிருந்துதான் தமிழர் வாணிபப் பெருக்கம் பண்டைக்காலத்தில் ஏற்பட்டது. போர்க்கப்பல்களும் வெளிநாடுகளுக்குச் சென்றன.

இனி, ஆறுகளிலும் துறைகள் இருந்தன. ஆழமான இடங்களில்தான் இத்துறைகள் மிகுதியும் வேண்டியிருந்தது. ஆறுகளைக் கடக்கப் படகுகள் பயன்பட்டன. தோணித்துறைகள் காவிரி, வானி, ஆமிராவதி, வையை முதலிய ஆறுகளில் மிகுதியும் இருந்தன. துறைகளிலே ஒடத்தினுல் கடப்பதற்குச் சுங்கமும் உண்டு. அதனுல் அரசாங்கமும் வருவாய் பெற்றது. தோணிகள் கடக்கும்

இடங்களுக்குக் 'கடவு' எனப் பெயர். 'கிணற்றுக் கடவு' 'தூணக் கடவு' 'கோட்டாரக் கடவு' என்ற பெயர்களைக் காண்க. மலையாளநாட்டில் 'கடவு' என்ற சொல் துறைக்கு மிகுதியாகப் பயன்படுகின்றன. உள் நாட்டில் துறைப் பெயர்கள் மிகுதி. 'ஆலந்துறை' 'மூலைத்துறை' 'கடம்பந்துறை' என்ற பெயர்களால் அதனை அறியலாம். பேரூரில் காஞ்சிநதியில் (கரிகால்) சோழன் துறை இருக்கக் காணலாம்.

### தோணிகள் முதலியன

நீர்நிலைகளில் எக்காலமும் போக்குவரவு இருந்தது. ஆறுகளைக் கடப்பதும், ஆறுகளின் வழியே மேலும் கீழும் செல்வதும் பெரிய கால்வாய் வழியே செல்வதும் வாணிபத்தின் வழிகளாம். இச் செயல்களுக்குத் தோணிகள் பயன் பட்டன. தோணித்தொழில் மிகப் பழைமையானது. 'தோணி', 'படகு', 'சிறுநாவாய்' என்பன ஒருபொருட் சொற்கள். 'வஞ்சி' என்பது இதன் மலையாளச் சொல். பரசல் வட்டவடிவாய்க் கட்டப்பட்ட தோல் மூடின பெரிய கூடை. 'நாவாய்' 'கப்பல்' 'வங்கம்' கடலில் ஏகும் பெரிய மிதப்புகள். இவைகளைச் செலுத்துதற்குப் பெரிய வலுவான துடுப்புகள் வேண்டும். அவைகளைப் பல ஆட்கள் உந்தவேண்டும். விரைவாய்ச் செல்லும் நாவாய்கள் பாய்மரத்தின் உதவியால் ஏகும். காற்றின் விசையால் அவைகள் உந்தப்பெறும். இவைகள் 'காற்றுக் கப்பல்' எனப்படும். தற்காலத்தில் நீராவிப் பொறியினுல் இவைகள் ஓடுவன.

பண்டைக் காலத்தில் படகுகளை வெகு திறமையுடன் கட்டுவித்தார்கள். நீர் ஏறுதபடியும் இலகுவில் செல்லும் படியாகவும் சரக்குகளும் மக்களும் இருக்க வசதியுள்ளவை

களாகவும் கட்டினார்கள். மேலும் அவைகளில் அழகாக முகம் வைத்தும் சித்திரித்தார்கள். கண்ணகியும் கோவலனும் வையையாற்றைக் கடந்துசெல்ல நினைக்கையில் பொதுத் துறையில் யானைமுகப்படகு, சிங்கமுகப்படகு, குதிரைமுகப் படகு முதலியவைகளைக் கண்டார்கள். அவ்வித சித்திர வேலைப்பாடுகள் அக்காலத்தில் ஆக்கப்பட்டிருந்தன. ஆனால், அவர்கள் ஏறினதோ வெறும் மிதப்பு. ஆகவே தெப்பங்களும் இருந்தன. தற்காலக் கட்டு மரங்களும் அக்காலத்தில் இருந்தன என அறியலாம்.

## கப்பல் தொழிலும் நாவிகமும்

கப்பலோட்டிய தமிழன் இன்று புதிதாய்த் தோன்றினான் என்று சொன்னால் பிசகு. அவன் இரண்டாயிரம் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தோன்றியிருக்கிறான். பல நூற்றாண்டுகளாக அத்தொழிலிலே ஈடுபட்டு வெற்றியுடன் திகழ்ந்தான். தமிழன் தன்னுரிமை பெற்றிருந்த நாளெல்லாம் கப்பல் தொழிலில் ஈடுபட்டே இருந்தான். தன்னுரிமை இழந்ததுமே அவன் கையைவிட்டு அத்தொழில் ஓடிவிட்டது. மீண்டும் உரிமை வந்துகொண்டிருக்கிறது. அவன் மறுபடியும் கப்பல் ஓட்ட நினைவுகொள்ளுகிறான். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னிருந்து தமிழன் கடலில் கப்பல் ஓட்டினான் என்றால் அது வாணிபத்திற்கு மட்டும் அல்ல; பொருள் சேர்ப்பதற்கு மட்டும் அல்ல; பிற நாடுகளைப் பிடித்து ஆளுவதற்கும், தமிழருடைய பண்பாட்டை வெளிநாடுகளுக்குள் புகுத்துவதற்கும், அங்கு மக்களைக் குடியேற்றி வாழச் செய்வதற்கும் அவன் அதனை மேற்கொண்டான். மிகப் பெரிய சேனைகளைக் கடலில் கொண்டுபோய்ப் பிறருடைய நாட்டில் படை எடுப்பதற்கு வேண்டிய அளவில் கப்பலைக் கட்டினான்.

ஆகவே, அந்நாளில் படகுத் தொழில் மிகப் பெயர் பெற்றிருந்தது என அறியவேண்டும். கிறித்து பிறப்பதற்கு 250 ஆண்டுகளுக்கு முன்னரே 'ஏலேல சிங்கன்' என்ற தமிழ்அரசன் ஈழத்தை வென்று அதற்குத் தானே அரசனானன். அவனுக்குப் பிந்திப் பல தமிழரசர்கள் ஈழத்தின்மீது படையெடுத்து வென்றிருக்கிறார்கள். அப்போது படைகளோடுவாணிபமும்வலுத்தது. பரமதத்தன்போன்ற வணிகர்கள் வாணிபம்செய்தார்கள். சோழர்கள் பிறநாட்டு வாணிபத்தில் மிகவும் ஈடுபட்டிருந்தார்கள். இதனைச் சிலப்பதிகாரமும் மணிமேகலையும் மெய்ப்பிக்கும். சுமத்திரா ஜாவா (சாவகம்) போர்னியோ செலுப்பிசு முதலிய தீவுகளுக்குச் சைவநாகரிகம் கொண்டு செலுத்தியது தமிழ் வீரர்களே. மேலும் கடாரம், காம்போஜம் ஆனும் முதலிய கிழக்குப் பிரதேசங்களுக்குச் சைவத்தைச் செலுத்தி வாணிபம் நடத்தினதும் தமிழர்களே. அகத்தியர் தமிழ முனிவர். அவர் கடலைக் குடித்து அரக்கர்களைத் தொலைத்துவிட்டனர் என்ற புராணக் கதையின் பொருள் பெரிய கப்பல்களைக் கட்டி அவைகளின்மீது போர் வீரர்களை ஏற்றிக்கொண்டுபோய் எதிர்க்கரையில் இருந்த அரக்கர்களாகிய பிற நாகரீகத்தாரை வென்று தம் அரசை நிலைநிறுத்தினதே ஆகும் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். தமிழ் இலக்கணத்தை முதல் முதலில் வகுத்த அகத்தியர் கடல் கடந்தார் என்றால் தமிழ் நாகரீகத்தை வெளிநாடுகளுக்குக் கொண்டு சென்றதையே மெய்ப்பிக்கும். மேலும் கவுணியன் என்ற இந்தியன் கடல் கடந்து வெளிப்பிரதேசங்களுக்குச் சென்று அங்கிருந்த ஆடை கட்டத் தெரியா நாககன்னிகையை மணந்து அவளுக்கு ஆடை கொடுத்ததாக ஒரு வரலாறு உண்டு. இது கடாரம் காம்போஜம் என்ற நாடுகளில் வழங்கும் ஒரு ஐதீகம்.

கௌணியன் சம்பந்தர் குலம். ஆகவே தமிழ் வெளிநாடு களுக்குச் சென்ற கதை தமிழர் வெளிநாடுகளில் குடி யேறினதை மெய்ப்பிக்கும். கிழக்கு இந்தியத் தீவுகளில் கட்டியிருக்கும் சைவக்கோயில்களைக் கண்ட மாத்திரம் அங்குத் தமிழ்ப்பண்பு எப்படிச் சென்றது என அறியலாம். விசயாலயச் சோழரில் இராசராசனும் இராசேந்திரனும் தென்கிழக்கே கடாரம் சாவகம் சீவிசயம் சென்று அந் நாடுகளைக் கைப்பற்றின செய்தி அவரது கல்வெட்டுக்க ளால் அறியக்கிடக்கிறது. இராசேந்திரன் மெய்க்கீர்த்தியில் கூறியுள்ளவை வருமாறு: கடாரம் என்பது மலேயா, சீவிசயம் என்பது சுமத்திரா, ஜாவா என்பவைகளே. இரா சேந்திரனுக்குக் 'கடாரம் கொண்டான்' என்ற பெயரும் உண்டு. அக்காலத்தில்தான் ஔவைப்பிராட்டியும் 'திரை கடலோடியும் திரவியம் தேடு' என்றார். சோழர்களுக்குப் பிறகு தமிழ் அரசு உரிமை இழந்தது. பின்னர் ஆயிரம் ஆண்டுகளாகத் தமிழர் கப்பல் தொழிலை மறந்தனர். நாவி கத் தொழில், நாவிகப்போர் இவையிரண்டும் தமிழர்க ளுடைய செயற்கை நலன்கள்.

பாலங்கள்

கடல்களைக் கடப்பதற்குக் கப்பல் வேண்டும். சிறு நீர் நிலைகளாகிய ஆறுகளைக் கடப்பதற்குத் தோணிகள் வேண் டும். ஆனால் இவைகளையே என்றைக்கும் நம்பி இருக்க முடியுமா? சிறு நீர்நிலைகளாகிய ஆறுகளுக்குப் பாலங்கள் ஏற்பட்டால் எளிதில் கடக்கலாம். ஆகவே ஆறுகளுக்குப் பாலங்கள் அல்லது வாராவதிகள் கட்டுவதற்குத் தமிழன் முயன்றான். பண்டைக்காலத்தமிழர்கள் கற்றூண்களை நட்டு அவைகளின்மீது நீளக் கற்களைப் பரப்பிப் பாலங் கள் ஆக்கினார்கள். பாலம் கட்டுவதில் இந்தத் திட்டத்தை "இந்து அரசர் திட்டம்" என்பர். வளைவு இட்டுக் கட்டுதல்

பிற்காலத்தில் பிற நாடுகளிலிருந்து வந்த முறை. ஆலயத்திலும் தமிழர் திட்டம் கற்களின்மேல் நீளப் பலகைக் கற்கள் அமைப்பதே ஆகும். வளைவுகளோ அல்லது வட்டச் சிகரமோ பிந்திக் குடியேறியவர்களுடைய முறை. அது போலவே ஆற்றிற்குப் பாலங்களும் கட்டப்பெற்றன. கங்கர் தலைநகரம் தலைக்காட்டுக்கருகில் காவிரியின்மீது கட்டியிருக்கும் பாலம் இரண்டும் இந்துச் சிற்ப முறைதான். பல நூற்றாண்டுகளாக அது பிறழாமல் நின்றுகொண்டிருந்தது. கோவை அவிநாசியில் நள்ளாற்றின்மீது கட்டப்பட்டிருக்கும் பண்டைப் பாலம் அப்படிப்பட்டதே. ஹம்பி என்னும் கிட்கிந்தையில் முன்னர் இருந்த பாலமும் அப்படிப்பட்ட பாலமே. ஆகவே, தமிழர் பாலவேலைகளிலும் சிறந்து இருந்தார்கள். பிற நாட்டார் இவ்வேலையில் வளைவுகளைப் புகுத்தினர். ஆனால் இப்போது மீண்டும் பழைய முறையே நடவடிக்கைகளுக்கு வந்துவிட்டது.

### நீர்ப்போக்கிகள்

நன்னீர் கொண்டு வரவும் அழுக்கு நீர் வெளியேகவும் நிலத்தின் கீழ் நீர்ப்போக்கிகள் வைப்பது ஒரு சிறந்த ஆக்க வேலை. இந்தத் திட்டத்தினால் நகர வாழ்வு நலமாகும். 5000 ஆண்டுகளுக்கு முந்தியே சிந்து நதிதீர நாகரிகத்தில் இந்தத் திட்டங்களைக் காண்கிறோம். அங்கே புதைந்திருந்த நகரங்களைத் தோண்டி எடுத்ததில் நகரத் தெருக்களிலே அழுக்குநீர் வெளியேக நீர்த்தாரைகளும் நன்னீர் கொண்டு வர நீர்க் கலிங்கல்களும் இருந்தன. அந்தப் பண்டைய நாகரிகத்தை ஒட்டிப் பிற்காலங்களிலும் அப்படிப்பட்ட திட்டங்களை ஆண்டு வந்திருக்கிறார்கள். பெரிய தெப்பக் குளங்களுக்கு ஆறுகளிலிருந்து நீர்கொண்டுவரவும் வெளிக்கிளப்பவும் நீர்த்தாரைகள் வைக்கப்பட்டிருந்தன. திருப்பேரூரில் மாதையன் கட்டின அழகிய குளத்திற்கு

இப்படிப்பட்ட அமைப்பு வைத்திருந்தான். திருவண்ணு மலையில் கோயிலில் விழும் மழைநீர் முழுதும் பல உட் குளங்களில் விழுந்து பிறகு வெளியே கலிங்கல் வழி யாகச் சென்று ஐயங்கார் குளத்திற்குச் செல்லும். இந்த வசதி வெளியே எவருக்கும் தெரியாது. ஆனல் உண்மை யில் உண்டு. இப்படிப்பட்ட திட்டங்கள் பல கோயில் களிலும் உண்டு.

---

## 6. கைத்தொழிலும் பிறவும்

இதுகாறும் தமிழர்கள் தம் நாட்டை வகுத்து அழகு பெறச்செய்ய ஆக்கப்பணிகள் செய்ததும், அவற்றில் வாழ்க்கை இருப்பிடங்கள் ஏற்படுத்தி ஒழுங்கான வடிவம் தந்ததும், அவ் விருப்பிடங்களைக் காப்பதற்கு அரண் களைக் கட்டியதும், தம் சமயநிலையங்களை வகுத்து அவைகளைச் செம்மைப் படுத்தியதும், இயற்கைநீர் நிலைகளை உணவிற்கும் வாணிபத்திற்கும் ஆக்கினதும் கூறினேம். இனி இறுதியாகத் தமிழன் எவ்வாறு விளைவு களைத் தன் கைத்தொழில்கொண்டு பெருக்கினான் என்று ஒரு சிறிது கூறுவோம். இதற்கு அவனுக்கு இயற்கை யில் கிடைத்துள்ளவை ஐம்பூதங்களே. அவற்றில் நிலமும் நீருமே சிறப்பானவை. தீ, வளி, வெளி இவைகளை அவன் மிகுதியாக ஆளவில்லை. அவற்றை முன்னாளிலேயே ஆண்டிருந்தால் இன்னும் பல வகைகளிலும் செழிப்புற் றிருப்பான். அவற்றை அடக்கி ஆள இப்போது முயன்று வருகிறான். அண்மையிலே அவன் சிறப்பாக ஆளத் தொடங்கியது நீலகிரியில் பாய்கரை ஆற்றை தன் வயப் படுத்தியதே. ஆற்றின்நீரை மிகவுயரமான மலைமட்டத் தில் தேக்கிவைத்து அங்கிருந்து நீரைச் சில ஆயிர அடி

வரை கீழே குழாய் வழியாக வீழச் செய்வதினால் மின்சாரஆற்றலை உண்டுபண்ணினான். அதனால் விளக்குகள், ஆலைகள் ஏனைய கைத்தொழில்கள் முதலியவைகளை உண்டுபண்ணுகிறான். இதைப்போலவே நெல்லையில் பாபநாசத்தில் ஆற்றுநீரை அடக்கி மின்சாரத்தைத் தோற்றுவிக்கிறான். இவ்வாறு மின்சார வசதி தேடி வைத்திருப்பது தற்கால விஞ்ஞான முறையைக் கற்றுச்செய்த செயல்களே ஆகும். இதனாலே நாட்டிற்கு மிகுதியும் செல்வமும் செழிப்பும் உண்டாகும். இது தற்கால அறிவின்படி இயற்கையைச் செயற்கை ஆக்கின முறை. ஆனால் பண்டைத் தமிழர் செயல் அல்ல. புது முறையில் இவ்விதச் செயல்கள் மிகுதியும் நம் நாட்டிற்கு வேண்டும்.

பஞ்சாலைகள்

நாட்டில் விளையும் விளைபொருள்களைக் கொண்டு மனிதனுக்கு உரிய தேவைகளைத் தேடிக்கொள்வதில் தமிழன் வெகு காலமாகவே உழைத்து வந்திருக்கிறான். உறைய உள்ளும் உண்ண உணவும்பெற்ற தமிழன் உடையை அணிய விரும்புவான். நாட்டில் பருத்தி விளைவு பண்டைக்காலம் முதல் உண்டு. பருத்தியை இராட்டையில் இட்டுப் பஞ்சு ஆக்கி அதனை நூற்று நூலாக்கி அதனாலே ஆடை நெய்து கட்டிவந்தான். இத்தொழில் மிகப் பண்டையத் தொழில். சங்கநூல்கள் முதற்கொண்டே இவைகள் கூறப்படுகின்றன. ஆனால், இவைகளை மிகுதிப்படுத்தும் முறைகள் இவனுக்கு இருக்கவில்லை. நாட்டிற்குப் போதுமான உடைகளை நெய்து வந்தான். அவைகளும் அருமையான வேலைப்பாடுகளைக் கொண்டவை. பஞ்சினால் மட்டுமன்றிப் பட்டினாலும் எலிமயிரினாலும் நுண்ணிய ஆடைகளை நெய்தும் பல நிறங்களைக் கொண்ட பூவேலைகளைச் செய்தும் அணிவித்தான். ஏனைய

நாட்டார்களான மேல்நாட்டு வெள்ளையர்களுக்கும் அவனே வேண்டியமட்டும் உதவினன். ஆனால் அவனுடைய கெட்டவேலை என்ன என்று சொல்வது. மேல்நாட்டாரிடம் அடிமைப்பட்டுத் தன் உரிமை இழந்து தொழிலையும் இழந்தான். பொறிகளின் உதவியினால் மேல்நாட்டார்கள் இவனை அடிமைப்படுத்திப் போட்டியிட்டார்கள். இப்போது அந்தக் கெட்டவேலை தொலைந்தது. மீண்டும் முயற்சிகளில் ஈடுபட்டுவருகிறான். பொறிகளின் மூலமாக அருமையான நூல்களை நூற்று ஆடைகளை நெய்கிறான். கோவையில் பல ஆலைகள் ஏற்பட்டிருக்கின்றன. சேலம், மதுரை முதலிய இடங்களில் பல தோன்றியிருக்கின்றன. இவைகளில் நூறாயிரக்கணக்கான ஆடைகள் உற்பத்தி ஆகி, நூறாயிரக்கணக்கான மக்களுக்கு வேலை கிடைக்கிறது. நாட்டு மக்களே எல்லா மேற்பார்வையும் செய்து வருகிறார்கள். இத்தொழிலில் கோடிக்கணக்கான செல்வமும் முதலாகச் சேர்ந்திருக்கிறது.

### ஏனைய கைத்தொழிலகங்கள்

உணவு, உடை, உறையுள் என்ற மூன்றுமே மனிதனுக்கு இன்றியமையாத தேவைகள் என்று கூறினோம். இம்மூன்றையும் பெறுவதற்கு மூலத்தொழில்கள் சில இருப்பினும் சார்புத்தொழில்கள் பலவும் இருக்கின்றன. அச்சார்புத் தொழில்களிலும் தமிழன் மிகவும் ஈடுபட்டு வருகிறான். உணவுத் தொடர்பாக, மா அரைத்தல், நெல் குத்துதல், சர்க்கரை செய்தல், தின்பண்டங்கள் ஆக்குதல் எண்ணெய் ஆட்டுதல் முதலிய பல சிறு தொழில்களும் உண்டு. அவைகளில் தமிழன் ஈடுபட்டு வருகிறான். உடைச்சார்பாக, சாயம்இடுதல், பட்டு நூற்றல், மயிர் இழைத்தல், தறி முதலியவைகளை உண்டாக்கல் அவைகளை வேண்டியவர்களுக்கு அளித்தல் முதலிய பல சார்பு

வேலைகள் இருக்கின்றன. உறையுள்கள் பொருந்தினமட்டில் மர வேலை, வீட்டுச்சாமான்வேலை, சமையல் பாத்திர வேலை, கட்டட வேலை முதலிய பல தொழில்களும் உண்டு. மக்கள் இன்ப வாழ்க்கைக்கும், அழகு செய்துகொள்ளுவ தற்கும், தூய்மை செய்துகொள்வதற்கும் நகை வேலை, சவுக்கார வேலை முதலிய சில்லறை வேலைகளும் உண்டு. இவைகளில் எல்லாம் தமிழன் இந்நாளில் மிகவும் ஆர்வத் துடன் இறங்கி இருக்கிறான்.

## அறிவுப் பணிகள்

தமிழன் அறிவுப் பணியில் முதன்முதலிலிருந்தே ஈடு பட்டு வந்திருக்கிறான். "எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்" என்று கொண்டு கணக்கையும் கலையையும் போற்றி வந்திருக்கிறான். தான் நேரில் ஆராய்ந்து நூல் எழுதியும் அவ்வாராய்ச்சிகளை ஏனையோர்க்குக் கற்பித்தலுமே அவன் செய்தபண்டைப்பணி. இதற்காக அரசவைகளில்சங்கங்கள் கூடித் தமிழ் ஆராய்ந்தபடி வேறெந்நாட்டிலும் வேறெந்த மொழியிலும் நடைபெறவில்லை. சிற்றூர்களிலும் கூடப் பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்திச் சிறுவர் சிறுமிகளுக்குக் கல்வி போதிக்கப்பட்டது. அறிவுமிக்க வகுப்பாளர்களே அன்றிக் கைத்தொழிலாளரும் வணிகரும் கூடச் சிறந்த புலமைபெற்று விளங்கினார்கள். இப்படி அறிவுக்கலை மேம்பாடு அடைந்திருந்தது. அந்த மணம் இருந்ததினால் இன்றைக்கும் தமிழ்நாட்டில் அறிவு பெருகிக்கொண்டு கல்விச்சாலைகள் வளர்ந்துகொண்டு வருகின்றன. தென் நாட்டில் இருப்பதைப்போல உயர்ந்த எண்ணிக்கையில் கல்விப்போதனை வேறெந்த மாகாணங்களிலும் இல்லை எனில் அதற்கு, தமிழர் முன்னைய பயிற்சியே காரணம் என்க. அச்சுச் சாலை, செய்தித் தாள், நூல் வெளியீடு, கலை யகங்கள், சொற்பொழிவுகள், அவைகளுக்காக மன்றங்கள்

105941

முதலிய அறிவு நிலையங்கள் தமிழ்நாட்டில் மிகுதி என்று அறியவேண்டும். இந்த வகையில் தமிழனின் செயற்கை முறைகள் மிக மேம்பாடு அடைந்திருக்கின்றன.

### முடிப்புரை

இயற்கை யமைப்புகள்மட்டுமே ஒருநாட்டின் பெருமையை உணர்த்துவதில்லை. அவ்வியற்கையமைப்புகளை அந்நாட்டு மக்கள் எந்த முறையில் எடுத்தாண்டு அவைகளினால் தமக்கும் நாட்டிற்கும் பெருமை அளிக்கிறார்களோ அந்த முறையே சிறந்தது என்று அறியவேண்டும். கடலில் காற்று ஒரேவிதமாகத்தான் அடிக்கும். ஆனால், மீகாமன் தான் எவ்விதமாய்ப் பாய்மரத்தைக் கட்டுகிறானோ, அவ்விதத்தில் அக்கப்பலைக் கிழக்கோ அல்லது மேற்கோ திருப்ப முடியும். அதுபோல நாட்டு வளமை ஒரே முறையில் இருக்கலாம். ஆனால், அந்நாட்டு மக்கள் அதனை நன்மைக்கோ அல்லது தீமைக்கோ வசப்படுத்திக் கொள்ளலாம். நன்மைபயக்கப் பாடுபட்டால் பெருமை அடைவார்கள். தீமைபயக்க விட்டுவிட்டால் இழிவு அடைவார்கள். தமிழ்நாட்டிலும் அதன் மக்கள் பல முறைகளிலும் அரும்பாடுபட்டுப் பல பெருஞ் செயல்களையும் செய்திருக்கிறார்கள். அச்செயல்களே நாட்டின் பெருமையை எடுத்துக் காட்டுகின்றன. இதுவரை அவர்கள் செய்துவிட்டுச் சென்றிருக்கும் சிறப்புகளை ஒரு சிறிது விவரித்தோம். இச்செயல்களைக் காட்டித்தான் தமிழ் அன்னையும் தான் தன் மக்களால் அடைந்த பெருமையை உலகத்திற்கு எடுத்துக்காட்டி நிற்கிறாள். இதுவே முதலில் எழுப்பின கேள்விக்கு அன்னை கூறும் விடை அல்லது ஏற்ற மறுமொழி. தமிழர் வாழ்க! தமிழ்நாடு வெல்க! தமிழ்மொழி வளர்க!

105841

44387.